புது எழுத்து

மொழிபெயர்ப்புக்கான இணைப்பிதழ்

ஆசிரியர்
மனோன்மணி



7

சித்திரை 2003

புது எழுத்து 7

மொழிபெயர்ப்புக்கான இணைப்பிதழ்

சித்திரை 2003



தனி இதழ் விலை : ரூ. 50/-
ஆண்டு சந்தா : ரூ. 200/-
ஆயுள் சந்தா : ரூ. 5000/-

விளம்பர விகிதம்
2வது அட்டை: ரூ. 3000/-
3வது அட்டை: ரூ. 2500/-
பின் அட்டை: ரூ. 4000/-
முழுபக்கம்: ரூ. 500/-
அரை பக்கம்: ரூ. 300/-

ஆசிரியர்
மனோன்மணி

உதவி ஆசிரியர்
சாந்தி சுகுணா

ஆர்ட் எடிட்டர்
ஜீ.முருகன்

அச்சுக் கோர்ப்பு
தே. சங்கர்
அமைதி


ஒளி அச்சு, வடிவமைப்பு
ஜீவா கம்ப்யூட்டர்ஸ்
செங்கம்
04188-23554

அச்சு
செந்தில் ஆப்செட்
தருமபுரி.

அனைத்து தொடர்புகளுக்கும்
மனோன்மணி
ஆசிரியர் புது எழுத்து
39/20 ஜே கே சி தெரு
காவேரிப்பட்டிணம்–635 112
கிருஷ்ணகிரி மாவட்டம்
தொலைபேசி: 04343 252665.

முன்அட்டை ஓவியம்
பெட்டி லடுக்கி

ஸாரமாகொ



ஜோஸே ஸாரமாகொ (Jose Saramago) 1922-ல் போர்த்துகீசிய நாட்டில் பிறந்தவர். 1979-லிருந்து முழுநேர எழுத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார். நாடகங்கள், கவிதை, சிறுகதைகள், கட்டுரைகள், மற்றும் பல நாவல்கள் என்று அவருடைய படைப்புகள் விரிகின்றன. இவை இருபதுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, அவரை போர்த்துகீசிய நாட்டின் அதிகமான தாக்கத்தை உண்டாக்கிய எழுத்தாளராக ஆக்கியிருக்கின்றன. 1988-ல் வெளியான அவரது **'பல்தஸாரும் ப்ளிமுண்டாவும்'** (Baltasar & Blimuda) ஆங்கிலம் பேசும் மக்களின் கவனத்துக்கு அவரை முதலில் கொண்டுவந்தது. ஹார்வில் வெளியிட்ட அவருடைய அடுத்த நாவலான **'ரிகார்டோ ரீஸ் மறைந்த ஆண்டு'** (The Year of the Death of Ricardo Reis) அவருக்கு **'இண்டிபெண்டெண்ட்'** (Independent)டின் அயல்மொழிப் புனைவு விருதைப் பெற்றுத் தந்தது. **'யேசு கிருஸ்துவின் சுவிசேஷம்'**(The Gospel according to Jesus Christ) **'லிஸ்பன் முற்றுகையின் வரலாறு'**, (The History of the Seige of Lisbon) **'அந்தகம்'**,(Blindness) போன்ற அவரது நாவல்களும், மிகச் சமீபத்திய **'எல்லாப் பெயர்களும்'**, (All the Names) அவருக்கு உலகம் தழுவிய அளவில் புதிய வாசகர்களைப் பெற்றுத் தந்துள்ளன. 1998-ல் அவருக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

(குறுநாவல்)

ஜோஸே ஸாரமாகோ

அறியப்படாத தீவின் கதை

ஆங்கிலம் வழி தமிழில்

ஆனந்த்



தனக்கு ஒரு படகு வேண்டும் என்று கேட்டுக் கொண்டு ஒரு மனிதன் அரசனின் கதவைத் தட்டச் சென்றான். அரசனின் வீட்டில் பல கதவுகள் இருந்தன. ஆனால் இவன் போனது விண்ணப்பங்களுக்கான கதவு. அரசன் தன் நேரத்தின் பெரும் பகுதியை சலுகைகளுக்கான கதவருகிலேயே கழிப்பதால் (அரசனுக்குச் சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன, புரிகிறதா), எப்போதாவது விண்ணப்பங்களுக்கான கதவு தட்டப்படும் சத்தம் அவனுக்குக் கேட்கும்போது, அது தன் காதில் விழாததுபோல் பாசாங்கு செய்து கொண்டு, கதவின் வெண்கல ஒலிப்பான் தொடர்ச்சியாக அடிக்கப்படும் ஓசை வெறுமே காதைச் செவிடாக்கும்படியாக மட்டுமில்லாமல், அவதூற்றைக் கிளப்பிவிடும்படியான அளவுக்கு அதிகமாகி, சுற்றுப்புறத்தின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் நிலைக்குப் போகும்போதுதான் (மக்கள் முணுமுணுக்கத் தொடங்கி. விடுவார்கள் இல்லையா, கதவைத் தட்டியும்

பதிலளிக்காத இவன் என்ன மாதிரியான அரசன் என்று), யாசிப்பவனை அமைதிப்படுத்த வேறு வழியில்லாத காரணத்தால், அவன் என்ன கேட்கிறான் என்று அறிந்து கொண்டு வரும்படி அவன் தன் முதல் செயலருக்கு ஆணையிட, முதல் செயலர் இரண்டவாது செயலரை அழைக்க, அவர் மூன்றாவது செயலரிடம் சொல்ல, அவர் முதல் உதவியாளருக்குச் சொல்லி, அவர் இரண்டாவது உதவியாளரிடம் தெரிவிக்க, என்று இவ்வாறு ஒவ்வொரு படியாகக் கீழே போய் சுத்தம் செய்யும் பெண்ணிடம் தகவல் போய்ச் சேர, அவளுக்குக் கீழே வேறு யாரும் இல்லாத காரணத்தால் அவள் கதவைப் பாதி திறந்து, கதவிடுக்கின் வழியாக, என்ன வேண்டும் என்று கேட்டாள். யாசிப்பவன் தான் வந்த காரியத்தைச் சொல்ல, அதாவது, தான் கேட்க வந்தது இன்னதென்று அவளிடம் கேட்டு, தன் வேண்டுகோள் தான் வந்தடைந்த பாதையில் மறுபடி பின்னோக்கிச் சென்று ஒவ்வொரு ஆளாகக் கடந்து அரசனிடம் சென்றடையும் வரையில் கதவருகில் காத்திருப்பான். அரசன் வழக்கப்படி தனக்கு அளிக்கப்படும் சலுகைகளில் ஈடுபட்டு இருக்கும் காரணத்தால், பதிலளிக்க நீண்ட நேரம் எடுத்துக் கொண்டு, தன் மக்களின் சந்தோஷம், அவர்களின் நலம், இவற்றின் மேல் உள்ள அக்கறையை வைத்துப் பார்க்கும்போது இது ஒன்றும் அற்பமானதல்ல என்பதால், கடைசியில் முதல் செயலரிடமிருந்து அதிகார பூர்வமான அபிப்பிராயத்தை எழுத்து மூலமாகக் கேட்கத் தீர்மானித்ததும், வழக்கப்படி முதல் செயலர் இரண்டாவது செயலரிடம் இந்த ஆணையை அனுப்ப, அவர் மூன்றாவது செயலரிடமும், அதன் பிறகு படிபடியாகக் கீழே போய் சுத்தம் செய்யும் பெண்ணிடம் அது போய்ச் சேர, அவள் அந்த நேரத்தில் என்ன மாதிரியான மனோநிலையில் இருக்கிறாள் என்பதைப் பொறுத்து, ஆமாம், அல்லது இல்லை என்ற பதிலைக் கொடுப்பாள். எனினும், படகு வேண்டி வந்த மனிதனின் விஷயத்தில் நடந்தது இப்படியல்ல. சுத்தம் செய்யும் பெண் உனக்கு என்ன வேண்டும் என்று கதவிடுக்கின் வழியாகக் கேட்க, அந்த மனிதன் மற்றவர்களைப் போல்லாமல், ஒரு பட்டமோ, பதக்கமோ, அல்லது வெறும் பணமோ கேட்காமல், தான் அரசனிடம் பேச வேண்டும் என்று சொன்னான், அரசன் வர முடியாது என்பது உனக்கு நன்றாகவே தெரியும், சலுகைகளுக்கான கதவருகில் அவன் வேலையில் ஆழ்ந்திருக்கிறான் என்று அந்தப் பெண் சொல்ல, சரி, நீ போய் அவனிடம் அவன் நேரடியாக இங்கு வரும் வரையில் நான் இங்குகிருந்து போகப் போவதில்லை என்று சொல், என்று அந்த மனிதன் சொல்லிவிட்டு வாசலுக்குக் குறுக்கே குளிருக்கு அடக்கமாக ஒரு போர்வையைப் போர்த்திக் கொண்டு கால் நீட்டிப் படுத்துக் கொண்டு விட்டான். உள்ளேயோ வெளியேயோ போக விரும்பும் யாராக இருந்தாலும் அவர்கள் முதலில் அவனைத் தாண்டிக் கொண்டுதான் போக வேண்டும். ஆனால் இது ஒரு மிகப் பெரிய பிரச்சனை, ஏனெனில் பல்வேறு கதவுகளின் தொடர்பான அரசு குறிப்பாணை வழிமுறைகளின்படி ஒரு நேரத்தில் ஒரு விண்ணப்பதாரர் மட்டுமே கவனிக்கப்பட வேண்டும், அதாவது ஒருவர் அங்கு பதிலுக்காகக் காத்திருக்கும் நேரத்தில் வேறு யாரும் தன் தேவைகளையோ தெரிவிக்க அணுக முடியாது. முதலில் பார்க்கும்போது விதிமுறைகளின் இந்த ஷரத்தின்படி, சில பேர் மட்டுமே தம் துன்பக் கதைகளைச் சொல்லித் தொந்தரவு செய்ய முடிகிற காரணத்தால், நீண்ட நேரம் தொந்தரவு

எதுமின்றி, சலுகைகளைப் பெற்றுக் கொண்டு, அடுக்கிச் சேர்த்துக் கொண்டு, அனுபவித்துக் கொண்டு, பயன் பெறுவது அரசன்தான் என்று தோன்றக் கூடும். எனினும், இரண்டாவது பார்வையில், ஒரு பதில் கிடைப்பதற்கு அநியாயமான அளவுக்கு மிக நீண்ட நேரம் ஆகிறது என்பதை மக்கள் உணர்ந்து கொள்ளும்போது, விளையக்கூடிய வெளிப்படையான எதிர்ப்பு, சமூகக் கொந்தளிப்பை மிக ஆபத்தான அளவுக்கு அதிகப்படுத்தி, அதன் விளைவாக அரசனுக்குச் சலுகைகள் கிடைத்துவருவதில் உடனடியான, எதிர்மறையான பாதிப்பை ஏற்படுத்திவிடக் கூடிய காரணத்தால் உண்மையில் இது அரசனுக்குத்தான் இழப்பு என்பது தெரியவரும். இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில், அதிருப்திக்கும் இடையில் அலைக்கழிந்த அரசன், மிகவும் அகௌரவமான முறையில் மூன்று கேள்விகளை ஒன்றன் பின் ஒன்றாகக் கேட்டான், உனக்கு என்ன வேண்டும், உனக்கு என்ன வேண்டும் என்பதை ஏன் நீ நேரடியாகத் தெரிவிக்கவில்லை, எனக்கு வேறு வேலை எதுவுமில்லை என்று நினைத்துக் கொண்டாயா, ஆனால் அந்த மனிதன் முதல் கேள்விக்கு மட்டும்தான் பதிலளித்தான், எனக்கு ஒரு படகு தாருங்கள், என்றான். அரசன் மிகவும் திடுக்கிட்டுப் போனதைக் கவனித்த சுத்தம் செய்யும் பெண், தையல் வேலை ஏதாவது இருக்கும்போது தான் அமர்ந்து வேலை செய்யும் வைக்கோல் அடைத்த நாற்காலியை அவசரமாக அவனுக்குக் கொடுத்தாள், ஏனெனில், சுத்தம் செய்யும் வேலையோடு, அரண்மனையில் சிறிய தையல் வேலைகளுக்கும் அவள்தான் பொறுப்பு, உதாரணமாக, வேலைக்காரச் சிறுவர்களின் காலுறைகளுக்கு ஒட்டுப் போடுவது போல. அந்த நாற்காலி தன் அரியணையைவிட மிகவும் தாழ்வாக இருந்ததால், சற்று சங்கடத்துடன், தன் கால்களை வைத்துக் கொள்ளச் சிறந்த வழி எது என்று கண்டுபிடிக்க அரசன் முயன்று, முதலில் கால்களை உள்ளே இழுத்துக் கொண்டு, பிறகு அவற்றை இருபுறமும் பரப்பவிட, அந்த மனிதன் அடுத்த கேள்விக்காகப் பொறுமையுடன் காத்திருந்தான், உனக்கு இந்தப் படகு எதற்காக வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளலாமா, என்பதுதான் அரசன் கடைசியில் ஒரு வழியாக, சுத்தம் செய்யும் பெண்ணின் நாற்காலியில் தன்னை ஓரளவுக்கு வசதியாக இருத்திக்கொண்ட பிறகு கேட்ட கேள்வி, அறியப்படாத தீவைத் தேடிச் செல்வதற்கு, என்று அந்த மனிதன் பதிலளிந்தான், என்ன தீவைத் தேடிச் செல்வதற்கு, என்று அரசன் கேட்டான், தன் சிரிப்பை அடக்கிக் கொண்டு, தனக்கு முன்னால் நிற்பது கடற்பயணத்தின்பால் ஆவேசம் கொண்ட பைத்தியக்காரர்களில் ஒருவன் என்பதைப்போல், எதற்கும் அவர்களின் போக்கில் குறுக்கிடாமல் இருப்பதே நல்லது, குறைந்த பட்சம் நேரடியாக, அறியப்படாத தீவுகள் இன்னும் ஏதுமில்லை, யார் உங்களுக்குச் சொன்னது ஐயா, அறியப்படாத தீவுகள் இல்லையென்று, அவை அனைத்தும் வரைபடங்களில் வந்துவிட்டன, அறியப்பட்ட தீவுகள் மட்டுமே வரைபடங்களில் இருக்கின்றன, நீ தேடிச் செல்லும் அந்த அறியப் படாத தீவுதான் என்ன, நான் உங்களுக்கு அதைச் சொல்லிவிட முடியுமானால் அது அறியப்பட்டதாக இருக்காது, யாராவது அதைப் பற்றிப் பேசுவதை நீ கேட்டாயா என்று அரசன் இப்போது சற்றுத் தீவிரமாகக் கேட்க, இல்லை, யாருமில்லை, அப்படியென்றால் அது இருக்கிறது என்று நீ ஏன் வலியுறுத்துகிறாய், ஏனெனில் ஒரு அறியப்படா தீவு

இல்லாமல் இருப்பது சாத்தியமில்லை, அதற்கு நீ ஒரு படகு கேட்க என்னிடம் வந்தாய், ஆமாம், நான் உங்களிடம் ஒரு படகு கேட்க வேண்டி இங்கு வந்தேன், நீ யார் உனக்கு நான் ஒரு படகு தருவதற்கு, நீங்கள் யார் அதைத் தர மறுப்பதற்கு, நான் இந்த நாட்டின் அரசன், இந்த நாட்டில் இருக்கும் படகுகள் அனைத்தும் எனக்குச் சொந்தமானது, அவை உங்களுக்குச் சொந்தம் என்பதைவிட, நீங்கள் அவைகளுக்குச் சொந்தம், என்ன சொல்கிறாய் என்று கலங்கிப் போய்க் கேட்டான், அதாவது, அவை இல்லாமல் நீங்கள் ஒன்றுமில்லை, ஆனால் நீங்கள் இல்லாவிட்டாலும் அவை கடலில் பயணம் செய்ய முடியும், என் ஆணையின் கீழ், நான் அனுப்பும் கலம் செலுத்துபவனுடன், என் மாலுமிகளுடன், ஆனால் நான் உங்களிடம் கலம் செலுத்துபவனையோ, மாலுமிகளையோ கேட்கவில்லையே, நான் கேட்பதெல்லாம் ஒரு படகு மட்டும்தானே, அது சரி, அந்த அறியப்படாத தீவு, அதை நீ கண்டுபிடித்தால் அது என்னுடையதாக இருக்குமா, ஐயா, நீங்கள் விரும்புவதெல்லாம் ஏற்கனவே அறியப்பட்ட தீவுகளை மட்டுமே, அறியப்படாதவை கூட, அவை அறியப்பட்டதும், ஒருவேளை இந்தத் தீவு தன்னை அறிந்து கொள்ள விடாதோ என்னவோ, அப்படியென்றால் நான் உனக்குப் படகு தரமாட்டேன், இல்லை, நீங்கள் தருவீர்கள். அமைதியாகவும் நம்பிக்கையுடனும் சொல்லப்பட்ட இந்தச் சொற்களைக் கேட்ட விண்ணப்பங்களின் கதவருகே காத்திருக்கும் மற்ற யாசகர்கள், அவர்களின் பொறுமையின்மை இந்த உரையாடல் தொடங்கியதிலிருந்து நீண்ட நேரமாக அதிகரித்துக் கொண்டு வருகின்ற காரணத்தால், பெரிதாக ஒற்றுமை



யுணர்வினால் உந்தப்பட்டு இல்லாமல், அவனை அங்கிருந்து விரைவில் விலக்கி விடும் நோக்கத்தினால், அவர் சார்பாக இதில் தலையிட முடிவு செய்து, கூச்சலிடத் தொடங்கினார், அவனுக்குப் படகு கொடு, அவனுக்குப் படகு கொடு என்று. அரசன் அரண்மனைக் காவலர்களை அழைத்துப் பொது ஒழுங்கை மறுபடி நிலைநிறுத்திக் கட்டுப்பாட்டைக் கொண்டுவருமாறு சுத்தம் செய்யும் பெண்ணிடம் ஆணையிடுவதற்காக வாயைத் திறக்கப் போகும் கணத்தில் எதிரில் இருந்த வீடுகளின் சாளரங்களின் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்த மக்கள், உற்சாகத்துடன் அந்தக் கோஷ்டிகானத்தில் கலந்து கொண்டு, மற்றவர்களுடன் சேர்ந்து, அவனுக்குப் படகு கொடு, அவனுக்குப் படகு கொடு என்று கூச்சலிடத் தொடங்கினர். இம்மாதிரி பொதுமக்களின் ஒருமித்த கருத்தின் சந்தேகத்துக்கிடமில்லாத வெளிப்பாட்டை எதிர்கொண்டு, மறுபுறம் சலுகைகளுக்கான கதவருகில் இதன் இடையில் தான் என்ன இழந்து கொண்டிருக்கிறோம் என்பது பற்றிய கவலையுடன், அரசன் தன் வலது கையை உயர்த்தி, அமைதியை நிலைநாட்டி, நான் உனக்கு ஒரு படகைக் கொடுக்கப்

போகிறேன், ஆனால் உனக்குத் தேவையான பணியாட்களை நீதான் கண்டுபிடித்துக் கொள்ள வேண்டும், என்னுடைய மாலுமிகள் எல்லாம் அறியப்பட்ட தீவுகளுக்காக எனக்குத் தேவைப்படுகிறார்கள், என்று சொன்னான். அந்த மனிதன் நன்றி தெரிவித்தது அங்கு கூட்டத்திலிருந்து எழுந்த ஆரவாரத்தில் மூழ்கிப் போக, அவனுடைய உதடுகளின் அசைவை வைத்துப் பார்க்கும்போது, மிக்க நன்றி, என் பிரபுவே, என்பதற்குப் பதிலாக, கவலப்படாதீர்கள், நான் சமாளித்துக் கொள்வேன், என்பதாகக்கூட இருக்கலாம், ஆனால் அடுத்ததாக அரசன் சொன்னது அனைவருக்கும் தெளிவாகக் கேட்டது, நீ படகுத் துறைக்குச் சென்று, துறைமுகத் தலைவனிடம் பேச வேண்டும் என்று கேட்டு, நான் அனுப்பியதாகச் சொல்லி அவன் உனக்கு ஒரு படகு தரவேண்டும் என்று சொல், என் அடையாள அட்டையை உன்னுடன் எடுத்துச் செல். படகு கொடுக்கப் படவேண்டிய மனிதன் அந்த அடையாள அட்டையைப் பார்த்தபோது, அதில் அரசனுடைய பெயருக்குக் கீழ் 'அரசன்' என்ற சொல் இருந்தது, அரசன் சுத்தம் செய்யும் பெண்ணின் தோள் மீது அந்த அட்டையை வைத்து எழுதியிருந்தது இந்த சொற்களைத்தான், இந்த அட்டையை எடுத்து வருபவனுக்கு ஒரு படகைக் கொடுக்கவும், அது பெரிய படகாக இருக்க வேண்டிய அவசியமில்லை, ஆனால் அது பாதுகாப்பானதாக, கடற்பயணத்திற்கு உகந்ததாக இருக்க வேண்டும், அவனுக்குத் தவறாக ஏதாகிலும் நேர்ந்து அது என் மனசாட்சியை உறுத்திக் கொண்டிருக்க வேண்டாம். இந்த முறை அந்த மனிதன் நிமிர்ந்த போது, அது நன்றி சொல்வதற்காக இருக்ககூடும் என்று கற்பனை செய்து கொள்ளலாம், அரசன் அங்கிருந்து போய்விட்டிருந்தான், அங்கு அந்த சுத்தம் செய்யும் பெண் மட்டும் அவனை சிந்தனை தோய்ந்த முகத்துடன் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தாள், அந்த மனிதன் கதவை விட்டு விலகி நகர, அது மற்ற யாசகர்கள் கடைசியில் கதவை அணுகுவதற்கான சமிக்ஞையாதலால், ஒவ்வொருவரும் கதவை முதலில் அடைந்துவிட முயன்று, அங்கு எற்பட்ட குழப்பத்தை விவரித்துச் சொல்வதில் எந்தப் பயனும் இல்லை, ஆனால் அந்தோ, கதவு மறுபடியும் மூடப்பட்டுவிட்டது அவர்கள் சுத்தம் செய்யும் பெண்ணை அழைப்பதற்காக வெண்கலக் கதவொலிப்பானைப் பலத்து அடிக்க, சுத்தம் செய்யும் பெண் அங்கு இல்லை, அவள் ஏற்கனவே திரும்பி, வாளி, துடைப்பத்துடன் வேறொரு கதவு வழியாகப் போய் விட்டிருந்தாள், அது முடிவுகளுக்கான கதவு, அதிகம் உபயோகப்படுத்தப் படாத கதவு, ஆனால் உபயோகப்படுத்தப்படும்போது, முடிவானது. சுத்தம் செய்யும் பெண்ணின் முகத்தில் சிந்தனை தோய்ந்திருந்த பார்வையை இப்போது புரிந்து கொள்ள முடியும், ஏனெனில் சரியாக இந்தக் கணத்தில்தான் படகைப் பெற்றுக் கொள்வதற்காகத் துறைமுகத்துக்குக் கிளம்பிய மனிதனைப் பின் தொடர்ந்து செல்வதான முடிவை அவள் எடுத்திருந்தாள். அரண்மனைகளைத் தேய்த்து சுத்தம் செய்யும் இந்த வாழ்க்கை போதும் என்றும், தொழிலை மாற்றிக் கொள்வதற்கான தருணம் இதுதான் என்றும், அதுவும் படகுகளைத் தேய்த்து சுத்தம் செய்வதுதான் தன்னுடைய உண்மையான வேலை என்றும், குறைந்த பட்சம் கடலில் தண்ணீருக்குப் பஞ்சம் இருக்காது என்றும் அவள் முடிவு செய்திருந்தாள். தான் இன்னும் வேலையாட்களை சேர்க்கத் தொடங்கவில்லையாயினும், படகின் மேல்தளத்தைத்

துடைப்பது போன்ற சுத்தம் செய்யும் வேலைகளுக்கான பொறுப்பை எடுத்துக் கொள்ளப் போகும் நபர் ஏற்கனவே தன்னைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருப்பதைப் பற்றிய பிரக்ஞை ஏதுமில்லாமல் இருந்தான், சொல்லப் போனால், உண்மையில் இப்படித்தான் விதி நம்மை நடத்துகிறது, எல்லாம் முடிந்து போய்விட்டது, அவ்வளவுதான், யார் கவலைப்படுவது இதற்குமேல், என்று நாம் நமக்குள் முணுமுணுத்துக் கொண்டிருக்கும்போதே, நமக்குப் பின்னால் தொடர்ந்து வந்து, நம் தோளைத் தொடுவதற்காகத் தன் கரத்தை நீட்டியிருக்கும்.

வெகுதூரம் நடந்த பிறகு, துறைமுகத்தை அடைந்து, துறைமுகத் தலைவனைப் பற்றி விசாரித்து, அவனுக்காகக் காத்துக் கொண்டிருக்கும்போது, அங்கு கட்டி வைக்கப்பட்டிருக்கும் படகுகளில் எது தன்னுடையது என்று வியந்து கொண்டிருந்தான், அது பெரியதாக இருக்காது என்பது அவனுக்குத் தெரியும், அரசனுடைய அடையாள அட்டை அந்த விஷயத்தில் மிகவும் தெளிவாக இருந்தது, நீராவிக் கப்பல்கள், சரக்குக் கப்பல்கள், போர்க் கப்பல்கள், எல்லாம் விலக்கப் பட்டுவிட்டன, அதே சமயம் கடலின் கடுமையையோ, காற்றின் தாக்குதல்களையோ, எதிர்த்து நிற்க முடியாத அளவுக்குச் சிறியதாக இருக்கவும் முடியாது, அந்த விஷயத்திலும் அரசன் திட்டவட்டமாக இருந்திருக்கிறான், அது பாதுகாப்பான, கடற்பயணத்திற்கு உகந்ததான ஒன்றாக இருக்க வேண்டும், தோணிகள், ஓடங்கள், இவையும் உள்ளர்த்தத்தில் விலக்கப்பட்டு விட்டன, இவை ஒவ்வொன்றும் தம் வகையில் முற்றிலும் பாதுகாப்பானதாகவும் கடற்பயணத்துக்கு உகந்ததாகவும் இருந்தாலும், அவை அறியப்படாத தீவுகள் இருக்கக் கூடிய சமுத்திரங்களை உழுது செல்வதற்காக ஆனவை அல்ல. சற்றுத் தொலைவில், சில பீப்பாய்களுக்குப் பின்னால் மறைந்து கொண்டு, அங்கு கட்டி வைக்கப்பட்டிருந்த படகுகளின் மீது தன் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்த சுத்தம் செய்யும் பெண், அந்தப் படகு எனக்குப் பிடிக்கிறது, என்று எண்ணினாள், தன்னுடைய அபிப்பிராயம் கணக்கில் கொள்ளப்படுவதைப் பற்றிய அக்கறை இன்றி, இன்னும் அவள் வேலைக்கு அமர்த்தப்படக் கூட இல்லை, ஆனால் முதலில் துறைமுகத் தலைவன் என்ன சொல்கிறார் என்பதைப் பார்ப்போம். துறைமுகத் தலைவன் வந்தான், அரசனின் அடையாள அட்டையைப் பார்த்தான், பிறகு அரசன் கேட்கத் தவறிய கேள்வியைக் கேட்டான், உனக்குப் படகைச் செலுத்தத் தெரியுமா, உன்னிடம் அதற்கான அத்தாட்சி இருக்கிறதா, என்றதற்கு அந்த மனிதன் சொன்னான், நான் கடலில் கற்றுக் கொள்வேன். நான் அதை சிபாரிசு செய்ய மாட்டேன், நானே ஒரு கப்பல் தலைவன், நான் நிச்சயமாக ஏதாவது ஒரு பழைய படகை எடுத்துக் கொண்டு துணிந்து இறங்கக் கூடிய படகு ஒன்றைத் தாருங்கள், அல்ல, அது போன்ற ஒன்றல்ல, நான் மதிக்கக்கூடிய, என்னை மதிக்கக்கூடிய படகு ஒன்றைத் தாருங்கள், இது மாலுமி பேசக்கூடிய பேச்சு; ஆனாலும் நீ ஒரு மாலுமி அல்ல, நான் ஒரு மாலுமியைப் போலப் பேசுகிறேன் என்றால் நான் ஒரு மாலுமியாகத்தான் இருக்க வேண்டும். துறைமுகத் தலைவன் மறுபடி அரசனின் அடையாள அட்டையைப் பார்த்துவிட்டு, உனக்கு ஏன் படகு தேவைப்படுகிறது என்பதைச் சொல்ல முடியுமா, அறியப்படாத

தீவைத் தேடிச் செல்வதற்காக, அறியப்படாத தீவுகள் எதுவும் இன்னமும் விடுபட்டுப் போகவில்லை, அரசன் என்னிடம் இதையேதான் சொன்னான், தீவுகளைப் பற்றி அவனுக்குத் தெரிந்தது அனைத்தையும் அவன் என்னிடமிருந்துதான் கற்றுக் கொண்டான், கடல் சார்ந்த மனிதராயிருந்தும், இன்னமும் அறியப்படாத தீவுகள் ஏதுமில்லை என்று நீங்கள் சொல்வது மிகவும் விந்தையாக இருக்கிறது, நான் நிலம் சார்ந்த மனிதன், இருந்தும், அறியப்பட்ட தீவுகள் கூட நாம் காலைப் பதிக்கும் வரை அறியப்படாதவையாகவே இருக்கின்றன என்று நான் அறிவேன், ஆனால், நான் உன்னைச் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறேன் என்றால், இன்னும் யாருடைய காலடியும் படாத ஒரு தீவைத் தேடித்தான் நீ செல்கிறாய் என்று நம்புகிறேன், ஆமாம், அங்கே போய்ச் சேர்ந்ததும் நான் அதைத் தெரிந்து கொள்வேன், நீ அங்கே போய்ச் சேர்ந்தால், போகும் வழியில் படகுகள் சேதமடைவதும் உண்டு, ஆனால் எனக்கு அவ்வாறு நேர்ந்தால் நீங்கள் துறைமுக ஆவணங்களில் நான் இன்ன இடத்தை அடைந்தேன் என்று குறிப்பிட வேண்டும், அதாவது எப்போதும் ஏதாவது ஒரு இடத்தை அடைவதாக நீ சொல்கிறாய், அது உங்களுக்குத் தெரியாவிட்டால் நீங்கள் என்னவாக இருக்கிறீர்களோ அதுவாக இருக்க மாட்டீர்கள். உனக்குத் தேவையான படகை நான் தரப் போகிறேன், எது, அது மிகவும் அனுபவம் வாய்ந்த படகு, அறியப்படாத தீவுகளை அனைவரும் தேடிச் சென்று கொண்டிருந்த காலங்க்ளிலிருந்து வருவது, எது அந்தப் படகு, ஒரு வேளை அது சிலவற்றைக் கண்டுபிடிக்கக்கூடச் செய்திருக்கலாம், எது அது, இதோ அதுதான். துறைமுகத் தலைவன் சுட்டிக் காட்டிய திசையில் பார்த்த சுத்தம் செய்யும் பெண், தான் மறைந்து கொண்டிருந்த பீப்பாய்களின் பின்னாலிருந்து, அது என் படகு, அது என் படகு, என்று கூச்சலிட்டுக் கொண்டே வெளியே வந்தாள், அவளுடைய அசாதாரணமான, முற்றிலும் நியாயப்படுத்த இயலாத, சொந்தம் கொண்டாடும் வகையான உரிமைக் குரலை மன்னித்துவிட வேண்டும், ஏனெனில் அந்தப் படகு அவளுக்கும் பிடித்துப் போயிருந்த ஒன்றாக இருந்து விட்டது, பார்ப்பதற்கு சிறிய பாய்மரக் கப்பலைப் போல இருக்கிறது, என்று சொன்னான் அந்த மனிதன், ஆமாம், ஏறக்குறைய அப்படித்தான் என்று ஒப்புக் கொண்டான் துறைமுகத் தலைவன், இது தன் வாழ்வை சிறிய பாய்மரக் கப்பலாகத்தான் தொடங்கியது, அதன் பிறகு பல்வேறு முறை செப்பனிடப்பட்டு, திருத்தியமைக்கப்பட்டு சிறிது மாறியிருக்கிறது, இருந்தாலும் இது இன்னமும் சிறிய பாய்மரக் கப்பல்தான், ஆமாம், இது இன்னும் தன் சுயத்தன்மையைத் தக்க வைத்துக் கொண்டுதான் இருக்கிறது, அதற்குப் பாய்மரமும் பாய்களும் இருக்கின்றன, அறியப்படாத தீவுகள்ளைத் தேடிச் செல்லும் உனக்கு அதுதான் அவசியமாக இருக்கும். அதற்கு மேல் சுத்தம் செய்யும் பெண்ணால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை, என்னைப் பொறுத்த வரையில் அதுதான் என்னுடைய படகு, அது சரி, நீ யார், என்று கேட்டான் அந்த மனிதன், என்னை நினைவில்லையா, இல்லை, எனக்குத் தெரியவில்லை, நான்தான் சுத்தம் செய்யும் பெண், எதைச் சுத்தம் செய்கிறாய், அரசனின் அரண்மனையை, விண்ணப்பங்களுக்கான கதவைத் திறப்பவள், அவளேதான், நீ ஏன் மறுபடி அரசனின் அரண்மனைக்குச் சென்று சுத்தம் செய்யவும், கதவுகளைத் திறக்கவும் போகவில்லை, ஏனென்றால் திறக்கப்பட

வேண்டும் என்று நான் விரும்பிய கதவுகள் ஏற்கனவே திறந்தாகி விட்டன, மேலும் நான் இப்போதிலிருந்து படகுகளைத்தான் சுத்தம் செய்வேன், அப்படியானால் நீ என்னுடன் சேர்ந்து அறியப்படாத தீவைத் தேடப் போகிறாய், நான் முடிவுகளின் கதவு வழியாகத்தான் அரண்மனையை விட்டு வெளியேறினேன், அப்படியென்றால் போய் அந்த சிறிய பாய்ரக் கப்பலைப் பார், இவ்வளவு காலத்துக்குப் பிறகு அதற்கு நன்றாகச் சுத்தம் செய்யப்பட வேண்டிய அவசியம் இருக்கும், ஆனால் கடற்பறவைகளைக் குறித்து மட்டும் விழிப்புடன் இரு, அவை நம்பிக்கைக்கு உகந்தவை அல்ல, என்னுடன் கூட வந்து உன்னுடைய படகு உள்ளே எப்படி இருக்கிறது என்று பார்க்க உனக்கு விருப்பமில்லையா, அது உன் படகு என்றல்வா நீ சொன்னாய், மன்னித்துக் கொள், அது நான் மிகவும் விரும்புவதாக இருக்கிறது என்பதால்தான் அப்படிச் சொன்னேன், விரும்புவதுதான் அனேகமாக சொந்தம் கொண்டாடுவதின் சிறந்த முறை, சொந்தம் கொண்டாடுவதுதான் விரும்புவதின் மிக மோசமான வழி. துறைமுகத் தலைவன் அவர்களின் சம்பாஷணையில் இடைமறித்தான், கப்பலின் சொந்தக்காரரிடம் சாவிகளை நான் ஒப்படைக்க வேண்டும், உங்கள் இருவரில் யார் அது, அது உன்னைப் பொறுத்த விஷயம், எதுவாகிலும் எனக்கு ஒன்றுமில்லை, படகுகளுக்கு சாவி உண்டா, என்று அந்த மனிதன் கேட்டான், உள்ளே நுழைவதற்கு அல்ல, ஆனாலும் சாமான்களுக்கான அலமாரிகள் உள்ளன, பெட்டகங்கள் உள்ளன, இன்னும் தினசரிக் குறிப்புப் புத்தகத்துடன் தலைவனின் மேஜை இருக்கிறது, நான் எல்லாவற்றையும் அவள் முடிவுக்கு விட்டுவிடுகிறேன், நான் போய் வேலையாட்களைத் தேடப் போகிறேன், என்று சொல்லிவிட்டு அந்த மனிதன் போய்விட்டான்.



சுத்தம் செய்யும் பெண் சாவிகளை வாங்கிக் கொள்ளத் துறைமுகத் தலைவனின் அலுவகத்திற்குச் சென்றாள், பிறகு அவள் படகில் ஏறினாள், அங்கு இரண்டு விஷயங்கள் அவளுக்கு உபயோகமாக இருந்தன, அரண்மனைத் துடைபபமும், கடற்பறவைகள் பற்றிய எச்சரிக்கையும், அவள் துறைமுக மேடையையும் படகையும் இணைக்கும் மரப்பலகையின் மேல் பாதி தூரம்தான் சென்றிருப்பாள், அதற்குள் அந்த ஈனப் பிறவிகள் ஆக்ரோஷமாக அலறிக்கொண்டு, அலகுகளைத் திறந்து வைக்குக் கொண்டு, அவளை அங்கேயே தின்று தீர்த்து விடுபவைகளைப் போல் அவள் மீது பாய்ந்தன. தாம் யாரிடம் விவகாரம் வைத்துக் கொள்கிறோம் என்று அவை அறியவில்லை. அந்த சுத்தம் செய்யும் பெண் வாளியைக் கீழே வைத்துவிட்டு, சாவிகளைத் தன் மார்பின் இடைவெளியில் போட்டுக் கொண்டுவிட்டு, மரப்பல்கையின் மேல் தன்னை நிலைப்படுத்திக் கொண்டு,

துடைப்பத்தை ஒரு பழங்காலத்துப்போல் சுழற்றி வீசி, அந்தக் கொலைகாரக் கூட்டத்தைச் சிதற அடித்தாள். படகில் அவள் ஏறிய பிறகுதான் கடற்பறவைகளின் கோபம் அவளுக்குப் புரிந்தது, அங்கு எங்கு பார்த்தாலும் கூடுகளாக இருந்தன, அவற்றில் பல கைவிடப்பட்டிருந்தன, மற்றவைகளில் இன்னும் முட்டைகள் இருந்தன, அவற்றில் பல கைவிடப்பட்டிருந்தன, கொண்டு குஞ்சுகள் இருந்தன, அதெல்லாம் சரி, ஆனால் நீங்கள் வீடு மாற்றியே ஆக வேண்டும், அறியப்படாத தீவுகளைத் தேடிச் செல்ல இருக்கும் கப்பல் ஒரு கோழிப் பண்ணையைப் போல் கிளம்ப முடியாது என்றாள். காலிக் கூடுகளைத் தண்ணீரில் தூக்கி எறிந்தாள், ஆனால் மற்றவைகளை அப்போதைக்கு இருந்த இடத்திலேயே விட்டுவிட்டாள். பிறகு தன் அங்கியின் கைப்பாகத்தைச் சுருட்டி விட்டுக் கொண்டு கப்பலின் மேல்தளத்தைத் தேய்த்து சுத்தம் செய்யத் தொடங்கினாள். இந்தச் சிரமமான காரியத்தைச் செய்து முடித்த பிறகு அவள் சென்று பாய்மரங்கள் இருக்கும் பெட்டகங்களைத் திறந்து கப்பலின் பாய்களைக் கவனமாகப் பரிசோதிக்கத் தொடங்கினாள், அவற்றின் ஓரத்தையல்கள், நெடுங்காலம் கடற்பயணம் செய்யாமல், பலத்த காற்றால் இழுக்கப்படாமல், எந்த மாதிரியான நிலையில் உள்ளன என்று. பாய்கள் படகின் தசைகள், அவை காற்றில் பருத்து, இழுபடுவதை நீங்கள் பார்க்க வேண்டும் அதை அறிந்து கொள்வதற்கு, ஆனால் எல்லாத் தசைகளையும் போலவே, தொடர்ந்து உபயோகிக்கப்படாமல் இருந்தால் அவை பலவீனமுற்று, ஊதிப் போய், தசைநார்கள் இற்றுப் போகும். ஓரத்தையல்கள் பாய்களின் தசைநார்களைப் போன்றவை, என்று நினைத்த சுத்தம் செய்யும் பெண், கடலோடிகளின் கலையைத் தான் இவ்வளவு விரைவாகக் கற்றுக் கொள்கிறோமே என்று உணர்ந்து மகிழ்ந்தாள். சில ஓரத்தையல்கள் நைந்து போயிருந்தன, அவைகளைக் கவனமாகக் குறித்துக் கொண்டாள், ஏனெனில் நேற்றுவரை தான் வேலைக்காரச் சிறுவர்களின் காலுறைகளுக்கு ஒட்டுப் போடுவதற்குப் பயன்படுத்திய ஊசியும் நூலும் இந்த வேலைக்கு உதவாது என்று. மற்ற பெட்டகங்கள் காலியாக இருந்தன என்பதை அவள் விரைவில் தெரிந்து கொண்டாள். வெடிமருந்து வைக்கும் பெட்டகத்தில் வெடிமருந்து ஏதுமில்லாமல், வெறும் எலிப்புழுக்கை என்று முதலில் அவள் நினைத்துவிட்ட கறுப்பு நிறத் தூசி மட்டும்தான் கொஞ்சம் கீழே இருந்தது என்பது அவளைச் சிறிதும் சங்கடப்படுத்தவில்லை, ஏனெனில் அறியப்படாத ஒரு தீவைத் தேடிச் செல்வது என்பது, போருக்குப் போவதைப் போன்ற சாகச செய்யும் ஒரு பெண்ணுக்குத் தெரிந்த அளவில், எந்த விதியும் இல்லை. எது அவளுக்கு மிகவும் கோபமூட்டியது என்றால் உணவுக்கான பெட்டகங்களில் முற்றிலும் உணவுப் பொருள்கள் இல்லாமல் இருந்ததுதான், உண்மையில் தனக்காக இல்லை, ஏனெனில் அரண்மனையில் கிடைக்கும் ஏதோ மிச்சம் மீதியை உண்டு வாழ்வது அவளுக்கு மிகவும் பழக்கமானதுதான், படகு கொடுக்கப்பட்ட மனிதனுக்காகத்தான், விரைவில் சூரியன் அஸ்தமனமாகிவிடும், அவன் உணவு கேட்டுக் கத்திக் கொண்டு வந்து விடுவான், வீடு திரும்பிய கணத்திலேயே, எல்லா ஆண்களையும் போல, ஏதோ அவர்களுக்கு மட்டும்தான் வயிறு இருப்பது போலவும், அதை நிரப்பும் அவசியம் இருப்பது போலவும், அதுவும் அவன் வரும்போது கப்பலை நடத்திச் செல்ல மாலுமிகளையும்

அழைத்து வந்து விட்டால், அவர்களுக்கு எப்போதுமே அரைப் பசிதான் இருக்கும், பிறகு நான் எப்படிச் சமாளிப்பேன், என்றாள் சுத்தம் செய்யும் பெண்.

அவள் கவலைப்பட்டிருக்கத் தேவையில்லை. சூரியன் கடலில் அப்போதுதான் மறைந்திருக்கிறது, படகு கிடைத்த மனிதன் துறைமுக மேடையின் கோடியில் தென்பட்டான். அவன் கையில் ஒரு பொட்டலம் இருந்தது. ஆனால் அவன் தனியாகவும் சோர்வுடனும் வந்து கொண்டிருந்தான். சுத்தம் செய்யும் பெண் துறைமுக மேடையையும் படகையும் இணைக்கும் மரப்பலகையின் அருகில் போய் அவனுக்காகக் காத்திருந்தாள். ஆனால் அந்த நாளின் மீத நேரம் எப்படிப் போயிற்று என்று கேட்பதற்கு அவள் வாயைத் திறப்பதற்குள்ளாகவே அவன் சொன்னான். கவலைப்படாதே, நம் இருவருக்கும் போதுமான அளவு உணவை நான் கொண்டு வந்திருக்கிறேன், மாலுமிகள், என்று அவள் கேட்டதற்கு, அதுதான் பார்க்கிறாயே, யாரும் வரவில்லை, ஆனால் சில பேராவது வருவதாகச் சொன்னார்களா, என்று கேட்டாள், அறியப்படாத தீவுகள் இன்னும் ஏதுமில்லை என்று சொன்னார்கள், அதுவும் அப்படி இருந்தாலும் கூட, தம் வீடுகளின் சுகத்தையும், பயணிகள் கப்பலின் சொகுசான வாழ்க்கையையும் விட்டுவிட்டு, அசாத்தியமான ஒன்றைத் தேடிக் கொண்டு, ஒரு சாகசமான கடற்பயணத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள அவர்கள் தயாராக இல்லை. ஏதோ நாம் இன்னும் கடல் இருளார்ந்து இருந்த நாட்களில் வாழ்ந்து கொண்டிருப்பதைப் போல, அதற்கு நீ அவர்களிடம் என்ன சொன்னாய், கடல் எப்போதுமே இருளார்ந்துதான் இருக்கிறது, அறியப்படாத தீவைப் பற்றி அவர்களிடம் நீ சொல்லவில்லையா, நான் எப்படி அறியப்படாத தீவைப் பற்றி அவர்களிடம் சொல்வது, எனக்கே அது எங்கே இருக்கிறது என்று தெரியாதபோது, ஆனால் அது இருக்கிறது என்பது உனக்கு நிச்சயம்தானே, கடல் இருளார்ந்து இருக்கிறது என்பது எனக்கு எவ்வளவு நிச்சயமோ அந்த அளவுக்கு, ஆனால் இப்போது, இங்கே மேலே இருந்து பார்க்கும்போது, தண்ணீர் மரகதத்தைப் போலவும், வானம் தகதகவென்று பிரகாசித்துக் கொண்டும் இருக்கும்போது, ஆனால் அது உண்மையல்ல, வேலையாட்கள் இல்லாமல் நீ எப்படிச் சமாளிக்கப் போவதாக நினைக்கிறாய், இன்னும் எனக்கு அது தெரியவில்லை, நாம் இங்கே வாழலாம், துறைமுகத்துக்கு வரும் படகுகளைச் சுத்தம் செய்யும் வேலை எனக்குக் கிடைக்கலாம், பிறகு நீ, நானா, ஏதாவது திறமை, கைத்திறன், அல்லது இப்போது சொல்கிறார்களே, ஏதாவது தொழில், உன்னிடம் இருக்குமல்லவா, அவசியமானால் இருக்கும், ஆனால் நான் அறியப்படாத தீவைக் கண்டுபிடிக்க வேண்டும், அந்தத் தீவில் இருக்கும்போது நான் யாராக இருக்கிறேன் என்று நான் கண்டுபிடித்தாக வேண்டும், உனக்குத் தெரியாதா, உன்னை விட்டு வெளியில் காலடி எடுத்து வைக்காமல் நீ யார் என்பதை உன்னால் கண்டுபிடிக்கவே முடியாது, அரசனின் தத்துவ சாஸ்திரி, வேறு வேலை ஏதும் இல்லாத நேரத்தில், என்னிடம் வந்து உட்கார்ந்து கொண்டு, வேலைக்காரச் சிறுவர்களின் காலுறைகளுக்கு நான் ஒட்டுப் போடுவதைக் கவனித்துக் கொண்டு, சில சமயம் தத்துவம் பேசத் தொடங்கி விடுவார், அவர் சொல்வதுண்டு, ஒவ்வொரு மனிதனும் ஒரு தீவு என்று, ஆனால் அது எனக்குச்

சம்பந்தம் இல்லாத விஷயமாதலால், நான் ஒரு பெண்தானே, நான் அவர் சொல்வதற்கு ஏதும் கவனம் செலுத்தவில்லை. நீ என்ன நினைக்கிறாய், தீவைப் பார்ப்பதற்குத் தீவை விட்டுச் சென்றாக வேண்டும், நம்மிடமிருந்து நாம் விடுபடாவிட்டால் நம்மை நாம் காண முடியாது, அதாவது நம்மிடம் இருந்து நாம் தப்பிச் சென்றாக வேண்டும் என்று சொல்கிறாய், இல்லை, இரண்டும் ஒன்றல்ல. வானத்தின் பிரகாசம் குறைந்து கொண்டு வந்தது, தண்ணீர் திடீரென்று ஊதா நிறமாகியது, கடல் உண்மையில் இருளார்ந்தது என்பது பற்றி சுத்தம் செய்யும் பெண் கூட சந்தேகம் கொள்ள முடியாது, குறைந்த பட்சம் நாளின் சில நேரங்களில் மட்டுமாவது. தத்துவம் பேசுவதை அரசனின் தத்துவ சாஸ்திரியிடம் விட்டு விடுவோம், என்றான் அந்த மனிதன், அதற்காகத்தான் அவனுக்குச் சம்பளம் கொடுக்கிறார்கள், நாம் சாப்பிடுவோம், ஆனால் அந்தப் பெண் ஒப்புக்கொள்ளவில்லை, முதலில், நீ உன் படகை சோதிக்க வேண்டும், வெளியில் இருந்து மட்டும்தான் அதை நீ பார்த்தாய், பாய்களின் சில ஓரத்தையல்களை பலப்படுத்தியாக வேண்டும், கப்பலின் அடிப்பாகத்தினுள் சென்று பார்த்தாயா, கப்பலில் அதிகம் தண்ணீர் சேர்ந்திருக்கிறதா, அடியில் கொஞ்சம் இருக்கிறது, கலத்தின் பாரங்களுடன் சேர்ந்து ஆடிக் கொண்டிருக்கிறது, ஆனால் அது இயல்பானதாகத்தான் தோன்றுகிறது, படகுக்கும் அது நல்லதுதான், எப்படி இதையெல்லாம் நீ கற்றுக் கொண்டாய், சும்மா தெரிந்து கொண்டேன், அதுதான் எப்படி, நீ எப்படி படகைச் செலுத்தக் கற்றுக் கொள்வதாகத் துறைமுகத் தலைவனிடம் சொன்னாயோ அது போலத்தான், அது கடலில், நாம் இன்னும் கடலுக்குள் செல்லவே இல்லையே, இருந்தாலும் தண்ணீரில்தானே இருக்கிறோம், கடற்பயணத்தில் இரண்டு உண்மையான ஆசான்கள் மட்டுமே உண்டு என்றுதான் நான் நம்பிக் கொண்டிருந்தேன், ஒன்று கடல், இன்னொன்று படகு, வானம், வானத்தை, மறந்து விடுகிறாயே, ஆமாம், நிச்சயமாக வானம், காற்று, மேகங்கள், வானம், ஆமாம், வானம்.

கப்பல் முழுவதும் சுற்றி வருவதற்கு அவர்களுக்குக் கால் மணி நேரத்துக்கும் குறைவாகத்தான் பிடித்தது, ஒரு சிறிய பாய்மரக் கப்பல், அது மாற்றியமைக்கப்பட்டிருந்தாலும் கூட, நீண்ட நடை பயில்வதற்கு அனுமதிப்பதில்லை, இது மிகவும் அழகாக இருக்கிறது, என்றான் அந்த மனிதன், ஆனால் இதைச் செலுத்துவதற்குப் போதுமான வேலையாட்கள் கிடைக்கவில்லை என்றால் நான் அரசனிடம் திரும்பச் சென்று, இது எனக்கு இனிமேல் தேவையில்லை என்று சொல்லிவிட வேண்டும், உண்மையாகச் சொல்லப் போனால், முதல் இடையூறு, அப்போது



நான் மனம் விட்டுப் போகவில்லை, நம்முடன் கூட வருவதற்கு மாலுமிகள் யாரும் விரும்பவில்லை என்றால், பிறகு நாமே தனியாகச் சமாளிக்க வேண்டியதுதான், உனக்குப் பைத்தியம்தான் பிடித்திருக்கிறது, இரண்டு பேர் தனியாக இது போன்ற ஒரு கப்பலைச் செலுத்துவது சாத்தியமில்லை, ஏன், நான் எல்லா நேரமும் சுக்கானைப் பிடித்துக் கொண்டு இருக்க வேண்டும், அப்புறம் நீ வந்து, என்னால் விளக்கிச் சொல்தவற்குத் தொடங்கக் கூட முடியவில்லை, போ, இது வெறும் பைத்தியக்காரத்தனம், பார்ப்போம், இப்போது போய் சாப்பிடுவோம். அந்த மனிதன் இது அவளுடைய பைத்தியககாரத்தனம் என்று இன்னும் ஆட்சேபித்துக் கொண்டு இருக்க, கப்பல் அதிகாரிகள் தங்கும் தளத்துக்கு அவர்கள் சென்றார்கள், சுத்தம் செய்யும் பெண் அவன் கொண்டு வந்திருந்த பொட்டலத்தைப் பிரித்தாள், ரொட்டி ஒன்று, கடினமான ஆட்டுப் பாலாடைக்கட்டி, ஆலிவ் பழங்கள், ஒரு புட்டி திராட்சை மது. இப்போது நிலவு, கடல்மட்டத்திற்கு மேலே ஒரு சாண் தூரத்தில்தான் இருந்தது, பாய்மரத்தின் நிழலும் கொடிமரத்தின் நிழலும் அவர்கள் காலடியில் விழுந்திருந்தன. நம் பாய்மரக் கப்பல் உண்மையிலேயே மிகவும் அழகாக இருக்கிறது, என்று சொல்லிவிட்டுத் தன்னைத் திருத்திக் கொண்டாள், அதாவது உன்னுடைய பாய்மரக் கப்பல், ரொம்ப நாளைக்கு இது என்னுடையதாக இருக்காது, அப்படி நான் நினைப்பதற்கில்லை, நீ அதை செலுத்துகிறாயோ இல்லையோ, அது உன்னுடையதுதான், அரசன் உனக்குத்தான் இதை அளித்ததான், ஆமாம், ஆனால் அறியப்படாத ஒரு தீவைத் தேடி நான் செல்வதற்காகக் கொடுக்கும்படி நான் அவனைக் கேட்டேன். ஆனால் இந்த மாதிரி விஷயங்கள் அடுத்தடுத்த கணங்களில் நடப்பதில்லை, இதற்குக் காலம் அதிகம் பிடிக்கும், என் தாத்தா எப்போதும் சொல்வார், கடலுக்குப் போகும் ஒருவன் முதலில் நிலத்திலேயே அதற்கான முன்னேற்பாடுகளைச செய்து கொள்ள வேண்டும் என்று, அவர் ஒரு மாலுமி கூட இல்லை, வேலையாட்கள் இல்லாமல் நாம் கப்பலைச் செலுத்த முடியாது, ஏற்கனவே சொன்னாய், இந்த மாதிரியான ஒரு கடற்பயணத்திற்குத் தேவையான ஆயிரக்கணக்கான பொருள்களைக் கப்பலில் நாம் சேகரித்தாக வேண்டும், அதுவும் இது நம்மை எங்கே கூட்டிச் செல்லப் போகிறது என்பது கூட நமக்குத் தெரியாத போது, அது தவிர, நிச்சயம் நாம் சரியான பருவத்திற்காகக் காத்திருக்க வேண்டும், பிறகு கடல் மட்டத்தின் சாதகமான ஏற்ற இறக்கம் பார்த்துக் கிளம்ப வேண்டும், பிறகு துறைமுக மேடைக்கு மக்கள் வந்து நம்முடைய பாதுகாப்பான பயணத்துக்கு வாழ்த்துத் தெரிவிக்க வேண்டும், நீ என்னைக் கேலி செய்கிறாய், நிச்சயமாக இல்லை, அரண்மனையின் முடிவுகளுக்கான கதவு வழியாக என்னை வெளியேறச் செய்த நபரை நான் நிச்சயமாகக் கேலி செய்ய மாட்டேன், என்னை மன்னித்து விடு, என்ன நடந்தாலும் சரி, மறுபடி அந்தக் கதவு வழியாகத் திரும்பிச் செல்ல மாட்டேன். நிலா வெளிச்சம் நேரடியாக அந்தச் சுத்தம் செய்யும் பெண்ணின் முகத்தின் மேல் விழுந்து கொண்டிருந்தது, அழகு, உண்மையிலேயே அழகு, என்று நினைத்தான் அந்த மனிதன். இந்த முறை அவன் சொன்னது பாய்மரக் கப்பலை அல்ல. அந்தப் பெண் எதும் நினைக்கவில்லை, இன்னும் அவன் கதவருகில் காத்திருக்கிறானா என்று பார்ப்பதற்காக அவ்வப்போது கதவைத் திறந்து பார்த்துக் கொண்டிருந்த அந்த மூன்று

நாட்களில், நினைக்க வேண்டியதை எல்லாம் நினைத்து முடித்திருப்பாள். ஒரு ரொட்டித் துகளோ, பாலாடைக் கட்டியோ, ஒரு ஒளி திராட்சை மதுவோ கூட மீதம் இல்லை, ஆலிவ் பழங்களின் கொட்டைகளைக் கடலில் அவர்கள் எறிந்தாயிற்று. சுத்தம் செய்யும் பெண் கடைசி முறையாகத் துணியை வைத்துத் துடைத்தபோது இருந்ததைப் போல அவ்வளவு சுத்தமாக இருந்தது மேல்தளம். ஒரு நீராவிக் கப்பலின் சங்கு பலமாகக் கூவியது, கடல் அரக்கர்கள் கூவியிருப்பார்களே, அது போல, அந்தப் பெண் சொன்னாள், நம்முடைய முறை வரும்போது நாம் இது பற்றி இவ்வளவு சத்தம் போட மாட்டோம். அவர்கள் இன்னும் துறைமுகத்திலேயே இருந்த போதிலும், நீராவிக் கப்பல் கடந்து சென்ற போது, தண்ணீர் லேசாக அலையடித்தது, அந்த மனிதன் சொன்னான், நாம் இதைவிட இன்னும் அதிகமாக ஆடவேண்டி இருக்கும். அவர்கள் இருவரும் சிரித்தார்கள், பிறகு மௌனமானார்கள், சிறிது நேரம் கழித்து, தூங்கப் போகலாமே என்ற கருத்தைத் தெரிவித்தார் அவர்களில் ஒருவர், அப்படி ஒன்றும் அதிகம் தூக்கம் வரவில்லை, மற்றவரும் அதை ஆமோதித்தார், எனக்கும் கூடத்தான், பிறகு மறுபடி அவர்கள் மௌனத்தில் ஆழ்ந்தனர், நிலவு உதித்து, இன்னும் மேலே எழுந்தது, ஒரு கட்டத்தில் அந்தப் பெண் சொன்னாள், படுத்துக் கொள்வதற்கான இடம் கீழே இருக்கிறது, அந்த மனிதன் சொன்னான், ஆமாம், அப்போதுதான் அவர்கள் எழுந்து தளத்தின் படிகளில் கீழே இறங்கினார்கள், அங்கே அந்தப் பெண் சொன்னாள், நாளை பார்க்கலாம், நான் இந்த வழியாகப் போகிறேன், அதற்கு அந்த மனிதன் சொன்னான், நான் இந்த வழியாகப் போகிறேன், காலையில் பார்ப்போம், அவர்கள் கப்பலின் துறைமுகப்பக்கம் அல்லது கடல்பக்கம் என்று சொல்லவில்லை, ஒருவேளை அவர்கள் இருவரும் இந்த விஷயத்துக்குப் புதிதானவர்களாக இருந்ததனால் இருக்கக் கூடும். அந்தப் பெண் திரும்பி, ஓ, மறந்து விட்டேனே, என்று இரண்டு மெழுகுவர்த்தித் துண்டுகளைத் தன் முந்தானைப் பையில் இருந்து எடுத்து, சுத்தம் செய்து கொண்டிருந்த போது இவற்றைப் பார்த்தேன், ஆனால் என்னிடம் தீக்குச்சிகள் இல்லை, என்னிடம் இருக்கிறது, என்றான் அந்த மனிதன். அவள் தன் கைக்கு ஒன்றாக அந்த மெழுகுவர்த்திகளைப் பிடித்துக் கொண்டாள், அவன் தீக்குச்சியை ஏற்றினான், பிறகு, தீச்சுடருக்குப் பாதுகாப்பாகக் கூரையைப் போல் தன் கைவிரல்களைக் குவித்துக் கொண்டு, கவனமாக அந்தப் பழைய திரிகளை ஏற்றினான், சுடர் பற்றிக் கொண்டு மெதுவாக நிலவொளியைப் போல விரிந்தது, சுத்தம் செய்யும் பெண்ணின் முகத்தை ஒளியுறச் செய்தது. அவன் என்ன நினைத்தான் என்று சொல்லத் தேவையில்லை, இவள் மிகவும் அழகாக இருக்கிறாள். ஆனால் அவள் நினைத்தது, இதுதான், இவனுக்கு நிச்சயம் அறியப்படாத தீவின் மேல் மட்டும்தான் கண் இருக்கிறது, இதுதான் ஒருவர் மற்றவரின் கண்ணில் தெரியும் பார்வையைத் தவறாகப் புரிந்து கொள்வதற்கான ஒரு உதாரணம், அதுவும் அவர்கள் அப்போதுதான் சந்தித்திருக்கிறார்கள் என்னும்போது. அவள் அவனிடம் ஒரு மெழுகுவர்த்தியைக் கொடுத்துவிட்டுச் சொன்னாள், நாளைக்குப் பார்ப்போம், பிறகு, நன்றாகத் தூங்கு, அவனும் அதையேதான் சொல்ல நினைத்தான், ஆனால் வேறு விதமாக, இனிய கனவுகள், கீழே தன் படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கும்போது, வேறு சொற்கள் மனத்தில் எழும், இன்னும் சாதுரியமான,


மேலும் வசீகரமான சொற்கள், ஒரு ஆண் ஒரு பெண்ணுடன் தனியே இருக்கும்போது எழ வேண்டிய சொற்கள். அவள் இந்நேரம் தூங்கியிருப்பாளோ என்று எண்ணினான். ஒருவேளை அவள் தூங்குவதற்கு இவ்வளவு நேரம் ஆகியிருக்குமோ, பிறகு அவன் கற்பனை செய்து கொண்டான், தான் அவளைத் தேடுவதாகவும், அவளை எங்கும் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், தாங்கள் இருவரும் மிகப் பெரிய கப்பல் ஒன்றில் காணாமல் போய்விட்டதாகவும், தூக்கம் ஒரு திறமை வாய்ந்த மந்திரவாதி, அது பொருள்களின் விகிதங்களை மாற்றிவிடக் கூடாது, அவற்றின் இடையே உள்ள தூரத்தையும், அது மனிதர்களைப் பிரித்து வைக்கக் கூடியது, ஆனால் அவர்கள் அருகருகே படுத்திருப்பார்கள், அவர்களை ஒன்று சேர்க்கும், ஆனால் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வது கூட அசாத்தியம், அந்தப் பெண் சில அடி தூரத்தில்தான் தூங்கிக் கொண்டிருக்கிறாள், ஆனாலும் அவளை அவன் அடைய முடியாது, இருந்தும் கப்பலின் துறைமுகப் பக்கத்திலிருந்து கடல்பக்கம் போவது என்பது அவ்வளவு எளிதானது.

அவன் இனிய கனவுகள் என்று அவளுக்கு வாழ்த்தி இருந்தான், ஆனால் இரவு முழுவதும் கனவுகளிலேயே கழித்தது அவன்தான். தன் பாய்மரக் கப்பல் கடலில் வெகுதூரத்தில் இருப்பதாகவும், அதன் மூன்று முக்கோணப் பாய்கள் அற்புதமாகக் காற்று நிரம்பி, அலைகளுக்கிடையில் ஒரு பாதையைக் கிழித்துக் கொண்டு போவதாகவும், வேலையாட்கள் நிழலில் ஓய்வெடுக்க, தான் சுக்கானைப் பிடித்துக் கப்பலை நடத்திச் செல்வதாகவும், அவன் கனவு கண்டான். அந்த மாலுமிகள் அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது அவனுக்குப் புரியவில்லை, அறியப்படாத தீவைத் தேடிச் செல்வதற்காக அவன் அழைத்தபோது கப்பலில் உடன் வருவதற்கு மறுத்தவர்கள், ஒருவேளை தாங்கள் அவனை நாசூக்கில்லாத இகழ்ச்சி தோய நடத்திய விதத்தை எண்ணி மனம் வருந்தினார்களோ என்னவோ. கப்பலின் மேல்தளத்தில் சில விலங்குகள் அலைவதையும் அவனால் காண முடிந்தது, சோள மணிகளைக் கொத்திக் கொண்டும், அல்லது மாலுமிகள் அவைகளிடம் தூக்கிப் போடும் முட்டைக்கோஸின் இலைகளைக் கொறித்துக் கொண்டும் இருக்கும் வாத்துக்கள், முயல்கள், கோழிக்குஞ்சுகள், வீட்டுப் பிராணிகள், அவைகளைக் கப்பலுக்குள் கொண்டு வந்ததாக அவனுக்கு நினைவில்லை, ஆனால் எப்படி அது நடந்திருந்தாலும், அவை அங்கே இருப்பதுதான் இயல்பானது, ஏனெனில் அறியப்படாத தீவு ஒருவேளை ஒரு பாலைவனத் தீவாக இருந்துவிட்டால், முன்பு எத்தனையோ முறை அவ்வாறு நிகழ்ந்திருக்கிறது, எதற்கும் ஜாக்கிரதையாக இருப்பதுதான் நல்லது, நம் எல்லோருக்கும் தெரியும், ஒரு முயலை முயல்கூட்டிலிருந்து காதுகளைத் தூக்கி வெளியே எடுப்பது, மலைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் அதைத் துரத்திப் பிடிப்பதைவிட எளிதானது என்று.



கீழ்த்தளத்தின் பொருள்கள் வைக்கும் அறையின் ஆழத்திலிருந்து கனைக்கும் குதிரைகள், முக்காரமிடும் காளை மாடுகள், கத்தும் கழுதைகள், இவற்றின் கோஷ்டிகானம் அவனுக்குக் கேட்டது, கடினமான வேலைகளைச் செய்வதற்கு அத்தியாவசியமான, உயர்ந்த விலங்குகளின் குரல்கள், ஆனால் அவை எப்படி அங்கே வந்தன, மனித மாலுமிகளுக்கே போதுமான இடம் இல்லாத அந்தப் பாய்மரக் கப்பலில் அவைகளுக்கு எப்படி இடம் செய்து கொடுப்பது, திடீரென்று காற்று திசை திரும்பியது, பாய்மரத்தின் முதன்மைப் பாய் அடித்துக் கொண்டு அலையாடியது, அவன் அதுவரை கவனிக்காத விஷயம் ஒன்று பின்னால் இருந்தது, எண்ணிக் கூடப் பார்க்கத் தேவையில்லை, மாலுமிகளுக்கு நிகரான எண்ணிக்கையில், பெண்களின் கூட்டம் ஒன்று, பெண்களுக்கான வேலைகளில் ஈடுபட்டிருந்தது, வேறு வேலைகளில் தங்களை அவர்கள் ஈடுபடுத்திக் கொள்வதற்கான நேரம் இன்னும் வரவில்லை, இது ஒரு கனவு என்பது நிச்சயம், உண்மையான வாழ்க்கையில் யாரும் இதுபோல் பயணம் செய்ததில்லை. கப்பலின் சுக்கானுக்கருகில் இருந்த மனிதன் சுத்தம் செய்யும் பெண்ணைத் தேடினான், ஆனால் அவளைக் காணவில்லை, ஒருவேளை அவள் மேல்தளத்தைச் தேய்த்துச் சுத்தம் செய்த பின் இளைப்பாறிக் கொண்டு, கப்பலின் கடல்பக்கப் படுக்கையில் இருக்கலாம், என்று நினைத்தான், ஆனால் அவன் தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டு இருக்கிறான், ஏனென்றால் அவனுக்கு நன்றாகத் தெரியும், ஆனால் மறுபடியும் தனக்கு அது எப்படித் தெரியும் என்று அவனுக்குத் தெரியாது, அதாவது, கடைசி நேரத்தில் அவள் வர வேண்டாம் என்று முடிவு செய்து விட்டாள், துறைமுக மேடையில் குதித்து விட்டுக் கத்தினாள், போய் வா, போய் வா, உனக்கு அறியப்படாத தீவின் மேல்தான் கண் இருக்கிறது, நான் போகிறேன் என்று, ஆனால் அது உண்மையல்ல, இதோ இப்போது அவனுடைய கண்கள் அவளைத் தேடுகின்றன, ஆனால் அவளைக் காணவில்லை. அந்தக் கணத்தில், மேகங்கள் கூடி, மழை பெய்யத் தொடங்கியது, மழை பெய்து, கப்பலின் மேல்தளத்தின் பக்கச் சுவரில் வரிசையாகச் சாய்த்து வைக்கப்பட்டு இருந்த மண் நிரப்பிய மூட்டைகளில் இருந்து அறியப்படாத தீவில் தேவையான அளவுக்கு மண் இருக்காது என்னும் அச்சத்தினால் அல்ல, ஆனால் ஒரு வழியில் நேரத்தை மிச்சப் படுத்த முடியும், அங்கு போய்ச் சேர்ந்த அன்று நாம் செய்ய வேண்டியது எல்லாம், பழ மரங்களைப் பிடுங்கி அங்கே நட வேண்டும், இங்கே சிறிய அளவில் முதிர்ந்து கொண்டிருக்கும் கோதுமை வயல்களில் இருந்து விதைகளை அங்கு தூவ வேண்டும், பிறகு மலர்ப் படுகைகளை இந்த மொட்டுக்களில் இருந்து மலர்களினால் அலங்கரிக்க வேண்டும், சுக்கானுக்கருகில் இருக்கும் மனிதன், மேல்தளத்தில் இளைப்பாறிக் கொண்டிருக்கும் மாலுமிகளைக் கேட்கிறான், மனிதர்கள் வசிக்காத தீவுகள் இதுவரை ஏதும் தென்பட்டதா, அதற்கு அவர்கள், மனிதர்கள் வசிக்காத தீவுகளோ, அல்லாதவைகளோ, எதுவுமே தென்படவில்லை, ஆனால் முதலில் கண்ணில் தென்படும் மனிதர் வசிக்கும் தீவைக் கண்டதும், கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சி நிற்கக் கூடிய துறைமுகம் இருந்து, குடிக்க ஒரு மதுபான விடுதியும், களியாட்டமிட ஒரு படுக்கையும் இருக்கும் பட்சத்தில், இங்கு இவ்வளவு பேர் சேர்ந்து கூட்டமாக இருந்து, அதனால் அப்படியெல்லாம் செய்ய இடமில்லாததால், கப்பலில் இறங்கிப் போய்

விடுவது பற்றி யோசித்துக் கொண்டு இருப்பதாகச் சொன்னார்கள். பிறகு அறியப்படாத தீவு என்ன ஆவது, என்று கேட்டான் சுக்கானைப் பிடித்திருந்த மனிதன், அறியப்படாத தீவு எதுவும் இல்லை, உன் தலைக்குள் ஒரு கருத்தாக அது இருப்பதைத் தவிர, அரசனின் புவியியலாளர்கள் வரைபடங்களைப் போய்ப் பார்த்துவிட்டு அறியப்படாத தீவுகள் ஏதும் இருந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன என்று பிரகடனப்படுத்தி உள்ளனர், அப்போது நீங்கள் நகரத்திலேயே தங்கி இருந்திருக்க வேண்டும், என் பயணத்திற்குத் தடையாக இருப்பதை விட, நாங்கள் வாழ்வதற்கு இன்னும் நல்லதொரு இடம் கிடைக்குமா என்று பார்த்தோம், அதற்கு உன் பயணத்தைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டோம், நீங்கள் மாலுமிகளல்ல,



எப்போதுமே நாங்கள் இல்லை, என்னால் தன்னந்தனியாக இந்தக் கப்பலைச் செலுத்த இயலாது, அரசனிடம் அதைக் கேட்பதற்கு முன்னால் அந்த விஷயத்தை நீ யோசித்திருக்க வேண்டும், கடல் உனக்குச் சொல்லித் தராது, எப்படிக் கப்பலைச் செலுத்துவது என்று. பிறகு சுக்கானைப் பிடித்திருந்த மனிதன் தொலைவில் நிலம் தெரிவதைப் பார்த்தான், அதைக் கடந்து கப்பலைச் செலுத்திப் போக முயற்சித்தான், அது வேறொரு நிலத்தின் கானல் என்ற பாசாங்கில், உலகின் மறுபக்கத்திலிருந்து வெளியில் பயணம் செய்து வந்த ஒரு பிம்பம் என, ஆனால் எப்போதுமே மாலுமிகளாக இருந்திராத அந்த மனிதர்கள் அதை ஆட்சேபித்தனர், தாங்கள் அங்கேதான் இறங்க விரும்புவதாகத் தெரிவித்தனர், இந்தத் தீவு வரைபடத்தில் உன்னைக் கொன்றுவிடுவோம். பின்னர், தானாகவே அந்தப் பாய்மரக் கப்பல் தன் முன்பக்கத்தை நிலம் நோக்கித் திருப்பி, துறைமுகத்தை அடைந்து, துறைமுக மேடைக்கு அருகாகப் போயிற்று. நீங்கள் போகலாம், என்றான் சுக்கானைப் பிடித்திருந்த மனிதன், உடனே அவர்கள் எல்லோரும் வரிசையாக இறங்கினர், முதலில் பெண்கள், பிறகு ஆண்கள், ஆனால் அவர்கள் தனியாகச் செல்லவில்லை, தங்களுடன் வாத்துகளையும், முயல்களையும், கோழிக் குஞ்சுகளையும், எடுத்துச் சென்றனர், காளை மாடுகளையும், கழுதைகளையும், குதிரைகளையும், கடற்பறவைகள் கூட ஒவ்வொன்றாகப் படகைவிட்டுப் பறந்து சென்றன, தங்கள் குஞ்சுகளைத் தம் அலகுகளில் தூக்கிக் கொண்டு, இதுவரை யாரும் பார்த்தறியாதது இது, ஆனால் எல்லாவற்றுக்கும் முதல் முறை என்று ஒன்று உண்டுதானே.

சுக்காணைப் பிடித்திருந்த மனிதன் இந்த வெளியேற்றத்தை மௌனமாகப் பார்த்தவாறு இருந்தான், தன்னைக் கைவிட்டுச் செல்பவர்களைப் பிடித்து நிறுத்த ஏதும் செய்யாமல், குறைந்த பட்சம் அவர்கள் மரங்களையும், கோதுமையையும் மலர்களையும், கூடவே கொடிமரத்தைச் சுற்றிப் படர்ந்து, கப்பலின் பக்கங்களில் தோரணங்களாகத் தொங்கிக் கொண்டிருந்த கொடிகளையும், அவனுக்கு விட்டுச் சென்றிருந்தனர். அனைவரும் கப்பலை விட்டுச் செல்லும் அவசரத்தில், மண் மூட்டைகள் பிளந்து, திறந்துகொள்ள, கப்பலின் மேல்தளம் முழுவதும், உழுது விதைத்த வயல்வெளியாகக ஆகிவிட்டிருந்தது, இன்னும் கொஞ்சம் மழை இருந்தால் நல்ல அறுவடை இருக்க முடியும். அறியப்படாத தீவுக்கான பயணம் உண்டு நாம் பார்க்கவில்லை, அவன் கனவு கண்டு கொண்டிருக்கிறான் என்பதுதான் காரணமாக இருக்க வேண்டும், வெறும் கனவு, அந்தக் கனவிலொரு ரொட்டியையோ அல்லது ஒரு ஆப்பிளையோ விரும்புகிறான் என்றால், அது வெறும் கற்பனையே தவிர வேறொன்றும் இல்லை. மரங்களிலிருந்து வேர்கள் இப்போது கப்பலின் சட்டத்தையே துளைக்கின்றன, ஏற்றப்பட்டிருக்கும் பாய்கள் மேற்கொண்டு தேவைப்படாமல் போவதற்கு இன்னும் அதிக நேரம் இல்லை, காற்று மர உச்சிகளைப் பற்றிக் கொள்ள வேண்டியதுதான், அந்தப் பாய்மரக் கப்பல் தன் சேருமிடத்தை நோக்கிக் கிளம்பிவிடும். அது அலைகளின் மேல் ஏறி இறங்கி அசைந்து பயணம் செய்யும் ஒரு கானகம், எப்படி என்று யாருக்கும் தெரியாமலேயே. பறவைகள் கானம் இசைக்கத் தொடங்கிவிட்ட ஒரு கானகம், அவை எங்கோ மறைந்து இருந்து, பிறகு திடீரென்று வெளிச்சத்தில் வெளிவந்து விடுவதென்று முடிவு செய்திருக்க வேண்டும், ஒருவேளை கோதுமை வயல்கள் முதிர்ந்து, அறுவடை செய்ய அவசியம் இருப்பதால் இருக்கக் கூடும். பிறகு அந்த மனிதன் சுக்காணைப் பூட்டி வைத்துவிட்டு, கையில் அரிவாளுடன் வயலில் இறங்கினான், முதல் சில கதிர்களை அவன் அறுத்து முடித்தவுடன், தன் நிழலின் அருகில் இன்னொரு நிழலைக் கண்டான். அவன் விழித்துக் கொண்டு, தன் கைகள் சுத்தம் செய்யும் பெண்ணை அணைத்திருப்பதையும், அவள் கைகள் தன்னை அணைத்திருப்பதையும், அவர்களின் உடல்களும், அவர்களுடைய படுக்கைகளும், இது கப்பலின் துறைமுகப் பக்கம், இது அதன் கடல்பக்கம் என்று யாராலும் சொல்ல முடியாதபடி, ஒன்றென இணைந்து இருப்பதைத் தெரிந்து கொண்டான். பிறகு, சூரியன் உதித்தவுடன், அந்த மனிதனும் அந்தப் பெண்ணும், அந்தச் சிறு பாய்மரக் கப்பலின் முன்பக்கத்தின் இரு புறமும், அதுவரையில் இல்லாமல் ஒரு குறையாக இருந்த கப்பலின் பெயரை, வெண்ணிற வர்ணம் கொண்டு எழுதுவதற்காகச் சென்றனர். ஏறக்குறைய நடுப்பகல் நேரத்தில், கடலின் எழும்புதலோடு, அந்த அறியப்படாத தீவு, கடைசியில் கடல் நோக்கிக் கிளம்பியது, தன்னைத் தேடிக் கொண்டு.

நன்றி: ஹார்வில், லண்டன்

என் சுயசரிதை

ஜோஸே
ஸரமாகோ

(ஸரமாகோவின் கைப்பிரதியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்கள் ஃபெர்னாண்டோ ரோட்ரிக்ஸ் மற்றும் டிம் கிராஸ்ஃபீல்டு. தமிழில் தருபவர் பினாகினி)

லிஸ்பனுக்கு வடகிழக்கே சுமார் ஒரு நூறு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ரிபேட்ஜோ மாகாணத்தில் அல்மாண்டோ ஆற்றங்கரையில் இருக்கும் அழின்ஹாகா என்ற சின்ன கிராமத்தில் நிலமில்லா விவசாயக்



குடும்பத்தில் நான் பிறந்தேன். எனது பெற்றோர் ஜோஸே டி சௌஸா மற்றும் மரியா த பியாத்தே ஆவர். ஜோஜே டி சௌஸா என்ற பெயர் எனக்கு வந்திருக்க வேண்டும் என்றாலும் பதிவாளர் அவராகவே கிராமத்தில் வழங்கிய எங்கள் குடும்பப் பெயரான 'ஸரமாகோ' என்பதைப் பதிந்து கொண்டார். 'ஸரமாகோ' என்பது ஒரு விதக் காட்டு மூலிகைச் செடி. அதன் இலைகளை ஏழைகள் சத்துக்காக அந்தக் காலத்தில் சாப்பிடுவார்கள். எனக்கு ஏழு வயதாகும் வரை அதாவது எனது அடையாள பதிவிற்காகத் தேவைப்பட்ட பொழுதுதான் நானே தெரிந்து கொண்டேன் எனது முழுப் பெயர் 'ஜோஸோ டி சௌஸா ஸரமாகோ ... என்பதை'.

நான் பிறந்ததிதிலிருந்து வந்த ஒரே அடையாளச் சிக்கல் அதில்லை என்றாலும் இந்த உலகத்திற்கு நான் வந்த நாள் 16 நவம்பர் 1922. ஆனால் எனது பிறப்பானது பதிவேடுகளில இரண்டு நாட்கள் கழித்து 18 எனக் குறிப்பிட்டிருந்ததுதான். எனது பிறப்பை சரியான சமயத்தில் பதியாததற்கான அபராதத்தைக் கட்டுவதிலிருந்து தப்பிப்பதற்காக என் குடும்பம் செய்த சிறிய மோசடிதான் அது.

ஃபிரான்ஸின் சார்பாக ஒரு ஆயுதப்படை வீரனாக முதலாம் உலகப் போரில் பணியாற்றியதால் எனது அப்பாவிற்கு சுற்றுப்புற கிராமங்கள் பற்றி நன்கு தெரிந்திருந்தது. அதனால் அவர் விவசாயத்தை விட்டு குடும்பத்தோடு லிஸ்பனில் குடியேறினார். அங்கு அவர் போலீஸ் காரராகப் பணியில் சேர்ந்தார். அதற்கு நிறையப் படிப்பறிவுத் தகுதிகள் தேவைப் பட்டதாம்! அதாவது அந்த காலத்தில் இருந்தபடி. படிக்க, எழுத, கணக்கு போடத் தெரிந்திருக்க வேண்டுமாம்.

தலைநகரத்தில் குடியேறிய ஒரு சில மாதங்களில் எனது சகோதரன் பிரான்ஸிஸ்கோ இறந்து போனான். ஊரை விட்டு வந்தால் எங்கள் வாழ்க்கை நிலை கொஞ்சம் அபிவிருத்தி அடைந்ததே தவிர ஒரு போதும் நாங்கள் வசதியாக வாழ்ந்ததில்லை.

பலபேர் வசிக்கும் ஒட்டுக் குடித்தனங்களோடு பல வீடுகள் என எனது 13 அல்லது 14 வயது வரை ஒரு சிறிய அளவு சொந்த வீட்டிற்குப் போகும் வரை மாறிக்கொண்டேயிருந்தோம். இந்த காலத்தில் நான் வளர்ந்து பெரியவனாகும் வரை அடிக்கடி அல்லது நீண்ட நாட்கள் எனது அம்மாவைப் பெற்ற தாத்தா பாட்டியான ஜேரோனிமோ மெரின்கோ, ஜோஸேஃபா கெய்க்ஸ்ன்காவோடு கிராமத்தில்தான் வசித்து வந்தேன்.

ஆரம்பப் பள்ளியில் நான் நன்றாகப் படிக்கும் மாணவன் : இரண்டாம் வகுப்பிலேயே ஒரு எழுத்துப் பிழையுமில்லாமல் எழுதக் கூடியவனாக இருந்தேன். மூன்றாம் வகுப்பையும், நான்காம் வகுப்பையும் ஒரே ஆண்டில் தேறினேன். பிறகு அங்கிருந்து இலக்கணப் பள்ளிக்குப் படிக்கப் போனேன். அங்கு முதலாமாண்டில் பிரமாதமாகவும், இரண்டாமாண்டில் சுமாராகவும் மதிப்பெண்களைப் பெற்றேன். இருந்தாலும் வ்குப்பிலுள்ள சக மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் நான் பிரியமானவனாக இருந்தேன். மாணவர் சங்கத்தின் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டேன். (அப்போது

எனக்கு வயது 12...) இதற்கிடையே, போதுமான வருமானம் இல்லாததால் தொடர்ந்து அந்த பள்ளியில் என்னை படிக்க வைக்க முடியாது என்ற முடிவிற்கு என் பெற்றோர்கள் வந்து விட்டிருந்தனர். எனவே அதற்கு மாற்றாக ஏதேனும் தொழிற்கல்வி கற்றுத்தரும் பள்ளிக்கு என்னை அனுப்பத் தீர்மானித்தார்கள். அப்படியே நடந்தது. மெக்கானிக்காக ஐந்து வருடப் படிப்பில் சேர்ந்தேன். எதிர்பாராதவிதமாக அந்த சமயம் அது தொழில் நுட்பப் படிப்பென்றாலும் கூட பாட திட்டத்தில் ஃப்ரெஞ்சும் இலக்கியமும் இருந்தது. என் வீட்டிலோ எந்த புத்தகங்களும் இல்லை. (நண்பன் ஒருவனிடமிருந்து கொஞ்சம் கடன் வாங்கி சொந்தமாக நான் புத்தகம் வாங்கியபோது எனக்கு வயது 19) போர்த்துக்கீசிய மொழிப்பாடங்கள் 'தொகுப்பு'. முறையில் இருந்ததால் இலக்கிய ருசி தானாகவே ஏற்பட்டது. இன்றும் கூட அந்த கடந்து போன காலத்துப் பாடல்களை என்னால் இசைத்துப் பாடிக் காட்ட முடியும். படிப்பு முடிந்ததும் கார் மெக்கானிக்காக ஒரு பட்டறையில் வேலைக்குச் சேர்ந்தேன். அதேசமயம் லிஸ்பனில் உள்ள ஒரு பொது நூலகம் மாலையில் திறக்கப்படும் பொழுது முதலில் நுழைபவனாகவும் இருந்தேன். யாருடைய உதவியோ வழிகாட்டலும் இல்லாமல் படிக்க வேண்டுமென்ற ஆர்வத்தாலும் குறுகுறுப்பாலும் நான் படிப்பது வளர்ந்து தெளிந்தவனானேன்.

1944ம் ஆண்டு எனக்குத் திருமணம் ஆகும் வரை அடிக்கடி எனது வேலையை நான் மாற்றிக் கொண்டிருந்தேன். அப்பொழுது நான் சமூக நலத்துறையில் நிர்வாகப் பிரிவில் ஊழியனாகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். எனது மனைவி இல்டா ரெய்ஸ், பிற்காலத்தில் போர்த்துக்கீசிய செதுக்குக் கலையில் முக்கியமானவராக விளங்கியவர். ரெயில்வே நிறுவனமொன்றில் டைபிஸ்டாகப் பணிப்புரிந்து கொண்டிருந்தார். 1998ஆம் ஆண்டு அவர் மறைந்தார். எனது ஒரே குழந்தை வயலண்டே 1947ல் பிறந்தது. அந்த ஆண்டு தான் என் முதல் புத்தகத்தை வெளியிட்டேன். அதன் தலைப்பு 'விதவை' (The widow) என்பதாகும். ஆனால், சில வெளியீட்டுக் காரணங்களுக்காக் அதன் பெயர் 'பாவத்தின் பூமி' (The Land of Sin) என்று மாற்றப்பட்டு வெளிவந்தது. அந்த சமயம் எழுதிய இன்னொரு நாவல் 'வானவெளி' (The sky light) இன்னமும் வெளியாகவில்லை. மேலுமொரு நாவலை எழுதத் தொடங்கினேன். ஆரம்ப சில பக்கங்களைத் தாண்டி அது வளரவேயில்லை. அதன் பெயர் தேனும் (Honey and Gall) அல்லது லூயி டேட்யூஸின் மகள் (Louis son of Tadues) என்பதாகும். அவ்வளவுதான். வேறு என்ன சொல்ல இருக்கிறது? ஒரு நிலைக்கு வந்து விட்டேன் நான். பிறகு 1966ல் எனது கவிதைத் தொகுப்பான Possible Poems வெளிவரும் வரை போர்த்துக்கீசிய இலக்கிய உலகில் நான் இல்லாமலிருந்ததை ஒரு சிலரே கவனித்திருக்க முடியும்!

அரசியல் காரணங்களுக்காக 1949ல் எனக்கு வேலை போயிற்று. என் நல்ல நேரம் நான் படித்த தொழிற் பள்ளியின் ஆசிரியர் தாம் நிர்வாகியாக இருந்த உலோக நிறுவனத்தில் வேலையொன்றை எனக்குப் போட்டுக் கொடுத்தார்.

'எஸ்டுடியஸ் கோர்' என்ற பதிப்பகத்தில் தயாரிப்பு மேலாளராக 1950ன் இறுதியில் வேலையைத் தொடங்கிய பொழுது எழுத்தாளனாக இல்லாவிட்டாலும் வெகு நாட்களுக்குப் பின் முன்னர் விட்டிருந்த படைப்புலகிற்குத் திரும்பினேன். இந்த புதிய வேலையானது அந்த சமயத்திலிருந்த மிக முக்கியமான போர்த்துக்கீசிய எழுத்தாளர்களுடன் தொடர்பு கொள்ள மிகவும் உதவியாக இருந்தது. குடும்ப நிதி நிலை ஓரளவு சரியாக வேண்டி, நானே மகிழ்ச்சியோடு செய்த வேலை மொழிபெயர்ப்பது. எனது ஓய்வு நேரத்தில் மொழிபெயர்க்கும் பணியை 1955ல் ஆரம்பித்தேன். அது 1981ம் ஆண்டு வரை தொடர்ந்தது. இவ்வாறு கோல்லேட், ஃபர் லாகர் க்விஸ்ட், மூான் காஸோவ், மாப்பசான், ஆந்த்ரோ பொனார்டு, டால்ஸ்டாய், பாதலேர், எடீன் பாலிபர், நிகோஸ் பெலிலாண்ஜாஸ், ஹென்றி பாஸிலான், மூாக் ரூமெய்ன், ஹெகல், ரேமாண்ஃட் பேலர் எனப் பலரை நான் மொழிபெயர்த்தேன். 1967 மே விற்கும் 1968 நவம்பருக்கும் இடையில் இலக்கிய விமர்சகனாகவும் இன்னொரு வேலையை உப தொழிலாக கூடுதலாக செய்தேன். இதற்கிடையில் 1966ல் Possible Poems என்ற கவிதை தொகுப்பை நான் மீண்டும் இலக்கியத்திற்குத் திரும்பியதைக் குறிக்கும் நூலை வெளியிட்டிருந்தேன் அதற்குப்பின்னர் 1970ல் இன்னொரு கவிதைத் தொகுப்பினை வெளியிட்டேன். பின்னர் சிறிது கால அவகாசத்தில் 1971 -1973 வரை முறையே 'இந்த உலகத்திலிருந்து மற்றும் வேறு உலகம்', மற்றும் மேலும் செய்தித்தாள்களில் எழுதிய கட்டுரைகளைக் கொண்ட இரண்டு தொகுப்புகளையும் வெளியிட்டேன். எனது பிற்கால படைப்புகளைப் பற்றி நன்றாக அறிந்து கொள்ள வேண்டுமென்றால் இவற்றைப் படிப்பது மிகவும் அவசியம் என்று இன்றைய விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

1970ல் எனது விவாகரத்திற்குப் பின் போர்த்துகீசிய எழுத்தாளர் இஸபெல்டா நொப்நெகாவுடன் ஒன்றிணைந்து 1986 வரை வாழ்ந்து வந்தேன்.

1971ல் பதிப்பக நிறுவனத்திலிருந்து விலகிய பின்னர் 'டெய்ரியோ டி லிஸ்போரொ' என்ற நாளிதழின் பண்பாட்டு இணைப்பிதழுக்குப் பொறுப்பாளராகவும் ஆசிரியராகவும் வேலை செய்தேன்.

The Openions of the D.L.Had என்ற படைப்பானது 1974ல் வெளியானது, ஏப்ரலில் தூக்கியெறியப்பட்ட சர்வாதிகாரத்தின் கடைசி நாள்கள் பற்றிய விரிவான விவரங்களைக் கொண்டிருந்தது அது. ஏப்ரல் 1975 'டெய்ரியோ டி நோடீஸஸ்' என்ற காலை நாளிதழின் துணை இயக்குநரானேன். நவம்பர் வரை அந்த பணியில் இருந்தேன். 25 நவம்பரில் ஏற்பட்ட, புரட்சிகர நடவடிக்கைகளில் தொய்வேற்படுத்திய அரசியல் - இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பால் ஏற்பட்ட மாறுதல்களால் நான் நீக்கப்பட்டேன். இதனை இந்த காலக்கட்டத்துப் புத்தகங்கள் இரண்டில் சித்தரித்துள்ளேன். 1993 என்பது அதில் ஒன்று. 1975ல் பிரசுரமான ஒரு நீண்ட கவிதை, சில விமர்சகர்கள் சொல்வது போல மிகச்சிறந்த படைப்பு. பிறகு வெளியான Manual of Painting and caligraphy ஒரு நாவல், செய்தித்தாளில்

இயக்குநராயிருந்த பொழுது எழுதிய அரசியல் கட்டுரைகள் 'குறிப்புகள்' (Notes) என்றபெயரிலும் பிரசுரமாயின.

திரும்பவும் வேலையின்மை. எந்தவித அரசியல் சூழ்நிலையில் நாம் போய் கொண்டிருக்கிறோம் என்று தெளிவாக தெரிந்த நிலையில் துன்பப்பட்டு அலைவதை விட இலக்கியத்திற்காக முழுதும் செயல்படலாம் என்ற தீர்மானத்துக்கு வந்துவிட்டேன். ஆம் ஒரு எழுத்தாளன் என்ற வகையில் அந்த தகுதி எனக்கிருக்கிறதா எனக் கண்டுபிடிக்க வேண்டிய நேரம் வந்து விட்டதாக நான் நினைத்தேன்.

1976 ம் ஆண்டின் தொடக்கத்தில் 'அலேஸ்டேஜோ' மாகாணத்திலுள்ள 'லாவேர்' என்ற சிறிய கிராமத்தில் சில வாரங்கள் தங்கியிருந்தேன். இங்கேதான் நான் எழுதத்தேவையான குறிப்புகள் பலவற்றை சேகரித்தேன். அவை 1980 ல் 'Risen from the ground' எழுத உபயோகப்பட்டது. இதற்கிடையே 1977 ல் 'Quasi Object' என்ற ஒரு சிறுகதைத் தொகுப்பையும் 1979 ல் 'The Night' என்ற நாடகம் ஒன்றையும் வெளியிட்டேன். அதன் பின்னர் ஒரு சிலமாதங்கள் கழித்து அதாவது Risen from the ground எழுதுவதற்கு முன்னால் ஒரு புதிய நாடகத்தை 'What shall I do with this book' ஐ எழுதினேன். 1987 ல் வெளியான 'The second life of Francis of Assisi' என்ற நாடகத்தை தவிர்த்து பார்த்தால் 1980கள் முழுதும் 'பால்தசார் மற்றும் பில்முண்டா' (Baltazar and Blimunda) எழுதவே அர்பணித்திருந்தேன். 'The year of the Death of Recardo Rais' (1984)-, The stone Raft (1986) The History of the Siege of Lisban (1989) என வரிசையாக எழுதினேன். பிலார் டெல்ரியோ என்ற ஸ்பானிய பத்திரிகையாளரை 1986ல் சந்தித்தேன். நாங்கள் 1988ல் திருமணம் செய்துகொண்டோம்.

ஐரோப்பிய இலக்கியப்பரிசு பெறுவதில் போர்த்துகீசிய அரசாங்கமானது எனது 'The Gospel of Jesus christ(1991)ஐ தடுத்ததிலிருந்து அது கத்தோலிக்கர்களின் மனதைப் புண்படுத்துகிறது என்ற புகாரினைத் தொடர்ந்து நானும் எனது மனைவியும் கேனரித் தீவுகளில் ஒன்றான லேஸ்ஜரோட் தீவில் குடியேறினோம். அந்த ஆண்டு தொடக்கத்தில் தான் In Nomine Dei என்ற நாடகத்தைப் பிரசுரித்தேன் அது ஸ்பெயினிலிருந்த போது எழுதப்பட்டது. அதிலிருந்துதான் 1993ல் மன்ஸ்டர் நகரில் (ஜெர்மனி) இத்தாலிய சாகித்ய கர்த்தாவாக ஆஸியோ கோர்ஹியால் இசையமைக்கப்பட்டு 'Divara' என்ற 'ஓபரா' எடுக்கப்பட்டது. கோர்ஹியுடன் இணைவது இது முதல் முறையல்ல எனது நாவலான பால்தசார் மற்றும் பிலிமுண்டாவும் என்ற ஓபராவிற்கும் இதாலி மிலன் நகரில் 1990ல் நடபெற்றபோதும் அவர்தான் இசையமைத்திருந்தார். எனது நாள்குறிப்புகளை 1993ல் நான் எழுத ஆரம்பித்தேன். (Cadernos de Lanzarote) இது வரை ஐந்து தொகுப்புகள் முடிவடைந்திருக்கின்றன. அந்தகம் (Bhindness) என்ற நாவல் 1997 லிலும் எல்லாப் பெயர்களும் (All the Names) 1997லிலும் வெளியிட்டேன். 1995ல் 'கோமோஸ்' பரிசு கிடைத்தது. மேலும் 1998ல் இலக்கியத்திற்கான 'நோபல் பரிசும்' எனக்கு வழங்கப்பட்டது.

•

[கட்டுரை]



இடாலோ கால்வினோவும் நவீன புனைகதையும்

பிரம்மராஜன்

ஜியோவனி வெர்கா(Giovanni Verga), **எலியோ விட்டோரினி** (Elio Vittoroni) மற்றும் **சேசரே பவேஸே** (Cesare Pavese) ஆகிய மூன்று இதாலிய புனைகதை ஆசிரியர்கள் இணையும் சங்கமத்திலிருந்தே போருக்குப் பிற்பட்ட நவீன இதாலிய இலக்கியம் உருவாகிறதென குறிப்பிட்டார் **இடாலோ கால்வினோ.** பதிப்பகத்துறை, பத்திரிகைத் துறை ஆகியவற்றிலும் தீவிரமாக இயங்கிய கால்வினோ யதார்த்த புனைகதையாளராகத் தன் எழுத்து வாழ்க்கையைத் தொடங்கி இறுதியில் பின் நவீனத்துவ நாவலாசிரியாக மாறினார். என்பினும் இதாலியின் நாட்டுப்புறக் கதைகளில் தீவிர ஆர்வம் காட்டியவர் தனது இடதுசாரிக் கருத்துக்களுக்கு எந்த வித குந்தகமும் வந்து விடாமல் தமது விஞ்ஞானப் புனைகதைகளை மெய்மைகடந்த தன்மையுடன் அவரால் எழுத முடிந்தது.

1923 ஆம் ஆண்டு கியூபாவிலுள்ள Santiago de las Vegas என்ற இடத்தில் கால்வினோ பிறந்தார். கால்வினோவின் இளமைக் காலத்தின் போது அவரது பெற்றோர் இதாலியின் **சான் ரெமோ** என்ற பகுதிக்கு வந்து குடியேறினர். கால்வினோ **ட்யூரின்** பல்கலைக் கழகத்திலும் **ராயல் ஃபிளாரென்ஸ்** பல்கலைக் கழகத்திலும் படித்தார். இரண்டாம் உலகப் போர் காலத்தில் இளம் பாஸிஸ்டுகள் (Young Fascists) அணியில் வலுக்கட்டாயமாகச் சேர்க்கப்பட்டார். அதிலிருந்து தப்பித்து கம்யூனிச எதிர்ப்பு இயக்கத்தில் சேர்ந்தார். இந்த அனுபவம் அவரது ஆரம்ப காலக் கதைகள் உருவாகக் காரணமாக அமைந்தது. போருக்குப் பிறகு **ட்யூரின்** பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை முடித்தார். கம்யூனிஸ்ட் பத்திரிகையான L'Unitaவில் 1945 ஆம் ஆண்டிலிருந்து பணியாற்றத் தொடங்கினார். **சேசரே பவேஸேவின்** அடியொற்றி Einaudi என்ற பதிப்பக நிறுவனத்தில் 1948 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு வரை பணியாற்றினார். **சேசரே பவேஸேவும் எலியோ**

விட்டோரினியும்தான் கால்வினோவுக்கு இடதுசாரி அரசியலையும் நியோரியலிசத்தையும் அறிமுகப்படுத்தியவர்கள். L'Unitá தவிர La Nostra Lotta, Il Garibaldino, Voce della Democrazia, போன்ற பத்திரிகைகளுக்கு தொடர்ந்து எழுதினார். 1959ஆம் ஆண்டிலிருந்து 1967வரையிலான காலகட்டத்தில் எலியோ விட்டோரினியுடன் இணைந்து Il Menabo di litteratura என்ற இலக்கிய ஏட்டை நடத்தினார். 1952ஆம் ஆண்டு சோவியத் யூனியனுக்கு பயணம் செய்தார். 1957ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகினார். 1959-60 இல் அமெரிக்காவுக்குப் பயணம் செய்தார். எஸ்டர் ஜூடித் ஸிங்கர் என்பவரை 1964ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டு 1967இல் பாரிஸ் நகருக்குச் சென்றவர் 1979இல்தான் ரோம் நகருக்குத் திரும்பினார். 1985ஆம் ஆண்டு கால்வினோ காலமானார்.

அவர் கதை எழுதும் முறையை வைத்து அவரது கதைகளை Speculative புனைகதைகள் என்று கூறமுடியும். இதாலிய மேஜிக் ரியலியசத்தின் ஆரோக்கியமான அடுத்த கட்ட வளர்ச்சி நிலையே Speculative புனைகதை ஆகும். உணர்ச்சிகளைப் பற்றிய அலசல்கள், மற்றும் மனோவியல் ஆகியவற்றால் தான் ஈர்க்கப் படவில்லை என அவர் அறிவித்திருந்த . போதிலும் கூட அவருடைய கதாபாத்திரங்கள் மனித மனதின் அடியாழங்களுக்கு பயணம் மேற்கொண்டவண்ணமிருக்கின்றனர்.

அறநெறி சார்ந்த பிரச்சனைகளுக்கு கால்வினோவைப் பொருத்தவரை இலக்கியத்தில் இடம் இல்லை. வாசகனின் மீது இலக்கியம் ஏற்படுத்தும் பிரதிபலிப்பின் மூலமாகவே அறநெறிகள் குறித்த பிரச்சனைகள் அடையாளம் காணப்பட முடியும். இலக்கியம் உள் உணர்த்தலை மட்டுமே செய்யும். இதன் காரணமாகவே 'அறநெறிகளைக் கடைபிடித்தல்', 'கற்றுத்தருதல்', 'மேன்மைப்படுத்துதல்' போன்ற விஷயங்களை முன் நிறுத்தி எழுதப்படும் இலக்கியங்களின் ஏமாற்றுத் தன்மையை கவனமான வாசகன் அடையாளம் கண்டு விடுவான் என்கிறார் கால்வினோ.

டைம்ஸ் இலக்கிய இதழின் இணைப்புக்கு எழுதிய கட்டுரையில் (செப்டம்பர், 28, 1967) "தத்துவமும் இலக்கியமும் நித்தியமாய் சண்டையிட்டுக் கொள்ளும் எதிரிகள்" என்று குறிப்பிட்டார். தத்துவத்திற்கும் இலக்கியத்திற்கும் இடையிலான சண்டை ஒரு தீர்மானத்திற்கு வர வேண்டிய அவசியம் இல்லை என்றும் கருதினார். எழுத்தாளராகவும் தத்துவவாதியாகவும் இருந்த ழீன் பால் சார்த்தர் எழுதிய "La Nausea" நாவலின் மையப்பாத்திரமான ரக்வென்டின் ஒரு முறை கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொள்ளும் பொழுது புத்தம் புதிய தத்துவார்த்தப் பார்வை பார்த்துக் கொள்ள முடிகிறதே யொழிய அப்படித் தொடர்ந்து இறுதிவரை இருக்க முடிவதில்லை. எக்ஸிஸ்டென்ஷியலிச நாவல்கள் ஏன் வெற்றியடைவில்லை என்பதற்கான காரணத்தையும் நாம் இதிலிருந்து கண்டு பிடிக்க முடியும். ஒரே தனிநபரில் தத்துவவாதியும் இலக்கியவாதியும் இணைந்திருக்கிற பட்சத்தில் அதில் உள்ள இலக்கியவாதி தத்துவாதியை முந்திக் கொண்டு எழுதினால்தான் வெற்றி பெற முடியும். இதை சாதித்துக் கொண்ட நால்வர் தாஸ்தாயெவ்ஸ்கி, காப்கா, அல்பெர் காம்யூ(Albert

Camus) மற்றும் **ழீன் ஜெனே** (Jean Genet) ஆவர். தத்துவமும் இலக்கியமும் பொருதும் போது ஒவ்வொன்றும் உண்மையை வென்றெடுப்பதற்கான பயணத்தில் ஒரு படி முன் சென்று விட்டதான ஒரு தன்னம்பிக்கையில் செயல்படுகின்றன. எனவே இந்த சச்சரவு நித்தியமானது மட்டுமன்றி ஓய்வற்றது. இந்த எதிரெதிர் முகாம்கள் இரண்டும் தமது கட்டுமானங்களுக்கான கச்சாப் பொருள்களாகப் பயன்படுத்துவது வார்த்தைகளைத்தான்.

லூயி கரோலுக்குப் பிறகுதான் இலக்கியத்திற்கும் தத்துவத்திற்குமிடையே ஒரு புதிய உறவு உண்டாயிற்று. கற்பனையின் தூண்டுதலுக்கு ஒரு கருவியாக தத்துவத்தைப் பார்ப்பவர்கள் இலக்கியத்தில் உருவானார்கள்: **ரேமண்ட் க்வேனு** (Raymond Queneau), **ஜோர்ஜ் லூயி போர்ஹே, அர்னோ ஷ்மிட்** (Arno Schmidt) ஆகிய மூவரும் வெவ்வேறு தத்துவங்களில் வேறுபட்ட உறவுகள் கொண்டு இவற்றைத் தமது பன்மையும் வேறுபாடும் மிகுந்த மொழியியல் உலகங்களுக்கு ஊட்டமளிப்பளிப்பதற்குப் பயன்படுத்திக் கொண்டார்கள். இந்தக் குடும்பத்தின் எல்லையோரத்தில் நவீனத்துவ ஐரிஷ் நாவலாசிரியரான சாமுவெல் பெக்கட் மற்றும் இதாலிய நவீனத்துவ புனைகதையாளர் Carlo Emilio Gadda ஆகிய இருவரைப் பார்க்க முடிகிறது. எமிலியோ க(ட்)டா இதாலியின் ஜேம்ஸ் ஜாய்ஸ் என்று கருதப்படுபவர். ஆனால் அவரது எழுத்து நடை மொழிபெயர்ப்புக்கு உட்படுத்திக் கொள்ள சிரமம் அளிப்பதாய் இருப்பதால் அதிகமான ஆங்கில மொழி - பெயர்ப்புகள் வெளிவரவில்லை.(ஓரிரு சிறுகதைகள் தவிர)

திரைப்படம் பற்றிய ஒரு கட்டுரையில் சில தனித்துவமான பார்வைகளை முன் வைக்கிறார். கால்வினோ. காலத்தின் சமன் குலைவுகளை எக்காலத்திலும் சினிமாவால் சாதிக்க முடியாது. ஒரு பார்வையாளனாக சினிமாவை ரசித்திருக்கிற கால்வினோ கார்ட்டூன் திரைப்படங்கள் தன்னை வெகுவாகப் பாதித்திருப்பதாகக் கூறுகிறார். எண்ணி எடுத்த இரண்டு, அல்லது மூன்று கோடுகளில் கதாபாத்திரங் களை எப்படி வரையறை செய்வது என்பதைக் கற்றுத் தருகிறது கார்ட்டூன் சினிமா. சினிமா என்ற ஊடகத்திற்கு எப்போதுமே நாவல் என்கிற இலக்கிய வகைமை மீது பொறாமை இருந்து வந்திருக்கிறது. என்ன இருந்தாலும் சினிமா இறுதியில் 'எழுதவே' விரும்புகிறது என்பதுதான் அதற்குக் காரணம்.

கிளாசிக்குகளைப் பற்றி ஈர்ப்பானதொரு விவாதத்தை முன் வைக்கும் கால்வினோ கிளாசிக்குளை முதல் முறையாகப் படித்த போதிலும் சிறந்த படிப்பாளிகளிலேயே சிலர் தாங்கள் 'மறுவாசிப்பு' செய்வதாகவே சொல்ல விரும்புகின்றனர். நவீன பிரெஞ்சுக் கவிஞரான **மல்லார்மே** (Mallarme) இத்தகைய புத்தகங்களை 'Total Book' என்றழைத்தார். இத்துடன் நூலகம் குறித்து வேறு ஒரு முக்கிய கருத்தை கால்வினோ முன் வைக்கிறார். Northrop Frye என்ற அமெரிக்க விமர்சகர் Anatomy of Criticism என்ற நூலின் "என்சைக்குளோபீடிய வடிவங்கள்" என்கிற அத்தியாயத்தில் பைபிளை ஒரு நூல் என்று கூறுவதற்குப் பதிலாக 'நூலகம்' என்று குறிப்பிடுகிறார். இலக்கிய விமர்சன நோக்கில் இது

ஆட்சேபத்திற்குரிய கருத்தாகுமென்றாலும் கூட கால்வினோ Fryeயின் அணுகுமுறையை வரவேற்கவே செய்கிறார். கூர்ந்த வாசகர்கள் பைபிளை ஒன்றன் மீது ஒன்றாய் அடுக்கப்பட்ட புத்தகங்களின் தேர்வுகள் என்றும் அதை ஒட்டி சாத்தியமுள்ள பிற நூல்களை தாம் வைத்துக் கொள்ளலாம் என்றும் உணர்கின்றனர். 'நூலகம்' பற்றிய கருத்து Frye-யின் சுயமான அவதானிப்பல்ல என்றாலும் அந்தச் சொல்லாக்கம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியது. இலக்கியம் வெறுமனே பல புத்தகங்களால் உருவாவதன்று-- மாறாக அமைவுகள் மற்றும் நூலகங்களால் உருப் பெருகிறது என்பது கால்வினோவின் வாதம்.

Fantasy (புனைவு) என்ற சொல்லின் அர்த்தப்பாடுகள் பற்றியும் கால்வினோ சந்தேகம் எழுப்புகிறார். இச்சொல் முதல் வாசிப்பில் அதன் பத்தொன்பதாம் நூற்றாண்டு அர்த்தத்தையே உணர்த்துகிறது. இருபதாம் நூற்றாண்டு ஃபாண்டஸி மற்றும் மறுமலர்ச்சிக்கால ஃபாண்டஸி ஆகிய இரு வகைகளை மாத்திரமே தீர்மானமாய் பேச முடியும். ஏனெனில் சமகால ஃபிரெஞ்சு இலக்கியத்தில் Fantastique என்பது பிரதானமாக பயங்கர கதைகளை (Horror) உணர்த்தவே பயன்படுகிறது. இது உணர்ச்சி ரீதியான பிணைப்பினை வாசகனிடமிருந்து எதிர்பார்க்கிறது. ஆனால் நவீன இதாலிய இலக்கியத்தில் Fantasia மற்றும் Fantastico வகைமைகள் வாசகனின் தரப்பிலிருந்து உணர்ச்சி ரீதியான ஈடுபாட்டினை கட்டாயப் படுத்துவதில்லை. ஆங்கிலத்தில் Fantastic (அதிகம் சிதைவுக்குள்ளான பிரயோகம்) இதாலிய மொழியில் இருப்பதைப் போலவே அர்த்தப் படுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டு ஃபாண்டஸி ரொமாண்டிக் இலக்கிய இயக்கத்தின் சுத்தகரிக்கப்பட்ட விளை பொருளாக உருவாகி பிறகு வெகுஜன இலக்கியத்தை அடைந்தது. விஞ்ஞானக் கதைகளில் வருவது போல இருபதாம் நூற்றாண்டில் அறிவார்த்தமான பாண்டஸிகள் (Intellectual Fantasy) மிகவும் ஓங்கி நிற்கின்றன. இவற்றில் முரண்களும், விளையாட்டும், கண்ணாமூச்சியும் மறைக்கப்பட்ட விழைவுகளின் தியானமும் நவீன மனிதனின் பீதிக்கனவுகளும் உள்ளடங்கும். குறிப்பிடத்தகுந்த ஃபாண்டஸி எழுத்துக்களைப் பற்றிச் சொல்லும் போது Bruno Shulz என்ற போலந்து நாவலாசிரியரின் நாவலையும், உருகுவே நாட்டைச் சேர்ந்த Felisberto Hernandez என்பவரின் சிறுகதைகளையும் குறிப்பிடுகிறார் கால்வினோ.

இரண்டாம் உலகப் போரைப் பின்னணியாக வைத்து எழுதப்பட்ட அவருடைய முதல் நாவலான Path to the Spider's Nest (1947) க்கு 1964ஆம் ஆண்டு அளித்த முன்னுரையில் சில தெளிவான விளக்கங்களை தந்திருக்கிறார் கால்வினோ. வன்முறையும் செக்ஸும் புனைகதைக்கு இன்றியமையாத கூறுகள் அல்லவென்று கண்டு பிடித்துக் கொள்வதற்கு இந்த நாவல் அவருக்கு உதவியிருக்கிறது. இந்த நாவல் எழுதுவதற்கு ஹெமிங்வேயின் For Whom The Bell Tolls (1940) தூண்டுதலாய் அமைந்தது பற்றியும் ஒப்புதல் செய்கிறார். ஹெமிங்வே குறித்த ஒரு சிறந்த மறுமதிப்பீடாக அமைகிறது கால்வினோவின் மற்றொரு கட்டுரையான Hemingway

and Ourselves (1954). இந்த நாவலில் 'எதிர்ப்பு இயக்கத்தை' ஒரு சிறுவனின் பார்வையில் வெளிப்படுத்தியிருக்கிறார். இதில் பிரதேச மொழியையும் கொச்சைப் பிரயோகங்களையும் யதார்த்த சித்தரிப்புக்காகப் பயன்படுத்தினார் கால்வினோ. ஹெமிங்வே தவிர வேறு இரண்டு முக்கிய பாதிப்புகளாக அமைந்த இரு ரஷ்ய எழுத்தாளர்களைக் குறிப்பிடுகிறார். புரட்சிகர வன்முறையை சந்திக்கும் ஒரு அறிவுவாதியின் அனுபவங்களை Isaac Babel என்கிற ரஷ்ய, யூத நாவலாசிரியரின் The Red Cavalry என்ற நாவல் விவரிக்கிறது. மற்றவர் The Rout நாவலை எழுதிய ஒரே உருப்படியான ஸ்டாலினிஸ்ட் எழுத்தாளரான Alexander Fadeye . **ஏசக் பேபல்** ஸ்டாலினியக் கலையெடுப்புகளில் பலியான முக்கியமான எழுத்தாளர்களில் ஒருவர். இது பற்றிய குற்ற உணர்வின் காரணமாக **ஃலெக்ஸாண்டர் பெடயேவ்** துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

தொடக்க காலத்தில் கால்வினோ நியோ ரியலிஸ்ட் என்றே கருதப்பட்டார், அழைக்கப்பட்டார். நியோ ரியலிசம் (Neo Realism) பற்றிய கருத்துக்களை அவரே தெளிவு படுத்தினார். நியோ ரியலிசம் என்ற பெயர் திரைப்படத்துறையிலிருந்து பெறப்பட்ட ஒன்றாகும். நியோ ரியலிஸம் ஒரு இயக்கமோ அல்லது குழுவோ அல்ல. மாறாக இதாலிய இலக்கியத்தின் வேறுபட்ட பிரதேச இலக்கியவாதிகளின் கூட்டுக் குரல்களின் வெளிப்பாடு. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு எழுதத் தொடங்கிய பல இதாலிய இலக்கியவாதிகள் நியோ ரியலிஸ்டுகள் என்றே அழைக்கப்பட்டனர். ஆனால் இதாலிய இலக்கியம் முதல் உலகப் போர்க்காலத்தின் இடைவெளியில் எக்ஸ்பிரஷனிசத்தைத் தவற விட்டு, பிறகு இரண்டாம் போர் சமயத்தில் அதற்கு ஈடு செய்தபடியால் இந்த இயக்கத்திற்கு நியோ எக்ஸ்பிரஷனிசம் (Neo Expressionism)என்ற பெயரே சாலப் பொருந்தும் என்று கருதினார் கால்வினோ.

1950களில் இதாலிய இலக்கியம், அதிலும் குறிப்பாக, நாவல் இலக்கியம் சமகால இதாலியின் தார்மீக, சமூக மனசாட்சியை பிரதிநிதித்துவம் செய்ய யத்தனித்தது. 60களில் அது இரண்டு பக்கங்களிலிருந்து தாக்கு தல்களைச் சந்திக்க வேண்டி வந்தது. ஒன்று இலக்கியவடிவத்தில் உண்டான மாற்றம். மற்றது மொழியில் ஏற்பட்ட வன்மையான மாற்றம். இவ்விரண்டுடன் மூன்றாவதாய் அணி சேர்ந்து கொண்டவை இன்றியமையாதவையாய் மனிதனின் அறிவுத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள். மொழியியல், தகவல் தொடர்பு, மானுட ஆய்வியல், புராணிகங்கள் பற்றிய வடிவவியல் ஆய்வுகள், குறியியல், மனோவியலில் புதிய பயன்பாடுகள், மார்க்சீயத்தில் ஏற்பட்ட புதிய பயன்பாடுகள் ஆகியன: இவையனைத்தும் விமர்சனக் கருவிகளாக ஒன்றிணை க்கப்பட்டு ஒரு இலக்கியப் படைப்பை அதன் தனித்தனிப் பகுதிகளாக உடைத்துப் பார்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன.

எதிர்ப்பு இயக்கம்(Resistance Movement) ம்ற்றும் போர் சம்மந்தப்பட்ட பொதுவான கதைக் கருக்களை விடுத்து புதிய புனைவுத்தன்மை கொண்ட நாவலான The Cloven Viscount (1952) ஐ எழுதினார். இந்த நாவலின் வெளியீட்டுக்குப் பிறகு இதாலிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு ரியலிஸம் பற்றிய ஒரு தீவிர விவாதத்தை நடத்த வேண்டிய

கட்டாயம் ஏற்பட்டது. முதன் முதலாக நியோ ரியலிஸத்திற்கு மாற்றான ஒரு இலக்கிய வகைமையாக, நிஜமான புனைவாக, கால்வினோவின் இந்த நாவல் அமைந்தது. இந்த நாவலின் புனைவுத் தொடர்ச்சியாக மேலும் இரண்டு நாவல்களை அவர் (The Baron in the Trees[1957], The Nonexistent Kinght[1959]) எழுதினார்.

Adam One Afternoon என்ற சிறுகதைத் தொகுதியில் உள்ள பல கதைகள் (Fear on the Footpath, Animal Wood, Hunger in Bavera, Going to Head Quarters, The Crow Comes Last) போரைப் பின்னணியாகவோ அல்லது கதைக்களமாக வைத்து இயங்கு கின்றன.

கால்வினோவின் தொடக்க காலக் கதைகளுக்கும் பிற்கால புனை கதைகளுக்கும் முதிர்ச்சி ரீதியான வகையில் மட்டுமன்றி வகைமை ரீதியிலும் நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. யதார்த்தவியலில் தொடங்கி, நாட்டுப்புறக் கதை களுக்குச் சென்று, தொல் கதைகள் போன்றவற்றை எழுதி, முழுமுற்றான புனைவுகளை எழுதத் தொடங்கி இறுதியில் பின் நவீனத்துவ பாணி எழுத்துக்களை வந்தடைந்தார்.

அவருடைய தொடக்க கால, அறிவியல் புனை கதைகளின் (Cosmicomics[1965]) விவரணையாளனாய் வரும் Qfwfq இந்தப் பிரபஞ்சம் உருவான சமயத்திலோ அல்லது அதற்கு முற்பட்ட காலத்திலோ இருந்த ஒரு பிரபஞ்ச பிரக்ஞையையும் ஞாபகத்தையும் தக்க வைத்துக் கொண்டிருக்கிறான். Cosmicomics. சிறுகதைகள் அனைத்திற்கும் அவன்தான் கதை சொல்லியாக இருக்கிறான். கதையின் ஒட்டு மொத்த பார்வையும் (point of view) அவனது பார்வையாகவே அமைந்துள்ளது. Qfwfq வின் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் பெயர்கள் உச்சரிக்கவே இயலாதவையாக இருக்கின்றன: Xlthlx, Mrs. Vhd Vhd, Mrs. Ph(i)Nk0, Z'zu, DeXuaeauX போன்றவை சில எடுத்துக்காட்டுக்கள். மானுட உருவமில்லாதவையாக அவை(அவர்கள்) சித்தரிக்கப்பட்டிருந் தாலும் சலிப்பு, போட்டி மனப்பான்மை, நரம்புத் தளர்ச்சி போன்றவை அவற்றுக்கு (அவர்களுக்கு) இருப்பதாய்த் தோன்றுகிறது. இந்தப் புத்தகத்தின் ஒவ்வொரு அத்தியாயம் அல்லது கதையின் தொடக்கமும் புவியியல் மற்றும் வானவியல் தொடர்பான ஒரு மேற்கோள் அல்லது உப்புச் சப்பற்ற பாடப்புத்தகத்தனமான மேற்கோள் தகவல்களுடன் தொடங்குகிறது. நிலா தனது சுழல்பாதையை மாற்றிக் கொண்டது பற்றி, எவ்வாறு டினோசர்கள் அழிந்து போயின, எப்படி புவி வெளி வளைவாக இருக்கிறது என இப்படிப் பல. பிரபஞ்ச வாழ்வு தொடங்கு முன்னரே பிறந்து விட்டவன் மாதிரித்தான் Qfwfq தோன்றுகிறான். வண்ணங்களும் வாழ்வுயிரிகளும் உருவாகும் முன்பான ஒரு காலத்தை விவரிக்க அவனால் மாத்திரமே முடியும். இந்தப் புத்தகம் வெளிவந்த பிறகு மனித இனத்தை விடுத்து செல்களைப் பற்றிய அக்கறை அதிகம் உள்ளவர் என்றும் இதயத்தின் காரணங்களை விடுத்து கணிதவியல் கணக்கீடுகளில் மூழ்கிவிடுபவர் என்றும் சிலர் கால்வினோ மீது விமர்சனம் வைத்தனர்.

Marcovaldo (1963) நீதிக் கதைகளின் ஒரு தொகுதியாகவோ அல்லது மார்க்கோவேல்டோ பற்றிய

ஒரு நாவலாகவோ பார்க்கப்படலாம் **மார்க்கோவேல்டோ சார்லி சாப்ளின்** தன்மையான ஒரு பாத்திரம். இந்தக் கதைகள் நகர் சார்ந்த வாழ்க்கை முறைகளைக் கேலி செய்கின்றன. 1950களின் தொழிற்சாலைகள் நிறைந்த இதாலியின் பின்னணியில் நாம் **மார்க்கோவேல்டோ** என்கிற இயற்கை ரசிகனையும் கனவுக் காரனையும் காண்கிறோம். இதில் உள்ள இருபது கதைகளும் வசீகரம் மிகுந்தவை. மார்க்கோவேல்டோ தனது அபார்ட்மெண்ட் மாடியில் பறவைகளுக்குக் கண்ணி வைத்து பிடிக்கப் பார்க்கும் முயற்சிகளும், நெடுஞ்சாலை விளம்பரப் பலகைகளை விறகுக்காக வெட்டப் பார்ப்பதும் சாப்ளின் தன்மான துணிகரச் செயல்களாய் விரிகின்றன. **மார்க்கோவேல்டோ** தன் குடும்பத்தாருடன் சூப்பர் மார்க்கெட் சென்று ஒன்றையும் வாங்க முடியாமல் திரும்பி வருவதும் கூட ரசனை மிக்க அனுபவமே. **மார்க்கோவேல்டோ** அழகுக்காக ஏங்குகிறான், பகல் கனவுகள் காண்கிறான். ஆகஸ்ட் மாதத்தில் சகலரும் நகரத்தை விட்டு விடுமுறையைக் கழிக்கச் சென்றிருக்கையில் அவன் தன் நகரின் காலியான தெருக்களை ரசிக்கிறான். அவனுடைய அமைதி கெடுவது அவனை பேட்டி காண வரும் டெலிவிஷன் குழுவினரால் மட்டுமே.

கால்வினோவின் மொழி நடை ஃபிரெஞ்சு ‘புதிய நாவல்’ (nouveau roman) எழுத்தாளரான **ஃலென் ராப் கிரியே** (Allain Robbe-Grillet)வின் மொழிநடையுடன் ஒப்பிட்டுப் பேசப்பட்டிருக்கிறது. சில சமயம் **மிஷல் ப்யூடர்** என்பவரின் எழுத்து நடையுடனும். **ராப்கிரியே** தனது புனைகதையின் உள்தளத்தில் அமைந்த அடர்த்தி மிகுந்த உட்பார்வைகளை மேல் தெரியும்படி செய்ய வலுக்கட்டாயமாக சித்தரிப்புகளை விவரணையில் கொண்டு வந்து சேர்க்கிறார். ஆனால் கால்வினோ ‘பொதுப் புத்தி’யிலிருந்து தன்னை எப்போதும் துண்டித்துக் கொள்வதில்லை. அடிப்படையில் கால்வினோ ஒரு நேச்சுரலிஸ்டாகவே இருக்கிறார். **ராப் கிரியே** மானுட மையஉலகத்திற்கு (Anthropomorhphic) எதிராய்த் தனது புனைவுலகத்தில் இயங்குகிறார்.

எதுவெல்லாம் சமூக (Social Unconscious) மற்றும் தனிமனித நினைவிலி (Individual Unconscious) யில் வெளிப்படுத்தப் பட்டாமல் நின்று போயிருக்கிறதோ அதற்கு ஒரு குரல் கொடுக்கத் தயாராக இருப்பதில்தான் நவீன இலக்கியத்தின் சக்தி அடங்கியிருக்கிறது என்ற கருத்து கால்வினோவுக்கு உண்டு. நினைவிலி என்பது சொல்லக்கூடாதவற்றின் ஒரு சமுத்திரம்-மொழியின் நாட்டிலிருந்து நாடுகடத்தப்பட்டவை, புராதன தடை உத்தரவுகளால் விலக்கி வைக்கப் பட்டவை. நினைவிலியானது கனவு களின் வாயிலாகவும், வார்த்தைத் தடுமாற்றங்களிலும், திடீர் இணைவு களிலும், கடன் பெற்ற சொற்களைக் கொண்டு, திருடப்பட்ட குறியீடு கள்ளைக் கொண்டு, மொழியியல் கள்ளச் சரக்குகளைக் கொண்டு பேசுகிறது - நனவுலகின் மொழியில் இலக்கியம் இந்தப் பிரதேசங்களை சேர்த்துக் கொள்ளும் வரை இலக்கியம் தன்னால் சொல்ல முடியாத ஒன்றைச் சொல்ல யத்தனிக்கும் போது அது தனக்குத் தெரியாததையும் சொல்லயத்தனிக்கிறது. இங்கேதான் ஸர்ரியலிஸ்டுகளின் ஆட்டோமேடிக் எழுதுதல் (automatic Writing) பற்றி நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். வார்த்தைகள்

மற்றும் படிமங்களின் தன்னிச்சையான தொடர்புபடுத்தல்களில் ஸர்ரியலிஸ்டுகள் நமது அறிவார்த்த தர்க்கத்திற்கு முற்றிலும் எதிர்ப்பான தொரு புறவய தர்க்கத்தைக் கண்டுபிடிக்கின்றனர். அறிவற்றதின் (Irrational) வெற்றியைக் குறிக்கிறதா இது என்று கேட்கிறார் கால்வினோ. இதன் மூலம் படைப்பாக்கத்தில் நினைவிலியின் பங்கு கூடுதலாக வலியுறுத்தப்படுகிறது. வார்த்தை விளையாட்டுகளிலும் தொடர்புபடுத்தல்களிலும் மனிதனுக்கு இருக்கும் ஈடுபாட்டினை மனோவியல் ரீதியாக நியாயப் படுத்துகிறார். இதற்காக எர்னஸ்ட் க்ரிஸ்(Ernst Kris) மற்றும் எர்னஸட் கோம்ரிக் (Ernst Gmbrich) ஆகிய ஃபிராய்டிய கலை விமர்சகர்களை துணைக்கு அழைத்துக் கொள்கிறார். இந்த விவாதப் புள்ளிகளிலிருந்துதான் இலக்கிய யந்திரத்திற்கான (The Literature Machine)வரையறையை நோக்கிச் செல்கிறார் கால்வினோ.

கால்வினோவின் மென் உணர்வுகள் அவரின் மிக விரிவானதும் வேறுபட்டதும் அதே சமயத்தில் ஆழ்ந்த கிரகிப்பு மிக்கதுமான வாசிப்பலிருந்து உருவாயின. மறுமலர்ச்சிக்கால ஆசிரியர்களிலிருந்து சமகாலத்தவர்கள் வரையிலான அவரது வாசிப்பின் வீச்சு மிகவும் ஆச்சரியமிக்கதாய் இருக்கிறது. இதாலிய இலக்கியத்தின் மிகப் பெரிய இலக்கியாசிரியர் **கலீலியோ** என்று ஒரு முறை குறிப்பிட்டார். இதற்கான எதிர்ப்பும் மாற்றுக் கருத்தும் அவரது சமகால நாவலாசிரியரான **கார்லோ கசோலா** விடமிருந்து புறப்பட்டது. மிகப்பெரிய இதாலிய இலக்கிய ஆசிரியர் **தாந்தேவா**கத்தானே இருக்க முடியும் என்று **கசோலா** கேட்டார். உரைநடையாசிரியர் என்று தான் குறிப்பிட்டதாக ஒரு பேட்டியில் தெளிவுபடுத்தினார் கால்வினோ. குறிப்பாக **கலீலியோ** பயன்படுத்திய மொழியின் கச்சிதத்தன்மை, கவித்துவ-விஞ்ஞான கற்பனைத் திறன் போன்றவை இன்றைய எழுத்தாளனையும் வியக்கச் செய்யக் கூடியதாக இருக்கிறது. மேலும் கலீலியோவை ஒரு விஞ்ஞானி என்று மாத்திரம் **கசோலா** சொல்வதை நிராகரிக்கிறார் கால்வினோ. **தாந்தே** பிரபஞ்சத் தன்மையானதும் என்சைக்குளோபீடியத் தன்மையானதுமான ஒரு படைப்பினை உருவாக்கிய போதிலும் (டிவைன் · காமெடி) அந்தப் பிரபஞ்சத்தின் படிமத்தை எழுதப் பட்ட வார்த்தைகளின் வழியாகவே உண்டாக்கினார். **தாந்தே** விலிருந்து தொடங்கி **கலிலியோ** வரையிலான இவ்வகை எழுத்துக்கான அர்ப் பணிப்பு மிக ஆழமாய் வேரூன்றிய ஒன்றாகும்: இலக்கியப் படைப்பானது இந்த உலகத்தின் வரைபடமாய் அமைந்து அறியக் கூடியதாக இருக்கிறது என்பதும் அறிவுக்கான தாகத்தினால் . எழுதுதல் உந்தப்படுகிறது என்பதும். இந்தப் பாரம்பரியம் எல்லா ஐரோப்பிய இலக்கியங்களிலும் காணக் கிடைக்கிறது. பின் வந்த நூற்றாண்டுகளில் இத்தன்மை மங்கிப் போய் மீண்டும் இருபதாம் நூற்றாண்டில் தனது முழு வீச்சினை அடைந்திருக்கிறது. ஏறத்தாழ இதே அளவு உக்கிரத்துடன் இயற்கை விஞ்ஞானம் என்ற நூலை எழுதிய **பிளினி முதியவர்** (Pliny The Elder) பற்றி தனது கருத்துக்களை முன் வைத்திருக்கிறார் கால்வினோ.

சேர்மானம்(Combination), வார்த்தை விளையாட்டு (Word-play), அறிவை மிஞ்சி விகசிக்கும்-படைப்புக்

கூறு ஆகிய அம்சங்களில் கால்வினோவுக்கு இருந்த ஈடுபாடுதான் அவரை ரேமண்ட் க்வேனூ தலைமையில் இயங்கிய OULIPO (le Ouvroir de Litterature Potentielle) இயக்கத்துடன் தன்னை அடையாளம் காண வைத்தது. அவரது ஓய்வற்ற, துணிகரமான சோதனைப் புதினங்களுக்கு OULIPO வும் பக்கபலமாய் அமைந்தது. தொடக்க காலத்தில் கால்வினோ எழுதியவை அத்யந்தமான நேச்சுரலிச புதினங்கள் என்று கூறுவதே சரியாக இருக்கும். எனினும் அவர் ரகசியமாக புனைவு எழுத்துக்களை எழுதிக் கொண்டிருந்தார். சிறிது சிறிதாய் அவருக்கு மெட்டா ஃபிக்ஷனிலும் ஈடுபாடு உண்டாயிற்று. **ரேமண்ட் க்வேனூ** 1960களில் OULIPO பள்ளியை தொடங்கினார். அதில் எவ்வளவு எழுத்தாளர்கள் இருந்தனரோ அவ்வளவு கணிதவியலாளர்களும் இருந்தனர். OULIPO இயக்கம் நாவல் ஒரு சமுதாய ஆவணம் (Social Document) என்பதை ஏற்க மறுத்தது. அதற்குப் பதிலாக சில விரிவான வார்த்தை விளையாட்டுக்களை யதேச்சையான கணிதவியல் சட்டங்களை அனுசரித்து நாவலில் எழுத வேண்டும் என்று விரும்பினர் OULIPO இயக்கத்தினர்.

ஒரு பிரதி எழுதப்படவிருக்கும் தொடக்கத்தில் ஒரு எழுத்தாளனுக்கு சாத்தியமுள்ள வார்த்தைத் தேர்வுகள் அளவற்றதாய் இருப்பதால் அவனது தேர்வைச் சுருக்கிக் கொள்ளும் பொழுது ஒரு தனித்தன்மை கிடைக்கிறது. இதனால் நாவலாசிரியனுக்கு புதினத்தின் சட்டகத்தை நேரடியாகக் கையாண்டு கட்டுப்படுத்தும் அனுகூலம் உண்டாகிறது. இதற்கு சிறந்த உதாரணமாக **ஜார்ஜ் பெரக்**(Georges Perec) எழுதிய A VOID நாவலைக் குறிப்பிடலாம் அவர் 'e' என்ற எழுத்தே இல்லாமல் முழு நாவலையும் எழுதியிருக்கிறார் இந்த வடிவாக்கத் தேர்வு அதன் விளைவாய் உண்டாகும் , சாராம்சத்தை நேரடியாகப் பாதிக்கக் கூடியதாக இருக்கும். வேறெந்த யதார்த்தப் புனைகதையை விட உள்வயமான ஒருங்கிணைப்பைக் கொண்டிருக்கிறது பெரக்கின் A VOID நாவல். பாத்திரங்கள், சூழ்நிலைகள், மற்றும் உரையாடல்கள் மனோவியல் ரீதியாக அன்றி தர்க்க ரீதியாக அமைந்துள்ளன. கால்வினோ OULIPO இயக்கத்தைத் தழுவிய போதிலும் பிற வடிவங்களை முயன்று பார்ப்பதை நிறுத்தி விடவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

கால்வினோவின் OULIPO திட்டங்களின் உச்சகட்ட மாகத்தான் அவருடைய The Castle of Crossed Destinies (1969) வெளிப்பட்டி ருக்கிறது. சொல்லுக்கும் படிமத்திற் கும் இடையிலான இடைவெளியை இந்த நூலில் அகற்ற முயல்கிறார் கால்வினோ. வழிதவறிப் போன பயணிகள் ஒரு காட்டின் மத்தியில் அமைந்துள்ள கோட்டைக்கு வந்து சேர்கின்றனர். ஆனால் தமது பேச்சாற்றலை அனைவரும் இழந்து போயி ருப்பதையும் கண்டு பிடிக்கின்றனர். ஒரு மேஜையின் முன்னால் அமர்ந்து கொள்கி[illegible] அவர்கள் அங்குள்ள டேரோ கார்டுகளை வைத்து தங்கள் துணிகரப் பயணங்களை மற்றவர் களுக்கு விளக்க முயல்கின்றனர். இதன் விளைவாக வாசகனுக்குக் கிடைப்பது மண்டலம் போன்ற, ஒன்றுக்குள் ஒன்று பிணைந்த சிக்கலான கதைகள். ஒன்றுக்கும் மேற்பட்ட அர்த்தப் பாடுகளும் இந்தக் கதைகளில் கிடைக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி யிருக்கிறார் கால்வினோ

டேரோ சீட்டுக் கட்டுக்களில் அமைந்த சாத்தியமுள்ள சகல கதைகளையும் கால்வினோ சொல்ல முயல்கிறார். சீட்டுகளின் யதேச்சை அமைப்புகளின் வழியாக அவரால் ஏற்கனவே பிரபலமான பல தொல்கதைகளையும் புராணிகங்களையும் அடையாளம் காண முடிகிறது: **ஃபாஸ்ட்** (Faust) இடிபஸ் (Oedipus), **ஹேம்லட்** (Hamlet), **பார்ஸிஃபல்** (Parsifal), **மார்க்விஸ் த சேடின் ஜஸ்ட்டின்**. நாவலின் முதல் பாகம்**ஃரியோஸ்டோனின் அர்லாண்டோ ஃபியூரியோசோ** (Orlando Furioso)விலிருந்து இரண்டு கதைகள் நாவலின் மையச் சட்டகமாக அமைத்துக் கொள்கிறது. கால்வினோ எழுதிய புதிய கதைகள் ஒரு மொசைக் தளமாய் உருவாகி தொல்கதைகளின் உள்பார்வைகளைப் பகிர்ந்து கொள்ளக்கூடியனவாக இருக்கின்றன. 1969ஆம் ஆண்டில் இந்த நாவலின் முதல் பகுதியை கால்வினோ எழுதினார். நான்கு வருடங்கள் கழித்து எழுதப்பட்ட இரண்டாவது பகுதி முதலாவதை விட அடர்த்தி மிகுந்தும் சிக்கலாகவும் அமைந்தது. மேஜையின்முன்னால் அமர்ந்திருக்கும் விருந்தினர்கள் ஒவ்வொருவராய்க் கதை சொல்வதில் சற்றுப் பொறுமையிழந்து எல்லோருமே தம் கதையை ஒரேநேரத்தில் சொல்லத் தொடங்குகின்றனர்.

இத்தகைய ஒரு முயற்சிக்குப் பிறகுதான் Invisible Cities என்ற மற்றொரு OULIPO திட்டத்தை எழுதி முடித்தார். 1972இல் வெளிவந்த Invisible Cities கால்வினோவின் மிகப் பிரபலமான நாவல் என்று சொல்வது தவறில்லை. இந்த முயற்சி கால்வினோவை **போர்ஹே** மற்றும் **மிலோராட் பாவிக்** (Milorad Pavic)ஆகியோருடன் ஒப்பிட்டுப் பேச வைத்தது.

Invisible Cities (1972) என்ற நாவல் பல அம்சங்களில் கற்பனைப் பூகோளமாக அமைந்திருக்கிறது. இதில் பிரதான பாத்திரங்களாக இடம் பெறுபவர்கள் இருவர். முதலாமவர் தார்த்தார் மன்னனும் நாடுகளை வெல்பவனுமான **குப்ளை கான்**. மற்றவர் குப்ளை கானுக்கு கதை சொல்பவராக வரும் வெனிஸ் தேசத்து பயணியும் கடல் மார்க்கமாகப் புதிய வழிகளைக் கண்டுபிடித்தவருமான **மார்க்கோ போலோ. குப்ளை கான்** ஒரு மகா பிரக்ஞையைத் தேடிக் கொண்டிருக்கிறார். வேறு எந்த ஒரு தூதுவன் சொல்வதை விடவும் கூடுதல் கவனத்துடனும் தேடலார்வத்துடனும் இந்த இளம் வெனிஸ் கடல் பயணி சொல்வதைக் உற்றுக் கேட்கிறார். ஒவ்வொரு படையெடுப்பு முடிந்து ஓய்வு கொள்ளும் போதும் மார்க்கோ போலோவிடம் அவன் சந்தித்த நகரங்களைப் பற்றி சொல்லச் சொல்கிறார். மார்க்கோ போலோ தன் பயண அனுபவங்களின் நகரங்களைப் பற்றி விளக்கமாகச் சொல்கிறான். அவன் சொல்லும் ஒவ்வொரு நகரமும் பெண்களின் கவர்ச்சிகரமான பெயர்களால் அழைக்கப்படுகிறது--அவற்றைச் சொல்லத் தொடங்கியவுடன் மத்திய கால கையெழுத்துப் பிரதிகளில் உள்ளது போல கவர்ச்சிகரமான ஆபரணங்களைப் போலத் தோன்றுகின்றன. சிறிது சிறிதாய் கதைகள் நவீன அம்சங்களைத் தொட ஆரம்பிக்கும் பொழுது காட்சிகள் கறை படிந்தவையாய், ஈர்ப்பற்றவையாய் மாறுகின்றன. பல நகரங்களைப் பற்றிச் சொன்ன மார்க்கோ போலோ ஏன் சொந்த நகரான வெனிஸ் பற்றிக் கூறவில்லை என்று கேட்கப்பட்டவுடன் சொல்லப்பட்ட எல்லா நகரங்களும் வெனிஸ்

நகரின் ஏதாவது ஒரு அம்சத்தினைக் கொண்டுதான் இருக்கின்றன என்கிறான். அவன் சொல்லும் சிதைவுபட்ட கதைகளில் ஏதோ ஒரு விதமான அர்த்தத்தைத் தேடுகிறார் வயோதிக குப்ளை கான். அதிகாரத்தின் மீது சலிப்படைந்திருக்கும் கான் உறுதியளிக்கப்பட்ட ஒரு விமோசன நகரினை இந்த நகரங்களுக்குள் கண்டுபிடிக்க முயல்கிறார். மார்க்கோ போலோ சொல்வதனைத்தையும் கான் நம்புவதில்லை. சில நேரங்களில் தனக்கு கனவில் வந்த ஒரு நகரம் நிஜத்தில் எங்காவது இருக்கிறதா என்றும் கேட்கிறார். இதை ஒரு விதமான மெட்டாஃபிக்ஷன் (கதைபற்றிய கதை அல்லது கதை மீறும்கதை) என்று சொன்னோமானால் இதை விடத் தீவிரமான மெட்டாஃபிக்ஷன் என்று சொல்லக் கூடிய If On a Winter's Night A Traveller நாவலை 1979ஆம் ஆண்டு எழுதினார்.

இந்த நாவல் முழுக்க முழுக்க தன்னைத் தானே சுட்டிக் கொள்ளும் ஒரு புனைகதை. இதை ஒரு எதிர்நாவல் (Anti-Novel) என்றும் கூறலாம். இதில் வாசிப்பின் செயல்பாடே கதைத்திட்டமாக இருக்கிறது. பிரதான பாத்திரமாக வாசகனை ஆக்குவதன் மூலமும் நாவலின் செயல்-காலத்தை நிஜகாலத்துடன் பொருத்துவதன் மூலமும் நாவல் மிக்வும் அறிவார்த்தமாக ஆவதைக் குறைத் திருக்கிறார் கால்வினோ. நாவல் ஒரு ரயில் நிலையத்தில் தொடங்குகிறது. வாசகன் தவிர பிற வாசகன்(கி) வாசிக்காதவன்(வள்) ஆகியோரைப் பற்றிய குறிப்பும் நாவலில் இல்லாமல் இல்லை. கால்வினோவின் வாசகன் கால்வினோ எழுதிய நாவல் இதுவென நினைத்து வாங்கிச் சென்று படிக்கும் பொழுது இரண்டாவது அத்தியாயத்திற்குப் பதிலாக வேறு ஒரு நாவலின் முதல் அத்தியாயம் அத்துடன் இணைக்கப் பட்டிருப்பதைக் கண்டுபிடிக்கிறான். புத்தகக் கடைக்குச் சென்று பாக்கிப் புத்தகம் எங்கே என்று கேட்கும் பொழுது கால்வினோவின் புத்தகம் Tazio Bazakbal என்ற போலந்து நாட்டு எழுத்தாளரின் புத்தகமான Outside the Town of Malbork உடன் கலந்து போய்விட்டதாகத் தெரிகிறது. இதே அளவு கால்வினோவின் புத்தகத்தால் ஏமாந்து போன லூட்மிலா என்ற மற்றொரு வாசகியை சந்திக்கிறான். இருவருமே நுழைவாயிலுக்கு மேலே செல்ல முடியாதவர்களாகி இருப்பதை ஒரு விதமான சதி என்று கண்டு பிடிக்கின்றனர். இந்த சதியானது கோர்வையைத் தவிர்ப்பதற்காகச் செய்யப் பட்டிருக்கிறது. கையெழுத்துப் பிரதிகளை போலி செய்து குழப்பத்தை உண்டாக்குபவன் மொழிபெயர்ப்பாளனாக இருக்கலாம். ஒவ்வொரு அத்தியாயமும் தொடக்கத்திலேயே நின்று போய்விடுகிறது. பல கதைகள் தொடங்கப்படுகின்றன. ஆனால் எதுவுமே முடிவுக்கு வருவதில்லை. மூன்றாவது நபர் யார்? நூலகர்களாக இருப்பவர்கள் போலீசாராக இருக்கலாமோ? கதைகளின் தந்தை என்ற ஒன்று லத்தீன் அமெரிக்காவில் எங்காவது இருக்குமா? அல்லது இவை எல்லாமே ஒரு கம்ப்யூட்டரால் எழுதப்பட்டவையா? காதலர்கள் ஒருவருக்கு மற்றவர் தங்கள் வாசனையைத் தந்து விட்டு மானசீகமாக மற்றவரின் உடலைப் படித்துக் கொண்டிருக்கிறார்களா? இப்படி ஏராளமான கேள்விகளை எழுப்புகிறது இந்த நாவல். அந்த பத்து அத்தியாயங்களும் சமகாலத்தின்

நாவல் எழுதும் முறைகளை கிண்டல் செய்கின்றன. **போர்ஹே, ஜேம்ஸ் ஜாய்ஸ், ஸிக்மண்ட் ஒபிராய்ட், சார்த்தர், தாஸ்தயெவ்ஸ்கி, காஃப்கா, நெபக்கோவ், தாமஸ் மன், தாமஸ் பின்ச்சன்** ஆகியோரின் மொழி நடைகளையும் எதிரொலிகளையும் கால்வினோவின் நாவலில் படிக்க முடிகிறது. ஒரு மொழிபெயர்ப்பாளனின் வெற்றிகரமான கனவாக இந்த நாவல் ஆக முடியும். அதிலும் பல நவீன நாவலாசிரியர்களை ஒரே தளத்தில் இணைக்கும் துணிச்சலும் கால்வினோவுக்கு மாத்திரமே உண்டு. இதில் வரும் மொழிபெயர்ப்பாளன் போலிகள், கள்ளச்சரக்குகள், வெட்டிஒட்டல்கள், விலக்கப்பட்ட பிரதிகள் ஆகியவற்றால் உருவாக்கப் படும் ஒரு இலக்கியத்தை கனவு காண்கிறான். ஜப்பான், லத்தீன் அமெரிக்கா, பெல்ஜியம், அயர்லாந்து, போன்ற நாடுகளின் கதைகளுடன் மூன்று கற்பனையான நாடுகளின் கதைகளும் இந்த நாவலில் காணப்படுகின்றன. ஆனால் இவை யாவும் தடைபடுவதற்குக் காரணம் ஆசிரியனின் தற்கொலை அல்லது புத்தகம் திருடுபோதல் அல்லது திடீரென்று கைது செய்யப் பட்டிருத்தல் காரணமாக இருக்க முடியும். வாசகனும் வாசகியும் இணையும் பொழுது நாவல் முற்றுப் பெறுகிறது.

1977ஆம் ஆண்டு Fantastic Tales என்ற கதைகளைத் தொகுத்தார் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட அதீதப் புனைவுக் கதைக்ள் அடங்கியது இந்த நூல். இதில் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க எழுத்தாளர்களின் இருபத்தாறு 'கிளாஸிக்' புனைவுக் கதைகள் சேர்க்கப்பட்டுள்ளன. கால்வினோ இந்த நூலுக்கு ஒரு முன்னுரையும் எழுதி கதைகளுக்கு சிறு குறிப்புகளும் தந்திருக்கிறார். இந்த நூல் அதீதப் புனைவின் ஜெர்மானிய தொடக்கங்களில் ஆரம்பித்து **ஹென்ரி ஜேம்ஸின்** பிசாசுக் கதைகள் வரை விரிகிறது. **பால்ஸாக், டிக்கன்ஸ், துர்கனேவ், ராபர்ட் லூயி ஸ்டிவென்சன்** போன்ற பிரபலமான எழுத்தாளர்கள் முதல் அதிகம் பிரபலமாகாத **யான் போட்டோக்கி, வெர்னன் லீ** வரை இதில் சேர்க்கப் பட்டிருக்கின்றனர். **ஆ.ட்டி.எ.ஹாஃப்மேனின்** மிக இன்றியமையாத கதையான சாண்ட் மேன் இதில் இடம் பெற்றுள்ளது. தவிரவும் கால்வினோவுக்கும் பிற ஐரோப்பிய இலக்கியவாதிகளுக்கும் மிகவும் அத்யந்தமான **ஊட்கர் அலன் போவின்** கதைக்ளும் உள்ளன.

மிஸ்டர் பலோமர்(Mr.Palomar) 1985ஆம் ஆண்டு வெளிவந்தது. **மிஸ்டர் பலோமர்** கால்வினோவின் படைப்புகளிலேயே மிகவும் நினைவு கூறத் தக்கவர். **மிஸ்டர் பலோமர்** தனது விடுமுறைக் காலத்தை எப்படிக் கழிக்கிறார் என்பதுதான் புதினத் திற்கான கதைகளாய் ஆகிறது. இந்தக் கதைகளின் நீண்ட உரைநடைப் பகுதிகளில் கடினமான உருவகங்கள் ஆங்காங்கே செருகப் பட்டிருக்கின்றன. இந்த உலகின் நிகழ்முறைகளை உற்றுக் கவனித்து பதிவு செய்வதற்கான ஒரு லென்ஸ் கருவியாக மிஸ்டர் பலோமர் கால்வினோவுக்குப் பயன்படுகிறார் பலோமரின் பெயரில் ஒரு வானவியல் தொலைநோக்கி இருக்கிறது அலைகளை, நட்ஷத்திரங்களை, பால்வெளி மண்டலத்தை, ஒட்டகச் சிவிங்கிகளைப் பற்றியெல்லாம் ஆழ்ந்த தியானத்தில் ஈடுபடுகிறார் மிஸ்டர் பலோமர் இந்தக் கதைகள் 'விடுமுறையில் மிஸ்டர் பலோமர்', 'நகரத்தில் மிஸ்டர் பலோமர்', 'மிஸ்டர்

பலோமரின் மௌனங்கள்' என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மொலாய்(Molloy) என்கிற **சாமுவெல் பெக்கட்டின்** பாத்திரத்தின் பாதிப்பையும் நம்மால் மிஸ்டர் பலோமரிடம் பார்க்க முடிகிறது. மிஸ்டர் பலோமரை நாம் ஏன் பின் தொடர வேண்டியிருக்கிறது என்றால் அவரது அவதானிப்புகள் சகலமும் நிலையாகக் கச்சிதமிழந்தும் கச்சிதம் அடைந்தும் காணப் படுகின்றன. இந்தக் கதைகளைப் பற்றி கால்வினோவின் கருத்துக்களை இங்கே மேற்காட்டுவது பொருத்தமாக இருக்கும்:

It[Mr.Palomar] is a kind of diary with minimal problems of knowledge, ways of establishing relationships with the world, and gratifications and frustrations in the use of silence and words.

("Exactitude" in Six Memos for the Next Millennium p.75)

Difficult Loves (1985) தொகுதியில் உள்ள பல கதைகளுக்கு சாகசங்கள் அல்லது துணிகரச் செயல்கள் என்று கால்வினோ பெயரிட்டிருக்கிறார். ஒரு மத்தியதர வர்க்கத்துப் பெண்மணி முதல் முறையாகக் கடலில் நீந்தும் போது தனது நீச்சல் உடையின் கீழ்ப்பாகம் கழன்று போயிருப்பதைக் கவனித்து மன உளைச்சல் அடைகிறாள். எதையுமே புகைப்பட மாக்கினால்தான் அதன் அழகினை ரசிக்க முடியும் என்ற மனோபாவம் வந்துவிட்ட ஒருவன் தன் காதலியை இழக்கிறான். வாசித்தலில் ஆழ்ந்த ஈடுபாடு கொள்கிறவனுக்கு எதிர்பாராது வந்து கிடைக்கும் காதலும் செக்ஸும் கூட இடைஞ்ச லாகவே இருக்கிறது. திருமாண பெண் ஒருத்தி, தன் வீட்டை விட்டு வெளியில் இரவு முழுவதும் ஒரு விருந்தில் கழித்த பின் ஒரு விடுதியில் இளங்காலை விடிவதை நேர்கொள்வது சாகச செயலாகவே கருதப்பட வேண்டுமா என்ற கேள்வி தொக்கி நிற்கிறது. ராணுவ வீரன் ஒருவனின் விநோத ரயில் பயணமும் பயணத்தில் கிடைக்கும் ஒரு விதவைப் பெண்ணின் அருகாமையும் அந்த அருகாமையை அவன் இம்மி இம்மியாக அடைய முயல்வதும் மிக நேர்த்தியான சித்தரிப்புகள். **ஸ்மாக்**(Smog) என்ற குறுநாவலும் A Plunge into Real Estate என்ற மற்றொரு குறுநாவலும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. ஸ்மாக் என்ற கதை இன்றைய சூழல் சுகாதாரச் சீரழிவினை அன்றே துல்லியமாக எதிர் கொண்டிருக்கிறது.

Numbers in the Dark (1943-1985) இதுவரை சேகரிக்கப் படாமலிருந்த கால்வினோவின் கையெழுத்துப் பிரதிகளை ஒருங்கிணைத்து தொகுக்கப்பட்ட ஒரு பிரதிநிதித்துவ தொகுதி. 1943ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி 1985ஆம் ஆண்டு வரையிலான அவரது மிகச் சிறந்ததும் மிக சாதாரண மானதுமான படைப்புகளை உள்ளடக்கியிருக்கிறது-ஒரு முடிக்கப்படாத நாவல் உட்பட. யதார்த்தக் கதைகள், நீதிக் கதைகள், சோதனைக் கதைகள் என நிறைய வகைமைகளைப் பார்க்க முடிகிறது இந்தத் தொகுப்பில். இதில் மிகவும் துணிகரமான முயற்சி என்று சொல்லப்படக் கூடியதாய் இருப்பது The Burning Of The Abominable House. இது கம்ப்யூட்டரால் எழுதப்பட்டிருக்க முடியக் கூடிய கதை. இந்தத் தொகுதியில் Qfwfq பற்றிய புதிய தொல்கதைகளும் உள்ளன- இந்தப் பிரபஞ்சத்தின் பிறப்பையும் இறப்பையும் குறிக்க ஏதுவாய். The Queen's Necklace கதையை ஒரு நாவலாக எழுதுவதற்கு

கால்வினோ திட்டமிட்டிருந்ததாகத் தெரிகிறது. காசனோவாவின் நினைவுக் குறிப்புகள் கூட நாவலாக எழுதுவதற்கான நோக்கத்துடன் தொடங்கப்பட்டு முடிக்கப்படாமல் நின்று போனதுதான்.

The Road to San Giovanni(1993), Under the Jaguar Sun (1992), Six Memos for the Next Millennium(1996) போன்ற மூன்று புத்தகங்களும் கால்வினோவின் இறப்புக்குப் பின்னரே வெளிவந்தன.

*1972*ஆம் ஆண்டு கால்வினோ ஐம்புலன் உணர்வுகளைப் பற்றி கதைகள் எழுதத் திட்டமிட்டு தொடங்கினார். *1985*இல் அவர் இறப்பின் போது 'Under the Jaguar Sun', 'The King Listens', 'The Name, The Nose' ஆகிய மூன்று கதைகள் மாத்திரமே எழுதி முடிக்கப் பட்டிருந்தன. தொடுதல் மற்றும் பார்வை ஆகிய இரண்டு புலன்கள் பற்றிய கதைகள் மாத்திரம் எழுதப்படாமல் நின்று போய்விட்டன. 'The King Listens' இல் வரும் கொடுங்கோல் அரசன் தனது அதிகாரத்தினாலே சிறை பட்டுப் போயிருப்பது மட்டுமன்றி அவனது கேட்கும் உணர்வுகளால், காதுகளினால் சிறைபட்டுப் போயிருக்கிறான். அவனது அரண்மனையே ஒரு மாபெரும் காது போல இயங்குகிறது, முரண்படும் செய்திகளை-விடுதலை, காதல், காட்டிக் கொடுத்தல் என - மாற்றி மாற்றித் தந்த வண்ணம். 'The Name, The Nose' கதை நனவோடை உத்தியைப் பயன் படுத்துகிறது. இந்தத் தொகுப் பின் மிகச் சிறந்த கதையாக இதைக் கூறலாம்.

The Road to San Giovanni(1993) சுயசரிதைக் கட்டுரைகள் அடங்கியது. தலைப்புக் கட்டுரை கால்வினோவின் குழந்தைப் பருவக்கால வீட்டினைப் பற்றிய சித்தரிப்பாய் அமைகிறது. அவரது விடலைப் பருவக் காலத்திலிருந்து அவருக்கு திரைப்படம் பார்ப்பதில் இருந்த ஈடுபாட்டினைப் பதிவு செய்கிறது 'A Cinema-Goer's Autobiography'.

Six Memos For the Next Millennium (*1996*) கால்வினோவின் முதிர்ச்சிக் காலத்தில் எழுதப்பட்ட மிக முக்கியமான கட்டுரைகளாக இருக்கின்றன. *1984*ஆம் ஆண்டு ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் Charles Eliot Norton Lectures இல் பேசுவதற்கு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இதற்கான உரைகளாக கால்வினோ தயாரித்த கட்டுரைகள்தான் Six Memos For the Next Millennium. பிறகு நூலாக ஒன்று சேர்க்கப்பட்டது. அவர் மொத்தம் எட்டு உரைகள் நிகழ்த்து வதற்கான திட்டம் கொண்டிருந்ததாக கால்வினோவின் மனைவி **எஸ்தர் கால்வினோ** தெரிவிக்கிறார். இந்த உரைகள் நிகழ்த்த ஹார்வர்டு பல்கலைக் கழகத்திற்கு செல்ல ஆயத்தமாய் இருந்த சயமத்தில்தான் கால்வினோ திடீரென மூளையில் ஏற்பட்ட ஸ்ட்ரோக் காரணமாக காலமானார். இந்தக் கட்டுரைகள் மூலமாய் நமக்குத் தெரிய வருகிற கால்வினோ மறுமலர்ச்சிக்கால இலக்கியங் களிலிருந்து இன்றைய மானுடவியல் வரையில் ஊன்றிப் படித்தவராக, பழைய இலக்கியங் களுக்கும் நவீன இலக்கியங்களுக்கும் ஒரு தொடர்ச்சியைக் காண்பவராக இருக்கிறார். முதல் கட்டுரையான 'லேசுத்தன்மை' கிரேக்கப் புராணிகத் திலிருந்து தொடங்குகிறது. கால்வினோவைப் பொருத்தவரை எல்லாப் பெரிய இலக்கியமும் ஒரு

விதமான என்சைக்குளோபீடியத் தன்மையை தன்னுள்ளே கொண்டிருக்கும். லேசுத்தன்மைக்கு எடுத்துக்காட்டாக மறுமலர்ச்சிக் கால இதாலியக் கவிஞரான **கேவல்கான்ட்டியைச்** சுட்டுகிறார். லேசுத்தன்மை அளவுக்கே 'விரைவுத்தன்மை'யும் இலக்கியத்தில் முக்கியமானது. இதற்கடுத்த முக்கியப் பண்பாக அவர் சுட்டுவது 'கச்சிதத்தன்மை'. அடுத்து வருபவை 'புலனாகும் தன்மை'யும், 'பன்முகத் தன்மை'யும். இந்தக் கட்டுரைகளின் வழியாக கால்வினோவுக்கு போர்ஹே மீதிருந்த தனி மதிப்பைப் பார்க்க முடிகிறது. போர்ஹே பற்றிய கால்வினோவின் கருத்து பின்வருமாறு:

What I particularly wish to stress is how Borges achieves his approach to the infinite without the least congestion, in the most crystalline, sober, and airy style.

("Quickness" in Six Memos for the Next Millennium p.50)

கால்வினோ அளவுக்கே நவீன இதாலிய இலக்கியத்தில் சாதனை படைத்திருக்கிற **பிரைமோ லெவி** தான் கால்வினோவுடன் பகிர்ந்து கொண்ட நேரங்களையும் இணைந்து ஈடுபட்ட மொழிபெயர்ப்பு வேலையையும் பற்றி ஒரு கட்டுரையில் நினைவு கூர்கிறார். **ரேமண்ட் க்வேனூ**வின் The Portable Little Cosmogony யை கால்வினோ மொழிபெயர்த்திருக்கிறார். அப்போதிருந்த மொழிபெயர்ப்பைப் பற்றிய அதிருப்பதியால் கால்வினோ முதலில் அதை சீர்திருத்தினார். ஆனால் பிறகு அவர் செய்த திருத்தங்களிலேயே கால்வினோவுக்கு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. **க்வேனூ**வின் இந்த புனைவுக் கவிதை பிரபஞ்சத்தின் தொடக்கத்தில் ஆரம்பித்து கம்ப்யூட்டர்களில் முடிகிறது. இதில் ஒரு பகுதி முழுக்க முழுக்க ரசாயனம் பற்றி அமைந்திருக்கிறது. இவ்வளவு சீர்திருத்தங்களுக்குப் பிறகும் சில முடிச்சுகள் இந்த இதாலிய மொழிபெயர்ப்பில் இருந்து கொண்டேயிருந்தன. அவற்றை க்வேனூவாலேயே அவிழ்க்க முடியாமலிருந்தது. அந்த நூல் எழுதப்பட்ட பத்து வருடங்கள் கழித்து அது பற்றிக் கேட்கப்பட்ட பொழுது தான் அதில் என்ன சொல்ல வந்தார் என்பது மறந்து போய் விட்டதாகக் கூறிவிட்டார் க்வேனூ. இந்த சமயத்தில்தான் க்வேனூவின் கவிதை மொழிபெயர்ப்பைச் சீர் மொழியாக்கம் செய்வதற்கு **பிரைமோ லெவி** கால்வினோவுடன் இணைந்து செயல்பட்டிருக்கிறார். கால்வினோவின் தனித்தன்மை என பிரைமோ லெவி குறிப்பிடுவது ஒரு தியானிக்கும் நிலையிலும் அவை நகைச்சுவை உணர்வு கொள்ளத் தூண்டுவன*:

I would say that this meticulous touch, worthy of a scientist, is present in the literary fabric of all Calvino's books. Although he didn't have a degree in science, he was in fact a scientist. A reader of "Cosmicomics" senses that it is no mere amusement, but an extremely profound book, one to be meditated on, page by page. And this ability to make one laugh and meditate at the same time is the disctinctive mark of Calvino.

(Primo Levi)

கால்வினோவை **ஜோர்ஜ் லூயி போர்ஹே**வுடன் ஒப்பிட்டுப் பேசிய நவீன அமெரிக்க நாவலாசிரிரான **ஜான் பார்த்**தும் ஏறத்தாழ **பிரைமோ**

லெவியின் கருத்துக்களை வேறு ஒரு வகையில் எதிரொலிக்கிறார்:

Here, I thought, was a sort of Borges without tears, or better, a Borges *con molto brio*: lighter-spirited than the great Argentine, often downright funny (as Sr. Borges almost never is), yet comparably virtuosic in form and language, comparably rich in intelligence and imagination.

("The Parallels!" Italo Calvino and Jorge Luis Borges-John Barth.)

ஒரு எழுத்தாளனின் பெரிய சவால் எதுவாக இருக்க முடியும் என்று கேட்கப்பட்ட பொழுது கதாபாத்திரத்தை உருவாக்குவதே என்று **போர்ஹே** கூறினார். ஆனால் நினைவில் நிற்கும்படியான கதாபாத்திரங்கள் என்று போர்ஹே எதையும் சிருஷ்டிக்கவில்லை. இதற்கு மாறாக விசேஷமாய் ஞாபகம் கொள்ளும்படியான குப்ளைகான், **மார்க்கோபோலோ, மார்க்கோ வேல்டோ** மற்றும் **மிஸ்டர் பலோமர்** போன்ற பாத்திரங்களை கால்வினோ உருவாக்கியிருக்கிறார். இது தவிர நகைச்சுவையுணர்வுக்கு **போர்ஹேஸிடம்** இடமில்லை. ஆனால் தீவிரத்தன்மை எதுவும் குறைந்து விடாமல் நகைச்சுவை உணர்வினை உண்டாக்குபவை கால்வினோவின் கதைகள். குறிப்பாக **சார்லிசாப்ளின்** தன்மையான **மார்க்கோவேல்டோ**வின் அனுபவங்களைச் சொல்லலாம்.

நீதிக் கதைகள் போலத் தெரியக் கூடிய சிறிய சிறுகதைகள் பற்றி தனித்த அபிப்பிராயம் கொண்டிருந்தார் கால்வினோ. அவற்றை 'raconttini' என்ற இதாலியச் சொல்லால் அழைத்தார். ஃபாஸிஸ அடக்கு முறைக் காலத்தில் வெளிப்படுத்துவதற்கு உகந்த ஒரு வடிவமாய் இந்த சிறிய சிறுகதைகளை கால்வினோ தேர்ந்தெடுத்தார். அடக்கு முறைக் காலங்கள் முடிந்தவுடன் இம் மாதிரியான சிறுகதை வடிவங்களுக்கான தேவை இல்லாது போய் விடும் என்றும் அவர் கருதினார்:

One writes fables in periods of oppression. When a man cannot give clear form to his thinking, he expresses it in fables. These little stories correspond to a young man's political and social experiences during the death throes of Fascism.

ஆனால் அவர் தமது இளமைக் காலத்திற்குப் பிறகும் தொல்கதைகள் எழுதிக்கொண்டிருந்ததை நம்மால் பார்க்க முடியும்.



[சிறுகதை]

வைக்கோல் பரப்பின் மேல் ஒரு குழந்தை

மிஷேல் துர்னியே

பிரெஞ்சிலிருந்து தமிழில் ஜெயராஜ் தனியேல்



பிரெஞ்சு எழுத்தாளரான மிஷேல் துர்னியே பாரீஸில் 1924 ஆம் வருடம் பிறந்தார், தொன்மம். இரட்டைப் பிறப்பு. தூய்மை. குறியைப்பற்றிய அறிவாகிய நுண்பொருள். வரிசைக்கிரமத்தின் சிதைவு போன்றவை இவர் எழுதிய புதினங்களிலும். சிறுகதைகளிலும் கருப்பொருளாய் அமைந்துள்ளன, இவர் எழுதிய கதைகளில் சில – **Vendredi ou les Limbes du Pacifique, 1967 ; le Roi des aulnes, 1970 ; les Météores, 1975 ; Gaspard, Melchior et Balthazar, 1980 ; la Goutte d'or, 1986** இன்னும் பிற சிறு கதைகள், இவர் குழந்தைகளுக்காகவும் பல கதைகள் எழுதியுள்ளார்,

இரவுக்காற்று தடவிக் கொடுக்கும் மூவர்ணக் கொடியை கற்பனை செய்து கொள்ளுங்கள். அதன் மீது வெளிச்சத்தை பாய்ச்சுகிறது சிறுதிரைப் படக்கருவி. கொடி சிறிதாக்கப்பட்டு, எலிசே அரண்மனையின் முகப்பு பிரமாண்டமான வெளிச்சத்தில் தோய்கிறது. ஒரே ஒரு சன்னலில் மட்டும் விளக்கு எரிகிறது. சன்னல் மட்டும் பிரதானமாகிப் பிறகு அது பின்னுக்குத் தள்ளப்பட்டு நாம் உள்ளே நுழைவதைப் போன்றதொரு பிரமை ஏற்படுகிறது. கனல் அடுப்பருகில் புன்னகைப் பூத்தவாறு குடியரசுத் தலைவர் ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். அடுப்பில் தீ நாக்குகள் நடனமிடுகின்றன.

பெரியோர்களே, தாய்மார்களே இன்று காலையிலிருந்து குழந்தைகளுக்குப் பள்ளி விடுமுறை ஆரம்பமாகிவிட்டது. வருட முடிவில் நாம் கொண்டாடும் பண்டிகைகளால் கிராமங்களும், நகரங்களும் களை கட்டத் தொடங்கி விட்டன. இன்னும் சில தினங்களுக்குள் கிறிஸ்துமஸ் பண்டிகை வந்து விடும். ஒரு வாரம் கழித்து சில்வெஸ்தர் புனிதரின் விழா. குடியரசுத் தலைவர் நாட்டு மக்களுக்கு வழக்கமான வாழ்த்துச் சொல்லும் நேரமிது. நான் அந்தக் கடமையிலிருந்து தவற மாட்டேன். ஆனால் இந்த வருடம் என்னுடைய வாழ்த்துச் செய்தி புதுமையானதாக இருக்கும். அதாவது, உங்களிடம் ஒரு முக்கியமான புரட்சிகரமான திட்டமொன்றைத் தெரிவிக்கப் போகிறேன். ஆம்! குடியரசுத் தலைவரிடமிருந்து புரட்சிகரமான, அதே சமயம் அதிசயமானதொரு திட்டம்!

அதுவும் கிறிஸ்துமஸ் விழாவுக்கு முன்! இதோ அதன் விவரம் :

நம் சமுதாயத்தைப் பீடித்துள்ள தீமைகளைப்பற்றி பேசும் பொழுது போதைமருந்து, வன்முறை, புகை பிடித்தல், மது குடித்தல், சாலை விபத்துகள் போன்றவற்றைப் பட்டியலிடுகின்றோம். இவ்வித தீமைகளால் பலியாவோரின் எண்ணிக்கை மிகவும் பயங்கரம். இத்தீமைகளை எதிர்த்து சளைக்காமல் போரிட்டு இறப்போரின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவது அவசியம். ஆனால், நம்மிடையே உள்ள மிகச்சிலரே இவைகளைப்பற்றிக் கவலைப் படுகிறோம். அதே சமயம், இவைகளை விடக் கொடுமையான, மிகவும் வெறுக்கத்தக்க ஒரு தீமை இருக்கத்தான் செய்கிறது. அதனால் மக்களின் வாழ்க்கைத்தரமே பாதிக்கப்படும் அபாயம் இருக்கிறது. அத்தீமைக்கு இதுவரை எவரும் பெயர் வைத்ததில்லை. வேண்டுமானால், மருந்து வியாதி மருத்துவமனை வியாதி, மருந்தக வியாதி, இன்னும் இதுபோல் எப்படி வேண்டுமானாலும் பெயரிட்டழைக்கலாம். அட, பெயரில் என்ன இருக்கிறது? அதனால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கைதான் முக்கியம். மற்ற தீமைகளால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையை விட இந்த வகை தீமையால் துயருறுவோரின் எண்ணிக்கை அதிகம் என்றே சொல்ல வேண்டும். தீமைகளை அவைகளின் விளைவுகளை வைத்தே எடை போட வேண்டும். அதாவது, சுருங்கச் சொல்வுதென்றால் நாட்டு வருமானத்தைவிட, நோய்களுக்காகச் செலவிடப்படும் தொகைதான் ஒவ்வொரு வருடமும் கூடிக்கொண்டே போகிறது. நாம் எங்கே போகிறோம்? விடையளிப்பது சுலபம். ஆனால் கவலையளிக்கும் விஷயம்! சாதாரணமாக கணக்கிட்டாலே, ஒவ்வொரு வருடமும், மாதமும், தினமும் மருத்துவச் செலவு எவ்வளவு அதிகரிக்கிறது என்பதைத் துல்லியமாகச் சொல்லிவிட முடியும். கற்பனை செய்து பார்க்க முடியாத வாழ்க்கையை நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதாவது, நாம் உணவு உண்பதை விட மருந்துகளையே அதிகமாக உட்கொள்கிறோம். நமது சொந்த வாகனங்களை விட ஆம்புலன்ஸ் வண்டிகளையே அதிகமாய் உபயோகிக்கிறோம்! மருந்தையே அணிகலனாக்கிக் கொள்கிறோம்! மிகவும் கொடுமையானதொரு நிலைமை!

இதிலிருந்து மீள என்ன வழி? மருத்துவ உலகின் அறிவு ஜீவிகளைக் கேட்டுப் பார்த்தேன். பெரிய வல்லுனர் குழுக்களை இதைப்பற்றி யோசித்து ஒரு வழி காண உதவுமாறு வேண்டினேன், வழி வேறொன்றுமில்லை. அந்தத் தீமையை வேரறுக்க வேண்டும். வேர் எங்கே இருக்கிறது? எது நம்மை நோயாளியாக்குகிறது? மெய்யாகவோ அல்லது பொய்யாகவே ஏதோ ஒரு நோயின் பெயரைச் சொல்லிக் கொண்டு இருப்பதற்கு என்ன காரணம்?

கடைசியாக ஒரு முயற்சி செய்தேன். நாங்கள் பிறந்து வளர்ந்த கிராமமும், எங்களைக் கவனித்துக் கொண்ட குடும்ப மருத்துவரும் நினைவுக்கு வந்தன. எனக்கும் என் தம்பி தங்கைகளுக்கும் அவர் மருத்துவம் பார்த்தார் என்று சொல்வதை விட இயற்கையின் வழியில் குறுக்கிடாமல் இருந்தார் என்று தான் சொல்ல வேண்டும். இயல்பாகவே நாங்கள் குணமடைந்து விடுவோம் என்று அவர் நினைத்ததால், எங்களுக்கு அதிகமாக மருந்துகள் கொடுக்கவில்லை. ஆம், எங்கள் குடும்ப மருத்துவர் ஓர் சிறந்த அறிவாளி. அப்படிப்பட்ட ஒருவரிடம் நான் ஆலோசனை கேட்டேன். மருத்துவத்துறை அதிகாரிகள் என்னிடம் அனுப்பிய கோப்புகளை அவரிடம் அனுப்பினேன். அவர் அந்தக் கோப்பை படித்தாரா என்று எனக்குத் தெரியாது. ஏனெனில் அவர் வெகு சீக்கிரமாகவும், சிரத்தையுடனும் பதிலெழுதியிருந்தார். மூன்று பக்கங்களில்

எழுதப்பட்ட கடிதம் அது. விலையுயர்ந்த ஷெர்ஃபா(ன்) மஷோர் பேனாவால் கத்திரிப்பூ நிற மையினால் எழுதப்பட்டிருந்தது. அவர் அந்தக் கடிதத்தில் என்ன எழுதியிருந்தாரென்றால்

அதைப் பற்றி நான் பேசுவதை விட, நீங்களே படித்துக் கொள்வது மிகச் சிறந்தது! இதோ படியுங்கள்!

மரியாதைக்குரிய குடியரசுத் தலைவர் அவர்களுக்கு,

என் பிரியமுள்ள ப்ரான்சுவா,

உங்களை முதன் முதலில் இவ்வுலகைப்பார்க்கச் செய்து உங்களுடைய குழந்தைப் பருவத்தைக் கவனித்துக் கொண்ட என் போன்ற சாதாரண மருத்துவரை நீங்கள் நினைவில் வைத்திருப்பது எனக்கு மிகவும் பெருமையும் மகிழ்ச்சியும் அளிக்கிறது. உண்மையைச் சொல்வதென்றால் நீங்களாகவே வந்தீர்கள், நீங்களாகவே வளர்ந்தீர்கள். எனக்கு அதில் எந்தப் பங்கும் இல்லை. ஆனால் இப்பொழுது ஒரு முக்கியமான தேசிய பிரச்சனையை என் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளீர்கள் மிகச் சிறந்த மருத்துவ மேதைகளால் தீர்த்து வைக்க முடியாத ஒரு பிரச்சனையை இப்பொழுது மருத்துவத் தொழிலையே மறந்து விடும் நிலையில் இருக்கும் என்னிடம் ஒப்படைத்துள்ளீர்கள். மருத்துவ உலகில் சிறந்து விளங்கும் அந்த மேதைகள் போதுமான அதிகாரம் இல்லாததால் இந்தச் செலவினத்தைப்பற்றி ஒன்றும் செய்ய முடியாதவர்களாய் இருக்கிறார்களோ என்னவோ?

மாண்புமிகு குடியரசுத் தலைவரே, ஆயுத தயாரிப்பு செலவைக் குறைப்பதற்கு நீங்கள் ராணுவ தளபதியையா கலந்தாலோசிப்பீர்கள்? விளையாட்டுக்குச் சொல்லவில்லை. உங்கள் கேள்விக்கு பதில் சொல்ல நான் முன் வந்ததற்கான காரணம் என்ன தெரியுமா? நான் இப்பொழுது வைத்தியம் பார்ப்பதில்லை, உங்களுடைய கேள்வி நான் வளர்த்த ஒரு பூனையைப் பற்றி, அதுவும் குறிப்பாக ஒரு பெண் பூனையைப் பற்றி யோசிக்க வைத்தது. என் தோட்டத்திற்கு அப்பாலிருக்கும் புதர்கள் அடர்ந்த பரந்த வெளியில் குட்டி போடுவதற்கு அது விரும்பியது. ஒரு நாள் அதைப் பார்த்தேன். வயிறு ஒட்டி, கண்களில் ஒரு வித ஒளிக்கீற்று தோன்றும்படி படுத்திருந்தது. எனக்குப் புரிந்துவிட்டது. ஓஹோ, இதற்குத்தான் ஒவ்வொரு நாளும் பக்கத்து வீட்டுக்காரனின் நிலத்திற்கு ஓடியதோ! அதற்குத் தொல்லை தராமல் எச்சரிக்கையாக இருந்தேன். வாரங்களும் மாதங்களும் பறந்தோடின. ஒரு நாள் காலை என் சன்னல் வழியாகப் பார்த்தேன். அந்தப் பூனை அழகான தன் நான்கு குட்டிகளுடன் விளையாடிக் கொண்டிருந்தது. சிறிது காலம் பக்கத்து வீட்டுக்காரனின் தோட்டத்துப் புதரொன்றில் இருந்து விட்டு இப்பொழுது தான் முதல் முறையாக சுவரேறிக் குதித்துக் கொண்டிருந்தன. முன் எச்சரிக்கையில்லாமல் கதவைத் திறந்தேன். பூனை என்னை வரவேற்றது; ஆனால், குட்டிகள் நான்கும் திசைக்கொன்றாய் ஓடி ஒளிந்தன. அது இயற்கை என்று ஏன் எனக்குத் தோன்றவில்லை? மனிதர்களின் சந்தடி இல்லாத இடத்தில் பிறந்து வளர்ந்த பூனைகள் காட்டு மிருகங்கள் தானே! அவைகளை நாம் பழக்கப்படுத்துவதற்கு முன், மனிதர்களைக் கண்டாலே அவைகளுக்குப் பயம் தானே. பழக்குவதா! நான் அதைத் தான் செய்தேன். முதலில் தூரத்தில் ஆரம்பித்து, பிறகு கொஞ்சங்கொஞ்சமாக வீட்டருகில் அவைகளுக்கு உணவு கொடுத்துப் பழக்கினேன். ஒரு நாள் ஒரு குட்டி என் வீட்டு சமயலறை வரைக்கும் வந்து விட்டது. அப்பொழுது நான் கதவை மூடி விட்டேன். வந்தது வம்பு. யாரோ அதைக் கொலை செய்வதைப் போல அலற ஆரம்பித்து விட்டது. மரச்சாமான் மீது ஏறி தட்டுகளையும், பூந்தொட்டிகளையும் உருட்டி விட்டது.

கடைசியில், சன்னல் கண்ணாடியில் மோதி, ஒரு பறவையைப் போல மயக்கமுற்றுக் கீழே விழுந்தது. அது தான் சமயமென்றெண்ணி குட்டியை எடுத்து வெளியில் விட்டேன். சுதந்திரக்காற்றை சுவாசிக்கட்டும் என்று.

மரியாதைக்குரிய குடியரசுத் தலைவரே! இதைப் போன்ற அநாவசியமான நிகழ்வுகளை உங்களிடம் ஏன் சொல்கிறேன் என்று எனக்கே குழப்பமாயிருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் தான் மிகவும் இயற்கையாக வாழ்வின் யதார்த்தத்தை, ஏன் வாழ்வையே படம் பிடித்துக் காட்டுகின்றன. காலத்தினூடே தோட்டத்தில் நிகழ்பவை ஒவ்வொன்றும் குழாய்களிலும் குடுவைகளிலும் செய்யப்படும் சோதனைகளை ஒத்திருப்பதைக் காணலாம். மேலும், நான் ஒரு யதார்த்தவாதி, ஒரு களப்பணியாளன் என்பதால் நீ)ங்கள் என்னிடம் ஆலோசனை கலக்க விரும்பினீர்கள் என்று நினைக்கிறேன். உள்ளெழுந்த கேள்விக்கு விடை காண களப்பணி செய்யும் என்னிடம் ஆலோசனை கேட்டுள்ளீர்கள்.

பூனைகளைப் பற்றிய என் ஆய்வு கடந்த வாரங்களில் எனக்குள் எழுந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்தது. இயற்கை அன்னையின் மடியில் பிறந்த அந்தப் பூனைக்குட்டிகள் வீட்டில் வளர்க்க முடியாதவைகளாகி விட்டன. காட்டுச் சூழ்நிலை அவைகளின் மனதில் ஆழமாய்ப் பதிந்து விட்டது. மிருகங்களை வளர்க்கும் என் பக்கத்து வீட்டுக்காரரிடம் இதைப்பற்றி பேசினேன். அவர் சொன்ன அதிசயமான செய்தி இதோ! ஒரு கன்றோ அல்லது ஒரு கோழியோ காட்டில் பிறந்திருந்தால் அந்தக் காட்டின் சூழ்நிலை தொழுவத்தில் பிறந்தவைகளை விட வெகுவாகப் பாதித்திருக்கும். அதனால் தான் வளர்ப்பவர்கள் தங்கள் மிருகங்கள் வெட்ட வெளியில் குட்டி போடாதவாறு பார்த்துக் கொள்கிறார்கள்.

இதோ கொஞ்சம் கொஞ்சமாக உங்களுடைய பிரச்சனைக்கு வருகிறேன். மிருகங்களிடம் உள்ள சில குணப்பண்புகள் மனிதர்களுக்கும் உள்ளதை நாம் அறிவோம் அல்லவா? குழந்தை தன் தாயின் உடலை விட்டு வெளியே வந்தவுடன் எந்தச் சத்தத்தைக் கேட்கிறதோ, எந்த வெளிச்சத்தைப் பார்க்கிறதோ, எந்த வாசனையை நுகர்கிறதோ அதுவே அந்தக் குழந்தையின் ஆழ் மனத்தில் பதிந்து விடுகிறது. எப்படி நாய் வாலை நிமிர்த்த முடியாதோ அப்படியே இந்த ஆழப்பதிந்த குணாதிசயமும் மாற்றவே முடியாத அளவுக்கு பதிந்து விடுகிறது. சரித்திரத்தைக் கரைத்துக் குடிக்கவில்லையென்றாலும், ஓரளவுக்கு சரித்திர நாயகர்களின் பிறப்பைப் பற்றி எனக்குத் தெரியும். ஆகஸ்ட் மாதம் 15ந் தேதி அழாக்சியோ (Ajaccio) தேவாலயத்தில் சாம்பிராணிப் புகையை நுகர்ந்து கொண்டு ஆர்கன் இசையைக் கேட்டவாறே நெப்போலியன் பிறந்ததை நாம் அறிவோம். ஸ்டாலின் பிறந்த போது கோரி (Gori) என்ற ஊரில் நிலநடுக்கம் ஏற்பட்டதாம். 1889-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ந் தேதி இட்லர் பிறந்த பொழுது, ப்ரோனோ (Braunau) என்ற இடத்தில் இருந்த பழமரங்களெல்லாம் கடும் பனியில் கருகி விட்டனவாம். சரித்திர நாயகர்கள் பிறக்கும் பொழுதெல்லாம் விவரிக்க இயலாத ஒரு நிகழ்ச்சி நடக்கும் என்று முன்னோர்கள் நம்பினார்கள். இதை அப்படியே திருப்பிப் பார்க்க வேண்டும். அதாவது, குழந்தைகள் சரித்திர நாயகர்களாக வேண்டுமானால் அவர்கள் பிறக்கும் சூழ்நிலையில் ஏதாவதொரு அதிசயத்தக்க மாற்றம் செய்தாக வேண்டும். கடந்த ஐம்பது வருடங்களாக பிள்ளை பெறும் சூழ்நிலையில் புரட்சிகரமாகவோ அல்லது ஓரளவுக்குச் சொல்லும்படியாகவோ ஏதாவது நடந்திருக்கிறதா என்பதை எண்ணிப் பார்ப்போம். முன்பெல்லாம் பிள்ளைகள் வீட்டிலேயே பிறந்தன. குடியரசுத் தலைவரே, உங்களையே

எடுத்துக் கொள்ளுங்களேன். உங்களுடைய அம்மா உங்களை பிரசவித்த அந்த அறை இன்னும் என் நினைவிலிருக்கிறது. தங்களுக்குத் தெரியாமலேயே ஒவ்வொரு பெற்றோரும் ஒரு விவசாயக்குழந்தை, தொழிலாளிக் குழந்தை, கைவினைஞர் குழந்தை, மீனவக் குழந்தை அல்லது கோடீஸ்வரக் குழந்தை என்று தங்களுக்குள்ளே ஒரு முத்திரையைப் பதித்துக் கொண்டு தானே பிறந்தன? அது நல்லதோ, கெட்டதோ? தெரியாது. என்னுடைய வயசுக்கொத்தவர்கள் கடந்த காலத்தின் ஏதாவதொரு அம்சத்தை விரும்புகிறார்கள் என்பது குறித்து நான் எச்சரிக்கையாய் இருக்கிறேன். ஆனால் கடந்த 50 வருடங்களாக எல்லாம் மாறிவிட்டன. இப்பொழுதெல்லாம் பிள்ளை பெறுவதற்கு அதி நவீன வசதிகள் கொண்ட மருத்துவமனையை நாடிச் செல்வோரின் எண்ணிக்கைப் பெருகி விட்டது. இப்புதிய முறை மிகவும் பாதுகாப்பானதும், சுகாதாரமானதுமாகிவிட்டது.

பிரமிக்கும் படியான வகையில் பிறப்பில் இறப்பு விகிதம் வெகுவாகக் குறைந்து விட்டது. ஆனால் இந்த முறையின் சூழ்நிலை எப்படிப்பட்டது? இப்புதிய முறையின் மூலம் குழந்தை பிறப்பு முத்திரை எந்தச் சூழ்நிலையில் விழுகிறது என்பதை நாம் கவனிக்கத் தவறிவிட்டோம். ஆம், பிறப்பு முத்திரை! இதோ இந்த முறையில் தான் மகப்பேறு மருத்துவ நிபுணர்கள் கணினியின் துணை கொண்டு செயலாற்றுகிறார்கள். உறுதியாகச் சொல்லுகிறேன். இப்பொழுது குழந்தைகளெல்லாம் பிறக்கும் போதே கிருமி நாசினியின் நாற்றத்தை முகர்ந்து கொண்டே பிறக்கின்றன. மருத்துவ மின்சாதனங்களின் உரசல் சத்தத்தைக் கேட்கின்றன. வெளியில் வந்தவுடன் அவர்கள் காணும் காட்சிகள் என்ன தெரியுமா? அறுவை சிகிச்சை அளிக்கப்படும் அறையில் வெண்ணிற ஆடை மற்றும் முகக்கவசம் அணிந்து கொண்டு ஆவிகளைப் போல் நடமாடுபவர்களைத்தான். இப்படிப்பட்டச் சூழ்நிலையில் பிறக்கும் குழந்தைகள் தங்கள் பிறப்பு முத்திரையின் விளைவாய் எப்பொழுதும் மருத்துவமனையையோ, மருந்துகளையோ, ரசாயனங்களையோ நாடும் ஒருவித மனநோயாளிகளாகவே மாறி விடுகிறார்கள் என்று நான் அடித்துச் சொல்லுவேன்.

மரியாதைக்குரிய குடியரசுத் தலைவரே, இதோ நீங்கள் கேட்ட கேள்விக்கு என்னுடைய பதில் : சமுதாயக்காப்பீட்டு திட்டத்தினால் ஆகும் அதிகப்படியான செலவுகளுக்கான காரணம் நான் சொன்ன குழந்தை பிறப்பு முறைதான் : குழந்தைகள் தாங்கள் கழிக்கும் ஒவ்வொரு விநாடியிலும், நிமிடத்திலும், மணி நேரத்திலும் தங்கள் பிறப்பு முத்திரையின் விளைவை அனுபவித்துக் கொண்டுள்ளன என்ற நடைமுறை உண்மையே இதற்குச் சான்று.

ஆகவே என்ன செய்வது? பிறப்பு, காதல், இறப்பு, இவைகள் நோய்களன்று. இவையாவும் மனிதனின் விதிப்பயன்களின் செயல்பாடு. இதை மருத்துவர்கள் ஒன்றும் செய்து விட முடியாது. முதலில், குழந்தை பிறப்பு முறையை, நஞ்சாகிய மருந்து வாசனையிலிருந்து விடுபடச் செய்வோம். இதோ என்னுடைய திட்டம் : ஒவ்வொரு முறையும் ஒரு தாய் குழந்தையைப் பெற்றெடுக்க விழையும் பொழுது, அவள் எந்த இடத்தில் எப்படிப்பட்ட சூழ்நிலையில்; அதாவது, எப்படிப்பட்ட பிறப்பு முத்திரை தன் குழந்தைக்கு உகந்தது என்று தாய் நினைக்கிறாளோ அப்படிப்பட்ட சூழ்நிலையைத் தேர்ந்தெடுக்கட்டும். குழந்தைக்குப் பெயர் சூட்டும் உரிமையைப் போல, குழந்தையைப் பெற்றெடுக்கும் சூழ்நிலையைத் தேர்வு செய்யும் உரிமையையும் அவளுக்குத் தரவேண்டும். அவள் தேர்வு செய்ய வசதியாக

எண்ணற்ற சூழ்நிலைகள் உருவாக்கப்படவேண்டும். எதிர்வரும் காலங்களில் அது வெள்ளை மலையாகவோ (Mont Blanc) பாறைகள் நிறைந்த முலைத் தீவாகவோ (l'île de Sein). பசிபிக் மகா சமுத்திரத்தின் அடர்ந்த தீவுகளாகவோ, சகாரா பாலைவனத்தின் மணல் மேடுகளாகவோ, வெர்சாய் (Versailles) அரண்மனையில் கண்ணாடிகள் . வரிசையாக வைக்கப்பட்டிருக்கும் அறையினுள்ளோ அல்லது ஈபில் கோபுரத்தின் மூன்றாவது மாடியாகவோ கூட இருக்கலாம். அப்படி பலதரப்பட்ட சூழ்நிலையில் பிறக்கும் குழந்தைகள் பல்வேறு தொழில்கள் செய்யும் ஆவலோடு வளர்வார்கள். நிச்சயமாக, மருத்துவமனை முன்பும், மருத்தகங்களின் முன்பும் நீள் வரிசையில் காத்திருக்க மாட்டார்கள்.

மரியாதைக்குரிய குடியரசுத் தலைவருக்கு என் அன்பு வணக்கங்கள்...

கடிதத்தைப் படித்துவிட்டு அருகிலிருந்த சிறு மேசையில் வைத்தார் குடியரசுத் தலைவர். பிறகு, புன்னகை பூத்தவாறே நேயர்கள் பக்கம் பார்வையைத் திருப்பினார்.

எனதருமை தேசபக்தர்களே! இந்த நூதனமான, புரட்சிகரமான திட்டத்தைத்தான் உங்கள் முன் வைக்கிறேன். அடுத்து வரும் வசந்தகாலத்திலிருந்து பேறுகாலத்தை எதிர்நோக்கும் தாய்மார்களுக்கு இத்திட்டத்தை அறிமுகப்படுத்த எல்லா ஏற்பாடுகளும் செய்தாகி விட்டன. இனி அவர்கள் தங்கள் விருப்பப்படி எப்படிப்பட்ட பிறப்பு முத்திரை வேண்டுமானாலும் தங்கள் குழந்தைகளுக்கு அளிக்கலாம். ஆனால் இந்த நிமிடமே, இதோ உங்களுடன் பேசிக் கொண்டிருக்கும் இந்தக்கணத்திலிருந்தே, இப்புதிய பிறப்பு முறைத் திட்டத்தைத் தொடங்கி வைக்க விரும்புகிறேன். என் பேச்சை செவி மடுத்துக் கொண்டிருக்கும் தாய்மார்களுக்கு ஒரு வேண்டுகோள்; என்னுடைய தொலைபேசி எண் 42928100. உங்களுடைய பேறு காலம் சமீபத்திலிருந்தால் உடனடியாக என்னைத் தொடர்பு கொள்ளுங்கள். நீங்கள் நேரடியாகவே தொடர்பு கொள்ளலாம். முதன்முதலில் தொடர்பு கொள்ளும் தாய்க்கு அவர் விரும்பியபடி அனைத்து வசதிகளும் செய்து தரப்படும். என்ன, சரியா?

புன்னகைத்தவாறே குடியரசுத் தலைவர் கைகளைக் கட்டிக் கொண்டு, மோவாயைக் கைகளின் மீது ஊன்றியவாறு அமைதி காக்கிறார். உடனே, தொலைபேசி சிணுங்குகிறது. 15கோடி மக்கள் இந்த நூதனமான உரையாடலை நேரடியாக கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் :-

–ஹலோ? என்றது ஒரு இனிமையான குரல்.

–உம் சொல்லுங்கள். நான் குடியரசுத் தலைவர் பேசுகிறேன்.

–வணக்கம், குடியரசுத் தலைவர் ஐயா!

–வணக்கம், தாய்க்குலமே!

–நான் ஒரு கன்னிப் பெண் என்று திருத்தியது குரல்.

–ஓ, கன்னிப் பெண். உங்கள் பெயர்?

–மரி.

–வணக்கம், மரி அவர்களே. நீங்கள் பேறு காலத்தை எதிர் நோக்கியுள்ளீர்கள். அப்படித்தானே? எந்த நாளில் என்று தெரியுமா?

–டிசம்பர் மாதம் 25 ஆம் நாள் என்று சொல்கிறார்கள் ஐயா.

–இருக்கட்டும், நல்லது, எப்படிப்பட்ட சூழ்நிலையைத் தேர்ந்தெடுக்க விரும்புகிறீர்கள்?

–ஒரு மாட்டுத் தொழுவம், ஐயா. நிறைய வைக்கோலுடன் கூடிய ஒரு மாட்டுத் தொழுவம், ஒரு எருதும், கழுதையும் உடன் இருக்கவேண்டும்

சமாளிப்பதில் கெட்டிக்காரரான குடியரசுத் தலைவரின் கண்கள் வியப்பால் விரிவதை அவரால் தடுக்க இயலவில்லை.

–தொழுவம், மாடு, கழுதை என்று இயந்திர கதியில் திருப்பிச் சொன்னார். நல்லது, நல்லது. உங்களுக்கு நீங்கள் கேட்டபடியே அனைத்தும் கிடைக்கும். கடைசியாக உங்களிடம் ஒரு கேள்வி கேட்கலாமா?

–கேளுங்கள் ஐயா.

–குழந்தை ஆணா, பெண்ணா என்று தெரிந்து கொண்டீர்களா?

–ஆம், ஐயா அது ஒரு பெண் குழந்தை.


–அட, நல்லது. ஒரு பெண்! என்று அதிசயித்த குடியரசுத் தலைவர், சிறிது சங்கடம் நீங்கியவராக சொன்னார் : பையனை விட பெண் அழகு! மிகவும் அமைதியான, மன நிறைவளிக்கக்கூடியவள் பெண்! உங்களுக்கு விருப்பமென்றால் அந்தக் குழந்தைக்கு நான் ஞானத் தந்தையாக விரும்புகிறேன் நொயெல்லா என்று அதற்குப் பெயரிடலாம். அனைவருக்கும் நன்றி வணக்கம்,

(சமுதாயக்காப்பீட்டு திட்டம் - ஃபிரான்சில் நடைமுறையிலுள்ள இந்த சமுதாயக் காப்பீட்டுத் திட்டத்தின்படி பிரெஞ்சு குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் மருத்துவ சலுகை அல்லது உதவி அரசாங்கத்தால் செய்து தரப்படுகிறது, அதற்காக அரசு அலுவலர்களின் சம்பளத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட சதவீதம் கழித்துக் கொள்ளப்படுகிறது,)

●

அடுத்த
மொழிபெயர்ப்பு
இணைப்பிதழ்

மார்க்வெஸ் 75



எல்லாத் தரப்பிலிருந்தும்

மார்க்வெஸ்
பற்றிய எழுத்துக்கள் மட்டும்

வரவேற்கப்படுகின்றன.



[சிறுகதைகள்]

Donald Barthelme

தமிழில் **சா. தேவதாஸ்**

டொனால்ட் பார்த்தெல்மே யின் எழுத்துக்கள் வகைப்படுத்த முடியாதவை. முன் கூட்டியே அர்த்தத்தை அடையாளப்படுத்துவதே வகைப்படுத்துதலின் நோக்கம். ஆனால் பார்தெல்மே முன்கூட்டியே எதனையும் ஏற்பதில்லை. தீர்மானகரமாய் நிலைநிறுத்துவதை வேடிக்கையாய் எதிர்த்து நிற்பவை அவரது எழுத்துக்கள். தன் எழுத்துக்களில் கண்டறிதலுக்காக எல்லையற்ற சுதந்திரத்தை பிரயோகிப்பவர். ஒவ்வொரு விதியையும் ஊனப்படுத்துபவர். அவை புதிய சட்டகங்கள் புதிய படங்களை உருவாக்கத்தலைப்படுகின்றன.

- கிம் ஹெர்ஸிங்கர்

உடனிகழ்காலத்து உலக எழுத்துக்களின் மிகப்பெரும் பிரஜைகளுள் ஒருவர்

- ராபர்ட்கூவர்

கார்லோஸ் காஸ்டிநாடாவை பரிகசிப்பதாய் தோன்றும் *"Teachings of Don.B" II corinthlan's* -ருந்து எழுதுவது: *"For ye suffer fools gladly, seeing ye yourselves are wise"*

... Barthelme's was a specifically urban melancholy, related to that look of immunity to joy or even surprise seen in the faces of cab driers, bartenders, street dealersl, city editers, a wearily taken vow to persist beneath the burdens of the day and the terrcrs of the night. Humour in these conditins lean towaros the anti - transcendent - like jail humour & military rodeo humour, it finds high amusement in failure and loss & it & celebrates survival one day, one disaster, to the next.

- தாமஸ் பிஞ்சன், முன்னுரையில்.

The Teachings of Don B./ Satires ,
Parodies, Fables, Illustrated stoles & Plays of Donaled Barthlme / Ed by kim Herzinger / Turtle Bay Book,N.Y. / 1992.



டான்பியின் போதனைகள்

ஓர் அமெரிக்க புரிதல் முறை

சில வருடங்களுக்கு முன்னர் மன்ஹாட்டனில் மானுடவியல் களப்பணி செய்து கொண்டிருந்தபோது, மேற்குப்பதினோராம் தெருவில், வயது குறிப்பிட முடியாத டான்பி என்னும் பெயருடைய ஓர் ஆளைச் சந்தித்தேன். ஒரு கட்டிடத்தில் சாய்ந்த வண்ணம் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தார் - நான் பார்த்ததிலேயே மிகவும் ஆழ்ந்த தூக்கமாயிருக்கும் அது. நல்ல உயரமும் முரட்டு தாடியும் கொண்டு கிராமிய பாணியில் ஜீன்ஸும் நீலச்சட்டையும் அணிந்திருந்தார். பரிச்சயமானவர் ஒருவர் மூலம் அறிமுகமானபிறகு, அமெரிக்கப் பண்பாட்டிற்கே உரித்தான, மாய காட்சிகளை உண்டு பண்ணும் மூலிகைகளின் இரகசியங்களை அவரறிவார் என்பதை கேள்விப் பட்டிருந்தேன் என்றும் அந்த விஷயத்தில் தொழில்முறை அக்கறை உண்டு என்றும் தெரிவித்தேன். அவர் அறிந்ததை கற்றுக் கொள்ள விருப்பம் தெரிவித்த நான், அது குறித்துப் பேசலாமா என வினவினேன். பதிலளிக்காமல் வெறுமனே என்னை உற்றுநோக்கிய அவர் அப்புறம் வேண்டாம் என்றார். எனினும், என் முகத்தில் காணப்பட்ட ஏமாற்றத்தை கவனித்துவிட்டு, நான் விரும்பினால், இரு வருடங்களில் கழித்து வரலாம் என்றார். இடைப்பட்ட காலத்தில், என் கோரிக்கை குறித்து அவர் எண்ணிப்பார்ப்பார். பின்னர் அவர் தன் விழிகளை மூடிக்கொள்ள, நான் கிளம்பினேன்.

1968 ஆம் ஆண்டு கோடையில் நான் திரும்பினேன், டான்பி இன்னும் அதே கட்டிடத்தில் இன்னும் சாய்ந்தவாறே காணப்பட்டார். அவரது தூக்கம் இப்போது மிகவும் இருண்டிருந்தது, ஆனாலும் என்னை வரவேற்றார். மீண்டும் என்னை போதனை கேட்க வரச்சொல்வீர்களா என்று வினவினேன். என்னை நீண்ட நேரம் நோக்கிவிட்டு, ஆம் என்றார். அசாதாரண யதார்த்த நிலைகளை யாரேனும் ஒருவர் அடைதல் சாத்தியமில்லை, அப்படி யாரேனும் சந்தர்ப்பவசத்தால் அடைந்துவிட்டால், அந்த யாரேனும் ஒருவர் மிகவும் வருத்தப்படுவார். அமெரிக்க பண்பாடு என்பது அஞ்சத்தக்கது என்றும் போதுமான ஆயத்தமின்றி சாதாரணமாய் நுழையத்தக்கதில்லை என்றும் கூறினார். அத்தகு அனுபவத்தின் வேதனை, கிளர்ச்சி, அதிர்ச்சி, பீதி மற்றும் சலிப்பினைத் தாங்கிக்கொள்ள நான் விரும்புகிறேனா எனக் கேட்டார்? உதாரணமாக, நான் தொட்டதுமே கிளர்ச்சியுறும் நபரா? கிளர்ச்சியுறும்

நபரில்லை (அ) வேறெந்த அதீதங்களும் இல்லாதவன் என உறுதிப்படுத்தினேன். அப்போது அவர் சாய்ந்து கொண்டிருந்த கட்டிடத்துக்குள் என்னை இட்டுச் சென்றார். நூற்றுக்கணக்கில் புத்தகங்கள் இரைந்து கிடந்த சிறிய அடுக்குமாடி வீட்டுக்குள் அழைத்துப்போனார். அறை மத்தியில் பிரகாசமாய் எரிந்து கொண்டிருந்தது கணப்பு. மேலும் சில நூல்களை கணப்பில் எறிந்து விட்டு, என்னை அமருமாறு கூறினார், நீண்ட

தொரு உரையாடல் வரிசை என்பதன் ஆரம்ப நிலையைத் தொடங்கினோம். பின்வரும் பகுதி, என் களப்பணி குறிப்புகளிலிருந்து, அயர்வுதரும் இடங்களை விட்டுவிட்டு தெரிவு செய்யப்பட்டது; ஆனால், நான் டான்பியின் பயிற்சி மாணவனாய் இருந்த காலத்தில் நிகழ்ந்ததை துல்லியமாய் பிரதிபலிப்பது.

நம்முடையதினின்றும் வேறுபட்டதொரு உலக விளக்க முறையினை விவரிக்கும் போது தீர்ப்பினை நிறுத்திவைத்தல் என்னும் உத்தியைப் பயன்படுத்துவது அவசியமாகும். இதனை நான் மேற்கொண்டுள்ளேன், அவ்வாறே வாசகரையும் செய்யுமாறு வேண்டுகிறேன்.

ஜூன் 11, 1968

டான்பியின் அடுக்குமாடி வீட்டின் தரையில் சம்மணமிட்டு கோடையில்கூட எங்களுக்கிடையே கணப்பு எரிந்து கொண்டிருக்க, ஒருவரையொருவர் பார்த்தவாறு அமர்ந்திருந்தோம். அறையில் மிகவும் உஷ்ணமாயிருந்ததால் டான்பியிடம் நெருப்பு குறித்து கேட்பதென்று தீர்மானித்தேன்.

கணப்பு ஏன் எரிந்த கொண்டிருக்கிறது, டான்பி? இங்கே இருப்பது உஷ்ணமாயிருக்கிறது.

சிறிது நேரம் பதிலளிக்காமலேயே டான்பி என்னைப் பார்த்தார். "நெருப்பு எரிகின்றது, எரிவது தன் இயல்பாதலால் நெருப்பு எரிகின்றது. நெருப்பு ஒரு நண்பன் ஆனால் அதனை எப்படி நடத்துவதென்பதை ஒருவர் அறிந்திருக்க வேண்டும். கண்ணுக்குத் தெரியாதவகையில் அதனிடமுள்ள ஓராயிரம் அம்சங்கள் கட்டவிழ்த்து விடப்பெற்றால் நமது வாழ்க்கைக்கும் சொத்துக்கும் பாதகம் விளையும். எனவேதான் நம்மிடம் தீயணைப்பு வண்டிகள் உள்ளன. தீயணைப்புவண்டிகள் நெருப்பின் மீது நீரைக் கொட்ட், புலப்படாத அம்சங்கள் அமிழ்ந்து போகும். அவை நெருப்புக்கு அஞ்சுபவை" என்று அப்புறம் கூறினார்.

"டான்பி, ஓர் அம்சம் என்பது என்ன?"

"புலப்படாதுள்ள ஒருவிதப்பிசாசு"

"தரைமீதுள்ள துளையை ஏன் உங்கள் நெருப்பு எரிப்பதில்லை?"

"ஏனெனில் நான் நெருப்பை புரிந்து கொண்டு அதன் இரகசியங்களை அறிந்திருப்பதால். பிலடெல்பியா நகரில் நான் சிறுவனாயிருக்கையில், பல வீடுகளையும் கடைகளையும் இதர கட்டிடங்களையும் பற்றிக் கொண்ட நெருப்பு அவற்றை எரித்து தரைமட்டமாக்கிற்று. ஆனால் நான் அதன் இரகசியங்களை அறிந்திருந்ததால், நான் அறிந்திருந்ததை அது தெரிந்து கொண்டிருந்ததால், என் வீட்டைப்பற்றவில்லை. எனவேதான் அது விலகிப்போயிற்று.

"அதன் இரகசியங்கள் எவை டான்பி?"

டான்பி சிரித்து முழங்கினார்.

"நீ ஒரு முட்டாள். நீ அறிதல் கொண்ட மனிதனில்லை. அறிதல் கொண்டவனே இரகசியங்களைப் புரிந்து

கொள்ளக்கூடும். நான் உனக்கு நெருப்பின் இரகசியங்களைக் கூறினாலும், அவற்றால் உனக்குப் பயனேதும் உண்டாகாது.

"டான்பி, நான் அறிதல் கொண்டவன் ஆக முடியுமா?"

டான்பி மௌனமானார். சில கணங்கள் தன் முழங்கால்களை நோக்கினார். அப்புறம் என்னை வெறித்துப்பார்த்தார்.

"முடியலாம்"

சக்தி மிக்கதும் ஆழமானதுமான கதகதப்புணர்வுடன் கிளம்பிவிட்டேன்.

ஜுன் 13, 1968

டான்பியின் அடுக்கமாடி வீட்டின் தரையில் முன்போலவே அமர்ந்திருந்தோம்.

''அறிதல் கொண்டமனிதன் எத்தகையோன்?"

என்று வினவினேன்.

''அறிந்திருப்பவனே அறிதல் கொண்டோன். அவன் அறிந்திருப்பது மாத்திரமின்றி, தனக்குத் தெரியும் என்பதை தெரிந்திருப்பவனும் கூட. தான் தெரிந்து கொள்ள உதவியாள் ஒருவரை வைத்திருக்கிறான்"

"உதவியாள் என்ன செய்கிறான், டான்பி?"

"அறிதல் கொண்டவன் அறிவதற்கும், தனக்குத் தெரியும் என்பதை தெரிந்து கொள்வதற்கும் உதவுபவன் உதவியாள்."

"உனக்கொரு உதவியாள் உண்டா?"

"நிச்சயமாக"

"உனது உதவியாள் யார்?"

''வான்கோழி'' என்று கூறிவிட்டுச் சிரித்து முழங்கினார்.

அவர் கூறியதைச் சரிவரக் கேட்கவில்லையே என்னும் உணர்வுடன் புறப்பட்டேன்.

ஜுன் 17, 1968

டான்பிக்கு கொஞ்சம் சாப்பாடு கொண்டுவந்திருந்தேன். இருவரும் நிசப்தமாக ரை தானியக் கஞ்சியைக் குடித்தோம். டான் பி சொற்பமாகவே உண்பார் என்பதை கவனித்திருந்த எனக்கு, இரு சாண்ட்விச்சுகள் இருக்கும்போதெல்லாம் இரண்டையும் அவரே உண்டுவிட்டது புதிராகப்பட்டது.

எச்சரிக்கையின்றி "தருமசங்கடமாக உணருகிறாய்" என்றார்.

சற்றுதருமசங்கடமாய் இருந்ததை நானும் ஒத்துக்கொண்டேன்.

"நீ தருமசங்கடப்பட்டதை அறிவேன். நீ உனது இடத்தைக் கண்டறிந்து கொள்ளாததே அதற்கு காரணம். அதனைக் கண்டறியும்வரையும் அறையைச் சுற்றி வா."

"என்ன கூறுகிறீர்கள், அறையைச் சுற்றிவா என்கிறீர்கள்?"

"வெவ்வேறு இடங்களில் அமர்வது போல என்கிறேன்."

டான்பி எழுந்து அடுக்கு மாடி வீட்டிலிருந்து கிளம்பினார். வெவ்வேறு இடங்களில் அமர முயன்றேன். அவர் சொன்னது எனக்கு எதனையும் உணர்த்தவில்லை. நான் அமர்ந்திருந்த இடத்தில் சற்று தருமசங்கடப்பட்டது உண்மையே. ஆனால் அவ்வறையின் வேறெந்த இடமும் சிறந்ததாய்த் தோன்றவில்லை. பரீட்சார்த்தமாய் வெவ்வேறு இடங்களில் அமர்ந்தேன், வேறெந்த இடத்தையும்விடச் சிறப்பாயுள்ள எந்த இடத்தையும்.

என்னால் கண்டறிய இயலவில்லை. முன்பைவிடவும் வியர்த்துக் கொட்டி, மேலும் தர்மசங்கடப்பட்டேன். ஒரு மணி நேரம் ஆனது, அப்புறம் இரண்டு மணி நேரம். ஆனால் எந்த ஒரு இடமும் விரும்பத்தக்கதாகவோ தனிச்சிறப்பானதாகவோ தோன்றவில்லை. டான்பி எங்கேயிருந்தார் என வியப்புற்றேன். அப்போது தென் சுவருக்கு அருகாமையிலுள்ள குறிப்பிட்டதொரு இடம் ஒருவித மஞ்சள் பிரகாசத்தை வெளியிட்டதைக் கண்ணுற்றேன். அதனை நோக்கி வேதனையுடன் அமர்ந்த அந்நிகழ்வுப் போக்கு 12 நிமிடங்கள் நீண்டது. ஆம், அது உண்மையே. மஞ்சள் பிரகாசம் நிரம்பின இடத்தில் என் அசலான இடத்தில் அடைந்திராத இசைவை உணர்ந்தேன். கதவு திறந்தது, டான்பி புன்னகையுடன் நுழைந்தார்.

"எங்கே இருந்தீர்கள், டான்பி?"

"குறிப்பொன்று சிக்கியது. உன்னிடத்தை நீ அறிந்து கொண்டுவிட்டதை கண்டு கொள்கிறேன்."

"சரிதான், டான்பி. என் பழைய இடத்தை விடவும் இது மேலானது."

"நிச்சயமாக. நெருப்புக்கு மிகச்சமீபமாய் அமர்ந்திருந்தாய், முட்டாளே."

"ஆனால் டான்பி இக்குறிப்பிட்ட இடத்திலே கவியும் இம்மஞ்சள் பிரகாசம் என்ன?"

"இது விளக்கு."

நான் ஏறிட்டுப்பார்த்தேன். என் புதிய இடத்திற்குச் சற்று மேலே இரு 150 வாட் பல்புகள் கொண்ட விளக்கு இணைப்பு. அது எரிந்து கொண்டிருந்தது.

மின்சாரத்துடன் தொடர்புடைய சக்தி வாய்ந்த உணர்வோட்டத்துடன் கிளம்பினேன்.

ஜூன் 18, 1968

மீண்டும் நான் அமெரிக்கர் பயன்படுத்தும் மயக்க நிலை தருவிக்கும் மூலிகைகளைப்பற்றி டான்பியிடம் விசாரித்தேன்.

பதிலளிக்காமல், இன்னொரு புத்தகத்தை அவர் கவனத்துடன் தீயிலிட்டார். அது எலியாஸ் அஸ்மோலின் **"Theatrum Chemicum Britannicum".**

"சிறிது நேரம் கழித்து "நான் தும்மினால் பூமி நடுங்குகிறது" என்றார் டான்பி.

சிறிது சந்தேகத்துடன் இவ்வறிவிப்பை வரவேற்றேன்.

"எனக்குக் காட்டுங்கள் டான்பி."

"அறிதல்கொண்டவன் கட்டளையின் பேரில் தும்முவது இல்லை. பொருத்தமானதும் சரியானதுமான நேரத்திலேதான் அவன் தும்முவான், அதாவது, தனது அம்சம் தன் மூக்கினுள் இருக்கையில், தனக்கு கிச்சு, கிச்சு மூட்டுகையில்."

"தும்முவதற்கு எது பொருத்தமானதும் சரியானதுமான நேரம், டான்பி."

"உனது அம்சம் மூக்கினுள் இருந்து கிச்சு, கிச்சு மூட்டுவதுதான் பொருத்தமானதும் சரியானதுமான நேரம்."

"ஒவ்வொருவரும் தனக்கேயான அம்சத்தைக் கொண்டுள்ளனரா, டான்பி."

அறிதல் கொண்டவன் அம்சத்தைப் பெற்றுள்ளவனாகவும் அம்சமானவனுமாக இருக்கிறான். ஆகவேதான் தான் தும்முகையில் பூமி நடுங்கக் கூடிய அளவுக்கு ஆற்றல்மிக்க

விதத்திலே தும்மக் கூடியவனாயிருக்கிறான். அம்சம் என்பது மூக்கு, கைகள், கால்கள், ஈரல் வி ஒட்டுமொத்தமாகும்."

"ஆனால் அம்சம் என்பது பிசாசு என்றீர்கள் டான்பி."

"சிலருக்குப் பிசாசுகள் பிடிக்கும்."

"அறிதல் கொண்டவன் தன் அம்சத்தை அறிந்து கொள்வது எங்ஙனம்; டான்பி?."

"மயக்கநிலை தரும் குறிப்பிட்ட வகை மூலிகைகளைப் பயன்படுத்துவது, அமெரிக்க கலாச்சாரத்திற்கு உரியது."

"நான் அவற்றைப் பயன்படுத்தலாமா?"

டான்பி நெடுநேரமாய் என்னை உற்று நோக்கினார் தீவிரமாய். அப்புறம் கூறினார்,

"பயன்படுத்தலாம்."

அறிவார்ந்த திகைப்புணர்வுடன் புறப்பட்டேன்.

ஜூன் 20, 1968

"அறிதல் கொண்டவனின் நான்கு இயற்கை எதிரிகள் அச்சம், தூக்கம், பாலுணர்வு மற்றும் அக வருவாய் சேவை என்பவையாகும்," என்றார் டான்பி என்னிடம்.

நான் கவனத்துடன் கேட்டேன்.

"ஒருவன் அறிதல் கொண்டவனாகும் முன்பு இவற்றையெல்லாம் வெற்றி கொள்ள வேண்டும்."

"அறிதல் கொண்டவனின் நான்கு இயற்கை எதிரிகளை நீங்கள் வெற்றிகொண்டுள்ளீர்களா, டான்பி?"

"கடைசியாய் உள்ளது தவிர்த்த மற்றவற்றையெல்லாம் அச்சனியன்கள் விட்டுத் தொலைவதில்லை."

"ஒருவர் அச்சத்தை வெற்றிகொள்வது எப்படி, டான்பி?"

"தவளையை எடுத்து ஷூ வுடன் சேர்த்து தைக்க வேண்டும்."

"இடது ஷூ வுடனா (அ) வலது ஷூ வுடனா?"

டான்பி என்னை பரிதாபமாய் பார்த்தார்.

"ஒரு தவளையை மட்டும் ஷூ வுடன் சேர்த்துக் கொண்டு வீதியில் போனால் வேடிக்கையாக இருக்கும். ஒவ்வொரு ஷூ விலும் ஒரு தவளையை சேர்த்துக் கொள்ள வேண்டும்."

"ஷூ க்களில் தவளைகளைக் கட்டி கொள்வது எப்படி அச்சத்தை வென்றிட உதவும் ?."

ஆனால் டான்பி தூங்கிவிட்டிருந்தார். எனக்குள்ளே நான் அலைமோதினேன். தவளைகளிடம் அன்பாயிருத்தல் போன்ற எனது ஆழ்ந்த மதிப்புகள் கேள்விக்குள்ளாக்கப்பட்டன. நான் உண்மையிலேயே அறிதல் கொண்டவனாக விரும்பினேன். ஆனால் எத்தகைய விலை தந்து?

ஜூன் 21, 1968.

இன்று டான்பி என்னை நெடு நேரமாய் நோக்கினார். வழக்கமாகவே ஊடுருவுவதாய் இருக்கும் அவரது பார்வை, ஒருவித முரணியல்பு பெற்றிருந்தது.

"சேவியர் உன்னிடம் நான் விரும்புவது ஒன்றுண்டு. அது உனது நம்பகத்தன்மை. ஒருவர் அறிதல் கொண்டவராக விரும்பினால், நம்பிக்கை முக்கியமானது - உண்மையை காண்பதற்காக. என்றேனும் ஒருநாள்

உன்னால் காண இயலும் என்றெண்ணுகிறேன். ஆனால் காணல் மிகச்சிரமமானது. இருதயத்தின் சிரமமிகு தயாரிப்புடனேயே ஒருவரால் காணுதல் இயலும். எனக்குத் தெரியவில்லை. நான் எதனையும் உத்தரவாதப்படுத்தவில்லை."

"ஒருவர் இருதயத்தை தயார்படுத்துவது எப்படி?"

"மஞ்சள் கதகதப்பு (அ) இளஞ்சிவப்பு பிரகாசத்தால் அதனைத் தூய்மைப்படுத்த வேண்டும். உன்னைப் பொருத்தவகையில் உனக்கு எது சரியானது என்று தெரியவில்லை. நபரைப் பொறுத்து அது மாறும். ஒவ்வொருவரும் தெரிவு செய்து கொள்ள வேண்டும். ஆதலின் நாம் இரண்டையும் முயன்று பார்க்கலாம். ஆனால் இவ்வனுபவம் அபாயகரமானது என்று நான் எச்சரித்தாக வேண்டும். அடுத்த ஒரு மணி நேரத்தில் நீ எப்படி நடந்து கொள்கிறாய் என்பதைப்பொறுத்தது உனது உயிர் நீடிக்கும் வகை. நான் சொன்னவிதம் ஒவ்வொன்றையும் நீ செய்தாக வேண்டும். இது சிறார் சாமாச்சாரமில்லை, பையா."

திகைப்பும் பீதியும் நிரம்பப் பெற்றேன். மேற்கத்தைய மனிதனாகிய நான் என்னையும் என் உறுதியான பற்றுறுதிகளையும் அபாயத்திலாழ்த்தாமல், அமெரிக்கரின் இருண்ட மர்மங்களுக்குள் நுழைதல் கூடுமா? விவரிக்க இயலாத பதற்றத்துடன் ஆழ்ந்த வேதனை என்னைப்பற்றி கொண்டது. அவ்ற்றை நான் அழுத்தி வைத்தேன்.

"சரி டான்பி நீங்கள் அப்படி எண்ணினால் நான் தயார்."

அப்பொழுது டான்பி எழுந்து ஒர் அலமாரிக்குச் சென்றார். அதனைத் திறந்து இரு பாத்திரங்களை எடுத்து, கணப்பருகே வைத்தார். இரண்டாவது அலமாரியைத் திறந்து, சாதாரண இரு குவளைகளை எடுத்து அவற்றையும் தரையில் வைத்தார். அப்புறம் வேறொரு அறையில் நுழைந்து, மூடியுடன் கூடிய ஒரு கலயம், வட்ட வடிவிலான மஞ்சள் பொருள் மற்றும் ஒரு கத்தியுடன் திரும்பினார். எல்லாவற்றையும் கணப்பருகே வைத்தார். அவற்றினருகே மண்டியிட்டு கலவரப்படுத்துவதான மந்திர உச்சாடனத்தை தொடங்கினார். எல்லா வார்த்தைகளையும் என்னால் இனங்காண இயலவில்லை, ஆனால் நகரம், மட்டக்குதிரை, இறகு போன்ற வார்த்தைகள் இருந்தன. நானும் மந்திரத்தை உச்சரிக்க வேண்டுமோ என வியப்புற்றேன். ஆனால் அவரிடம் குறுக்கிட்டுப் பேசத் துணியவில்லை. நகரம் - மட்டக்குதிரை - இறகு என்று உச்சாடனம் செய்யத் தொடங்கினேன்.

திடுமென டான்பி உச்சாடனத்தை திறுத்தி, மஞ்சள் நிறப் பொருளை துண்டிக்கத் தொடங்கினார். அவர் கூறியிருந்த மஞ்சள் கத கதப்பை உண்டாக்குவது இது தானா என வியப்புற்றேன். சீக்கிரமே அவரின் முன்னர் மஞ்சள்-வெள்ளைத்துகள்களின் சிறு குவியலொன்று இருந்தது. அப்புறம் அலமாரியிலிருந்து எடுத்திருந்த பாத்திரங்களில் ஒன்றைத் தூக்கி, நிறமற்ற திரவத்தை நான்கு அவுன்ஸ் வீதம் குவளைகளில் ஊற்றினார். பின்னர் மூடிய விழிகளுடன் சிறிது நேரம் அமர்ந்தார். நானும் விழிகளை மூடினேன். இவ்விதமாக நான்கு நிமிடம் அமர்ந்தோம். எங்கள் பார்வை எங்களை நழுவவிட்டாலும், ஒவ்வொருவரின் பக்கத்திலுள்ள நடுவெளியின் விளிம்பை சுற்றி வந்தது. அவ்வுணர்வு புதிரானதாய், பீதிமிக்கதாய் இருந்தது.

டான்பி விழிகளைத் திறந்து இமைத்து என்னை நோக்கி புன்னகைத்தார்.

இரண்டாவது பாத்திரத்தை எடுத்து, ஒவ்வொரு குவளையிலும் இரண்டாவது நிறமற்ற திரவத்தை ஊற்றினார். - ஆனால் குறைந்த அளவிலே, குவளைக்கு அரை அவுன்ஸ் வீதம், பின்னர் கலயத்தின் மூடியைத் திறந்து, நிறமற்ற



ஆறு பொருட்களை எடுத்து, மூன்று வீதம் இரு குவளைகளிலும் வைத்தார். அப்புறம் மஞ்சள் - வெள்ளைத்துகள்களில் ஒன்றை எடுத்து குவளை விளிம்புகளில் தோய்த்தார். தன் ஆட்காட்டிவிரலால் கலவையைக் குலுக்கி, ஒரு குவளையை எனக்குத் தந்தார்.

“நிறுத்தாது குடித்து விடு, நிறுத்தினால் அம்சம் தோன்றாது போகும். எல்லாம் வியர்த்தமாய் முடியும்.”

டான்பி சொன்னபடி செய்தேன், ஒரே விழுங்காய் குவளையைக் காலியாக்கினேன். உடனடியாய் என் தோள்களில் மூர்க்கமான நடுக்கம் இறங்க, அதிகப்படியான குமட்டல் மூளையில் தலைகாட்டிற்று. தரையில் வீழ்ந்தேன். ஆழ்ந்ததொரு வேதனை, ஒரு மஞ்சள் கதகதப்பு, விவரிக்கவியலாத பதட்டம், ஓர் இளஞ் சிவப்பு பிரகாசம் நிலவுவதை உணர்ந்தேன். பரிகாசமிகு புன்னகையுடன் டான்பி என்னைக் கவனித்துக் கொண்டிருந்தார். எனக்கு வியர்த்தது. என் இரைப்பை எரிந்தது. சிகரெட் தேவைப்பட்டது. என் இடப்புறத்தே, ஆழ்ந்த வேதனை மஞ்சள் கதகதப்புடன் கலக்க, வலப்புறத்தே, விவரிக்கவியலாத பதற்றம் இளஞ்சிவப்பு பிரகாசத்துடன் ஒன்றிணைந்தது. திடீரென, ஆழ்ந்ததொரு வேதனை மஞ்சள் கதகதப்பின் மீது ஒரு காலும், விவரிக்கவியலாத பதற்றம் இளஞ்சிவப்பு பிரகாசத்தின் மீது ஒருகாலுமாக, பாதி மனிதனும் பாதி மிருகமுமாகிய அசுர உருவம் நூறடி உயரத்தில் எழுந்து நின்றது. உண்மையிலேயே ராட்சச உருவம். எந்தவொரு புனைவுப்படைப்பிலும் இதுபோன்ற ஒன்றை நான் கண்டதில்லை. திகைப்புடன் அதனைப் பார்த்தேன். பரிச்சயமானதாயும் அதேவேளையில் புதிரானதாயும் பீதி தருவதாயும் இருந்தது. அப்புறம் அது ஒரு பிரசுரகர்த்தர் என்றும், என்னை நெருங்கி வருகிறது என்றும், என்னிடம் எதையோ விரும்புகிறது என்றும் திகிலுடனும் கலவரத்ததுடனும் உணர்ந்து கொண்டேன். மயங்கி விழுந்தேன். உயிர் பெற்று எழுந்ததும் லூடெக்கில் விருந்துண்ண என்னை எடுத்துச் சென்றது. ஐம்பதுக்குக் குறைவான முன் பணத்திற்கு ஒப்புதலளித்தேன் - இன்னும் நான் அறிதல் கொண்டவன் ஆகவில்லை என்பதை அறிந்திருந்தும் ஏற்றுக் கொண்டேன். ஆனால் அறிதல் கொண்டவனாக இதர புத்தகங்கள் உண்டு, வேண்டுமாயின் டான்பியைச் சந்திக்கலாம் என்று யோசித்தேன்.



டிராகன்

ஒரு நாள் வெளிறியதும் சீரற்றதுமான டிராகன் ஒன்று நோயினைத் தேடி நகருக்கு வந்தது. அலுப்பூட்டுவதும் அதிருப்தியானதும் வரித்தொல்லை மிக்கதும் நோக்கமற்றதுமான தன் வாழ்க்கையை முடித்துவிட எண்ணியிருந்தது. Yellow Pages இல் நோய்களைத் தேடிக் காணாது போகவே, மருத்துவ மனையொன்றில் பதிவு செய்திட தீர்மானித்தது. புனித வேலண்டினில் காவலர் ஒருவரை அணுகி, 'நம்பிக்கையற்ற வார்டுக்கு வழிகேட்டது. உரிய வழி காட்டப்பட்ட அது, அங்கே வெண்ணிற விரிப்புக்களுடன், புதிதாக தயாரிக்கப்பட்டிருந்த படுக்கையைக் கண்டது. படுக்கையுடன் நாபிக்கொடியாய் இணைக்கப் பட்டிருந்த தொலைக்காட்சி பெட்டியை முடுக்கி விட்டுப் பின் நிறுத்தியது. செவிலி ஒருத்தி வேகமாய் நுழைந்தாள்.

நோய்களைக்கருதிய டிராகன் "உங்களிடம் என்ன இருக்கிறது?" என வினவியது.

"எல்லாம், எக்லாம்ப்ஸியா இருக்கிறது. எங்களிடம் இல்லாததே இல்லை. எமது தீவிர அவநம்பிக்கைப்பிரிவு, இத்துறையினர் பொறாமைப்படுவது. உங்களுக்கு எல்லாம் அறிவுறுத்தப்படும். எல்லாம் சரியாகிவிடும். நம்புங்கள், உலகம் சூரியோதத்திற்காக காத்துகொண்டிருக்கிறது."

அதன் பின்னரான பரிசீலனைகள், பரிசோதனைகள், ஆலோசனைகளை லகுவாக கற்பிதம் செய்துகொள்ளலாம். கறாராக. மருத்துவமனை அதற்கு நோயளிக்க மறுதலித்தது. மூன்று நாட்களுக்குப்பிறகு, நிமோனிய ஜுரம் துளியூண்டு தரப்பட்டது.

"உங்களை நம்பினேன்" என்றது செவிலியிடம் அனல்பறக்கும் அதன் விழிகள் வெறுப்புடனும் கண்டனத்துடனும் அவளை ஏறிட்டன,

"சிறுநீரக குழுவுடன் சேர்ந்து பரிசீலித்து முடிவுக்கு வந்து விடலாம் எனச் சிறிது நேரம் எண்ணினேன். ஆனால் அவர்கள் உனது உண்மையான திட்டத்தை அறிந்து கொண்டதும்..." என்றாள் செவிலி.

இன்னும் நோய்களை நினைத்தபடி, டிராகன் மருத்துவமனையிலிருந்து கிளம்பிற்று. வெறி நாய்க்கடி, கீல்வாதம், மலேரியா, கோமாரி போன்ற பல நேர்த்தியான நோய்கள் அதன் மனதில் கடந்து போயின அல்லது வீரன் ஒருவனால் கொல்லப்பட வேண்டும் எனச் சட்டென்று எண்ணிற்று. .

அத்தருணத்தில் சுகாதாரப் பிரிவு கர்னல் ஒருவர் தன் பச்சைச் சீருடையில் நடந்து வந்தார்,

"நீயா, அய்யோ டிராகன், சற்று நேரம் இரு. தெருக்களில் . இன்னும்

Mr.Goodbar உறைகள் கிடக்கின்றன, இரவும் பகலுமாய் எங்களது நபர்கள் உழைத்தும் - மக்கள், மக்கள், மக்களுக்கு ஏதேனும் செய்ய முடிந்தால், அப்போது முடிவின்மைக்கு ஒரு முடிவு கிடைத்து விடும். வெள்ளிக்கிழமை இரவில் வீட்டுக்குப்போகலாம், நெற்றியைத் துடைத்து, சீருடையைக் கழற்றியெறிந்து, கடவுளுக்கு நன்றிசொல்லலாம். ஆனால் உனக்கு - உனக்குப்புதிரான தோற்றம் உள்ளது. நீ என்ன மாதிரியான நபர் ? உன்னை அழிக்கக்கூடுமா ? உருமாறிச்சிதைக்க முடியுமா ? உலாவவந்த சாதாரண பிரஜையா? வேலை தேடுகிறாயா? சதிக்கும்பலைச் சேர்ந்தவனா? தாவரவர்க்கமா? தாதுவர்க்கமா? இரு மதிப்புகள் கொண்டவனா? சுகாதாரப் பிரிவின் தேசிய அக்கறைக்கு விரோதமானவனா? சாகச வெறிகொண்ட பிள்ளையா? கலைப்பொருளா? நகருக்கு வந்துள்ள சர்க்கஸா?"

"அப்படியான்றும் இல்லை, உங்களது பணி குறித்துப்பாராட்டவேண்டும் என்ற ஆவல்கொண்டிருக்கிறேன். உங்கள் உழைப்பு .உண்மையிலேயே சிஸிபியதன்மை வாய்ந்தது" என்றது டிராகன்.

"உன்னைப் பார்த்தால், எங்கள் சுகாதாரப் பிரிவு வண்டிகளில் ஒன்றாய்த் தோன்றுகிறாய் . இப்போது நான் உன்னை நெருக்கமாய் நோக்குகிறேன், சிதைவுற்றுள்ள எங்கள் சுகாதார வண்டிகளுள் ஒன்று நீ இல்லை என்பது உறுதியா?"

"அப்படி நான் எண்ணவில்லை"

"போகட்டும் இது, அடிப்படையில் மிக மோசமான இவ்வுலகில், அருவருப்பான இந்நகரில், மற்றவற்றைப் போலவே இது போகட்டும் இது எனது மதிய உணவு நேரம். உன் பாணி பிடித்துள்ளது, ஓரிடம் தெரியும் லி அமைதியான பேச்சு, பார்வைகளைப் பறிமாறிக் கொள்ளல், அழகிய சேவகியர், டைனர்ஸ் கிளப் மற்றும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கார்டுகள் ஏற்கப்படும்" என்று பெருமூச்சுடன் கூறினார் கர்னல்.

சுவையானதும் வெங்காயம் சேர்ந்ததுமான உணவை அவர்கள் உண்ணத் தொடங்கினர்.

" **west point** இல் பயிற்சி எடுத்தீர்களா ?" என்றது டிராகன்.

"**Sandhurst** - இல். உன்னை வெளிறச்செய்து கொண்டிருப்பது எது ? இறந்து விடவேண்டும் என்னும் ஆசையாய் இருக்கலாம், என்று யூகிக்கிறேன்."

"சரியாய்ச் சொன்னால், அதேதான். இருப்பு குறித்த பிரச்சனையாக இருக்கலாம் அல்லது அதன் எதிர்மறையானது "

"விஷயத்தைத் தொட்டுவிட்டீர்கள் "

"டிராகன்கள் இருக்கவே செய்கின்றன. முட்டாள்தான் அதனை சந்தேகிப்பான்"

"குத்தினால் எனக்கு குருதி கசியாதா?"

"பொதுவான அர்த்தமற்ற தன்மையால் நீ வருத்தப்படுகிறாய்"

"பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து "

"ஒருகணம் எண்ணிப்பார்த்தார் கர்னல். அழிந்து போன இனமாக நீ இருக்கலாம். அது உனக்கு பொருள் நிறைந்த பாத்திரத்தை அளிக்கக்கூடும் அழிந்துபோன இனங்களை நாங்கள் நேசித்துப் பாதுகாக்கிறோம், மரியாதை காட்டுகிறோம் "

"நல்லது....."

"சுகாதாரத்துறை எனக்களித்துள்ள அதிகாரத்தின் மூலமாக உன்னை " **In tenebris, inter alia, profarma, primus inter pares'** என்னும் அழிந்துபோன இனமாக அறிவிக்கின்றேன் மேல்மட்ட அங்கீகாரம் பெறப்படவேண்டும்"

"உங்களுக்கு நன்றி மிக மிக நன்றி"

"அழிந்து போன இனங்களில் ஜனாதிபதியே தீவிர அக்கறை கொண்டுள்ளார். அவரிடம் ஒரு பட்டியலே உள்ளது"

"மனிதரும் அதில் உள்ளனரா ?

கர்னல் சீற்றத்துடன் எழுந்து, தன் கண்ணாடியை நெருப்பில் வீசினார். உணவின் பாதியும் தணல்களுக்குப் போனது. அப்புறம் அங்கிருந்து கம்பீரத்துடனும் அகந்தையுடனும் பில்லுடன் வெளியேறினார். சுயமரியாதை நிரம்பப்பெற்ற டிராகன், அதிகாரிகளுக்கான செய்தியை ஒருவழியாய் பெற்றுவிட்டதாக திருப்தியுற்று, இரண்டுடாலருக்கு லாட்டரி சீட்டு வாங்கிக்கொண்டு, புகைப்பதை நிறுத்தத் தீர்மானித்தது.



புகைப்படங்கள்

சூரியமண்டலத்தைச் சுற்றிவந்த முதல் விண்கலமான பயோனியர் 10 ஆல் எடுக்கப்பட்ட மனித ஆன்மாவின் புகைப்படங்கள், வியாழனின் காந்தப்புலத்திலிருந்து அக்கலம் வெளிப்படும் போது, 14.12.1973 இல் வெளியிடப்பட்டன. இப்புகைப்படங்கள் (உண்மையில், பூமிக்குத் திருப்பப்பெற்ற ஒன்பது அடி ஆன்டெனாவிலிருந்து வெளிப்பட்ட சங்கேதமான ரேடியோ சமிக்ஞைகளாகும்) அத்திட்டத்தின் அடிப்படை நோக்கங்களுள் ஒன்றான, வியாழனைப்படமெடுத்தலுடன் சந்தர்ப்பவசமாய் கிடைத்தவை. பிரிட்டனின்

கேவண்டிஸ் சோதனைச் சாலையின் டாக்டர் ரெஜினால்ட் ஹாப்சன் FRS - கோடக் கருவி கொண்டு 65 செல்ஸியஸில் எடுக்கப்பட்டவை அவை. அவற்றை உடனடியாகத் தன் நண்பரும் சகாவுமான டாக்டர் வின்ஸ்டன் வாட்னிக் - மீ- FRS - டம்மான டாக்டர் வின்ஸ்டன் வாட்னிக் - மீ-FRS டம் கொண்டு வந்தார்.

" வின்னி - "

"சொல்லு, ரெக்கே ?"

"உன்னிடம் காண்பிக்கவேண்டும் "

"பத்திலிருந்து மேலும் படங்களா ?"

"என்ன அது, ரெக்கே ?"

"நல்லது, வின்னி. சொர்க்கத்திற்குப்போகும் மனித ஆன்மாவின் புகைப்படங்கள் அவை என்று நான் நம்பிடப் போதுமான காரணம் உள்ளது "

"அப்படியா. சுவையாக உள்ளது, சொர்க்கத்திற்குப்போகும் மனித ஆன்மாவின் புகைப்படங்கள். அதனைச் சரிபார்த்து விட்டாயா, ரெக்கே?"

"முழுதுமாக, வின்னி. விண்வெளியிலிருந்து கிடைத்த படங்களையெல்லாம் கணிணிமூலம் சோதித்து விட்டேன். இவற்றை 'sui generis' என்று கூறலாம் இதற்கு முன் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் போன்றவை இல்லை. இவை சொர்க்கத்திற்குப்போகும் மனித ஆன்மாவின் புகைப்படங்களே "

"வேறு ஏதேனும் பரிசோதனைகள்?"

"பூரியர் பகுப்பாய்வு. critical - band masking. cutinuury smearing grids

"நல்லது, அது ஆன்மாதான் என்று உறுதிபடக் கூறுகின்றாயா?"

" worm - Path சோதனைகள் பொய்கூறாது, வின்னி நான்கு முறை அவ்வாறு சோதித்துள்ளேன் "

"மனித ஆன்மா ..... சொர்க்கத்திற்குப் போகும்வழியில்"

"கருதுகிறேன். அது நிச்சயம் வெளியே போய்க் கொண்டிருந்தது "

"நல்லது. அவற்றைப் பார்ப்போம்"

"இதோ, வின்னி

"தெய்வமே. அருவருப்பான கயவாளி, இல்லையா?"

"நேர்த்தியாயில்லை. பகட்டானது என்று கூறமாட்டேன்."

"நிச்சயம் பகட்டாயில்லை, கவர்ச்சிகரமாயில்லை."

"நானே குறிப்பிட்டேன்"

"வறுக்கும் வாணலி மாதிரி தோன்றுகிறது."

"ஆமாம்"

"மிகவும் நெளிந்துபோன வாணலி. அந்த கைப்பிடியைப் பார் "

"மிகவும் பயன்படுத்தப்பட்டதாய் தோன்றும்"

"மிகவும்"

"உச்சியிலிருக்கும் முஷ்டி போன்ற அது என்ன?"

"அதனை என்னவென்பாய், ரெக்கே?"

"உஹூம், ஒன்றும் தோன்றவில்லை, இந்த விபரீதத்தை என்னவென்று கூறமுடியும்?"

"ஆம். விபரீதமானதுதான். மனித ஆன்மா, வெளியே முஷ்டிபோல் துரத்திக் கொண்டிருக்கும் பாகத்தைக் கொண்டிருப்பது, விபரீதமானதுதான்"

"வின்னி, வேண்டாம், என்னைத் தொந்தரவு செய்கிறது"

"ஆமாம், தொந்தரவு செய்கிறது"

"ஆன்மா எப்போதும் சமபாகமானது என்றே எண்ணியிருக்கிறேன், இல்லையா?"

"நல்லது, ஒருவகையில் .... அழகானது.

கிறிஸ்துமஸின்போது கிறிஸ்துமஸ் மரத்தில் வைப்பது போன்றது. அதற்கு என்ன பெயர்?"

"தேவதைமுடி"

"தேவதை முடி போன்றது, புலப்படாதது"

"புலப்படாதது. ஒருவர் முட்டைகளையும் சிறுநீரகங்களையும் வறுத்தெடுப்பதாகத் தோற்றமளிப்பது - ஒருவரைத் திணற வைத்து விடும்"

"ஆம், தொந்தரவு செய்வதுதான், பின்னி "

"நடுவிலுள்ள முலைக்காம்பு போன்றது என்ன என்று வியப்புறுகிறேன்"

"ஆம் குறுகுறுக்க வைக்கிறது. உற்று நோக்க வேண்டும்"

"அது ஏன் அழகாய் இருக்கலாகாது ?....."

"நல்லது, பாவமும் மற்ற எல்லாமும் அங்கே இருக்கிறது"

"பாவந்தான். அதனைக் குறிப்பிட முனைவீர்கள் எனப் பயந்தேன்"

"ஒன்றும் புரிபடவில்லை"

"ரெக்கே, விஷயம் என்னவென்றால், நான் பாவ அறிக்கை செய்து கொள்ளவேண்டியுள்ளது. பாவரீதியில்....."

"பாவ அறிக்கையிடவா?"

"ஆமாம், எப்படிச் சொல்லவதென்று தெரியவில்லை, ஆனால் கடந்த சில வாரங்களாக என் மனதில் இருந்து வருவது அதுவே"

"எது பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறாய்"

"டாரதியா பற்றி"

"டாரதியா?"

"ஆம், டாரதியா தான். சில மாதங்களுக்கு முன் நான் டாரதியா மீது மோதிவிட்டேன். மார்க்ஸ் & ஸ்பென்ஸரில். அவள் ஆரஞ்சுவண்ண நூலைத் தேடிக்கொண்டிருந்தாள் "

"ஆம், தையலுக்காக"

"ஆம், அவள் படுக்கை அறையில் படுக்கையைத் தைக்கின்றாள்."

"நல்லது. டாரதியா கொஞ்சம் ஆரஞ்சு வண்ண நூலினை -

"ஆம், கருத்தஆரஞ்சு நிறம் வின்னி. கருகிவிட்டதான ஆரஞ்சு நிறம்."

"சரி, நல்லது நான் கூறுவது போல, அவள் தனிவகையான ஆரஞ்சு நூலைத் தேடிக் கொண்டிருந்தாள், நான் சிமிழைத் தேடிக் கொண்டிருந்தேன்."

"சரி மார்க்ஸ் & ஸ்பென்ஷருக்கு வெளியே காத்திருக்குமாறும் தன் வீட்டுக்கு சிமிழொன்றை எடுத்து வருமாறும் கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் தன் சிமிழைத் தொலைத்து விட்டாள்"

"அப்படியா

"உண்மையில் நான் வாங்கியது இரண்டு. ஒன்றைத்தொலைத்து

விட்டால், இன்னொன்று கைகொடுக்கும் என்பதால்."

"உம்"

"வழக்கமாய் நிகழ்வது போலவே,

மார்க்ஸ் & பென்ஸரில் சிமிழ் பிரிவு நூல்பிரிவுக்கு அருகாமையில் உள்ளது. அடுத்தடுத்து."

"இருக்கலாம், ஆனால் அவை தனித்தனிப் பிரிவுகள். தனியானவை, ஆனால் அடுத்தடுத்து இருப்பவை, ஆகவே ஒரு விதத்தில் டாரதியா மீது மோதிய நான் அவளை மது அருந்த வெளியே வரமுடியுமா என வினவினேன்"

"அவள் ஒத்துக்கொண்டாள்"

"ஆமாம், வெளியேறி நாங்கள் மதுவருந்தினோம். உண்மையில் நிறைய கிண்ணங்கள்"

"அப்படியா"

"ஒன்று, இன்னொன்றிற்கு இட்டுச்செல்ல கடந்த சில வாரங்களில் நான் கள்ளத்தனமாய் பார்த்துக் கொண்டிருந்தேன்"

"கள்ளத்தனமாய்"

"ஆமாம், கறாராகக் கூறுவதாயின்,

சட்டத்திற்கு விரோதமாக"

"அதுகுறித்து சற்று லஜ்ஜையடைகிறீர்கள்"

"ஆம், உண்மையில் அருவருப்படைகிறேன்

"என்னால் அதனைப் புரிந்து கொள்ள முடியும், வின்னி, இவ்வளவு ஆண்டுகளாகவும் நாங்கள் நண்பர்களாகவும் சகாக்களாகவும் இருந்து வந்திருக்கிறோம். ஐம்பதுக்களிலிருந்து".

"ஆம், ஐம்பதுக்களின் பிற்பாதியிலிருந்து 1956இல் நான் இங்கே வந்தேன்".

"ஆனால் இப்புகைப்படங்களுக்கும் இவற்றுக்குமிடையே என்ன தொடர்புள்ளது என்று எனக்கு புரியவில்லை. சொர்க்கத்திற்கு போகும் வழியிலுள்ள மனித ஆன்மாவுடன் உடனடிப் பிரச்னை என் மனைவி டாரதியாவுடனான உங்கள் சிறு விவகாரம் அல்ல, மாறாக புகைப்படங்களே, சந்தோஷத்திற்கு முன் வியாபாரம் என்கிறேன், வின்னி".

"சரி, ரெக்கே."

"கடுமையான விவகாரங்களில் நாம் என்ன செய்யப்போகிறோம் என்பது தான் பிரச்னை."

"அவற்றை எரித்து விடு."

"எரித்து விடுவதா ? அவை அறிவார்ந்த அக்கறை கொண்டவை, என்ற நீ கூறவில்லையா ? ஆன்மாக்கள் இருக்கின்றன எனில், அவை பெரிதும் பொருத்தமானவை, இல்லையா ? எல்லாவற்றுக்கும் ?.

"நல்லது, அவை சற்றுப் பொருத்தமானவையே என்று கருதுகிறேன். இறையியலாளரைச் சற்று நடுங்கவைக்க வேண்டுமானால், அதற்காகவே பிரசுரிக்கத் தகுதியானது."

"ஆம் புரிந்து கொள்ளமுடிகிறது."

"இன்னொருபுறம், கண்ணியமானவர்களும் தீவிரமானவர்களுமான பலர் இதுபோன்றதில் மிகவும் அக்கறைப்படுகின்றனர். மனித ஆன்மாவின் இருப்பில், இது பல் முளைத்த ஆவிகள் போன்ற விஷயமல்ல, சரியா?"

"வின்னி, மேலும் பொருத்தமானதே.

பொதுவாக."

"சரி ரெக்கே, நீ நல்ல கேள்வி என்றழைக்கக் கூடியது போன்றது இது. அறிவியல் உண்மை மற்றும் பிறவற்றின்பாலான நமது பொறுப்புணர்வு இருக்கவே செய்கிறது. அணுகுண்டு தயாரித்து விட்டு அப்புறம் வருத்தப்பட்டவர்கள் போன்ற நிலையில் நாம் இல்லையா?"

"அப்படித்தானிருக்கிறோம்."

"ஆன்மாக்களுடன் இருக்கையில் நாம் மேலானவர்களா (அ) அவை இல்லாதபோதா ?"

"ஆம், நீ சொல்வதைப் புரிந்து கொள்கிறேன்."

"நிச்சயமற்றதை விரும்புகிறாய்."

"மிகச் சரி, அதுமிகவும் படைப்புத்தன்மை வாய்ந்தது. உதாரணமாக, உன் மனைவி டாரதியாவுடனான எனது ஏற்பாட்டைக் கவனி. நிச்சயமற்ற தன்மை பீடிக்கப்பட்டு, சில கணங்களில் குறிப்பற்ற பதற்றத்துடன் நடுங்கியவாறு. அதனை நான் ரசிக்கிறேன். டாரதியா ரசிக்கிறாள். சோர்வு வீழ்த்தப்படுகிறது. நிச்சயம், தற்காலிகமாக."

"ஆம், என்னால் அதனைப் பரிந்து கொள்ள இயலும். அதற்கு சற்று உத்வேகம் தரவேண்டும்."

"ஆம் மக்களிடமிருந்து உற்சாகத்தை அகற்றி விடுவாய். அவர்கள் நல்லவர்களாய் திரியவேண்டும். உனக்கு நோபல் பரிசு கிடைக்கும், மீண்டும் உன்னிடம் யாரும் பேசமாட்டார்கள். மக்கள் தம் உத்வேகத்தை விரும்பவே செய்கின்றனர், ரெக்கே."

"ஆனால் இன்றும்."

"ரெக்கே, இன்னும் ஒன்று இருக்கிறது. எண்ணிப்பார்க்கவேண்டிய ஒன்று. மனித ஆன்மாவின் இருப்பிற்கான முதல் ஆதாரத்தை கையகப்படுத்துவதில் நீங்கள் வெற்றிப் பெற்றிருக்கிறீர்கள் என்பதை ஏற்கிறேன். ஆனால் அது தவறானது."

"விஷயம் மிகவும் பரிச்சயமானதே."

"வெளிப்டையாய் சொல்வதானால், மிகவும் அருவருப்பானது."

"அது என்ன வாழ்க்கை வாழ்ந்திருக்கும் என்பது தெய்வத்துக்கே வெளிச்சம்."

"சரிதான், ஆனால் ரெக்கே, இப்புகைப்படங்கள் பிரசுரமானால், எல்லா ஆன்மாக்களுக்குமானதாய் மக்கள் மனதில் நின்று விடாதா?"

"அப்படித்தான் ஆகும் என்று கருதுகிறேன்."

"தெரிந்து கொள்ளாதிருப்பதே மேலானது. அதையே நான்வற் புறுத்துகிறேன்."

"டாரதியாவுடனான உன் விவகாரம் ஓர் உதாரணமாகும்."

"அற்புத உதாரணம், ரெக்கே."

"அதிலிருந்து நிச்சயம் ஏதாவது விளையும். நான் குறிப்பிடுவது அவ்விவகாரத்தை."

"அது என்ன ரெக்கே ?"

"வின்னி உன்னை எனக்குப் பிடிக்கவில்லை."



காசுவோ இஷிகுரோ

ஓர் அறிமுகம்

அழுத்திவைக்கப்பட்ட உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் துல்லியமான, நுணுக்கமான நாவல்களாக எழுதிவரும் நவீன இலக்கியவாதியாக அறியப்படும் காசுவோ இஷிகுரா, 1954ல் நாகசாகி (ஜப்பான்) யில் பிறந்து, தனது ஆறாவது வயதில் பெற்றோர்களுடன் பிரிட்டனில் குடியேறி வசித்து வருபவர். இலக்கிய யதார்த்தத்திலிருந்து அடிக்கடி விலகிச் செல்லும் இவரது கவிதைகளில் தற்காலத்தைப் புரிந்து கொள்வதில் வரலாற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார்.

காசுவோ இஷிகுரோவின் முதல் நாவல் A Pale View of the Hills, (1982) ராயல் சொசைட்டி ஆஃப் லிட்டரேச்சரின் Winifred Holt by விருதைப் பெற்றது. இக்கதை இங்கிலாந்தில் வசிக்கும் ஒரு நடுத்தர வயது ஜப்பானிய விதவையான எட்சுகோ சொல்வதாக அமைக்கப் ட்டிருக்கிறது. இவளது பெண் கெய்கோ செய்து கொள்ளும் தற்கொலை, அவள் பிறந்த 1950களின் நாகசாகி போர் ஞாபகங்களை எட்சுகோவிற்கு தூண்டி விடுகிறது. எட்சுகோவின் நினைவுகளும், கனவுகளும் அவளது அடுத்த வீட்டுக்காரியும், போரினால் விதவையானவளுமான சச்சிகோ மீதும் திரும்புகிறது. அமெரிக்க ராணுவ வீரன் ஒருவனுடனான இவளது தொடர்பு இவளது பெண் மாரிகோவை பாதிக்கும் விதத்தை எட்சுகோவின் வாயிலாக வெளிப்படுத்துவது, பாரம்பரியம் மிக்க ஜப்பானிய வேர்களை உதிர்த்துவிட்டு மேற்கில் குடியேறும் தன் சக நாட்டவர்களின் ஒட்டுமொத்த ஆன்மீகச் சிக்கலாகவே இவரது எழுத்துக்களில் பிரதிநிதித்துவப்படுகிறது.

An Artist of the Floating World என்ற இவரது இரண்டாவது நாவல், 1986ல் வெளிவந்தது: புகழ்பெற்ற Whirbread Book of the year பரிசு பெற்றது.

இதில் மசூஜி ஓனோ என்கிற ஜப்பானியன், தன்னுடைய கலை, படைப்புத்திறமை களையெல்லாம் ஜப்பானின் ராணுவப் பிரச்சாரத்திற்காகவே பயன்படுத்தியதை தன் முதுமையில் வேதனையுடன் பிரதிபலிக்கிறான்.

பிரிட்டிஷ் இலக்கியத்தில் வந்து சேர்ந்துவிட்டிருந்த ஒரு புதிய சர்வதேசத் தன்மையை ஒதுக்கிவிட்டு இஷிகுரோ எழுதிய மூன்றாவது நாவல், அவரது புகழ் பெற்ற Remains of the day (1989) முந்தைய இரு நாவல்களைப் போல ஜப்பானியர்களை மையப்படுத்தாமல் ஆங்கிலேயர்களின் அடையாளமான பட்லர் ஒருவனை பிரதானப்படுத்தி எழுதிய நாவல் இது. இரண்டாம் உலகப் போர் காலத்தில் நாஜி அனுதாபியான பிரபு ஒருவரின் கீழ் பணியாற்றும் ஸ்டீவன்ஸ், தன்னைச் சுற்றியிருக்கும் நிஜ உலகத்தில் அப்போது நடந்து கொண்டிருந்த மனித வேட்டைகளும், பெருகும் ரத்த வெள்ளங்களும், கூசச் செய்யும் போர்க் கூச்சல்களும் தன் னுடைய உணர்வுகளைத் தீண்டி, தனது இருப்பை சங்கடப்படுத்தி விடாதிருக்க தனது பட்லர் பணியை தேவைக்கு மீறி தீவிரமாக ப்ாவித்துக் கொண்டு, அதில் ஏறக்குறைய ஒரு தப்பித்தல் மனோ பாவத்தில் முனைந்து தன்னை ஈடு படுத்திக் கொள்வதை உளவியல் ரீதியாக விவரிக்கிறது.

இந்நூல் இங்கிலாந்தின் உயர்ந்த இலக்கியப் பரிசான புக்கர் விருதை அவ்வருடம் வென்றது. திரைப்படமாகவும் அதே பெயரில் உருவாக்கப்பட்டு 1993ல் ஏழு அகாதெமி விருதுகளுக்காக பரிந்துரைக்கப்பட்டது.

பொதுவாக இவரது நாவல்கள் கடந்த கால ஞாபகங்கள், சுய ஏமாற்றல்கள், ஒழுங்கு நெறிச் சிக்கல்கள் போன்ற வற்றைச் சுற்றியே அமைகின்றன. இவரது கதாபாத்திரங்கள் இவற்றை முன் நிறுத்தியே தமது வாழ்வின் வெற்றி தோல்விகளை மறு மதிப்பீடு செய்து கொள்கின்றன.

இவரது பிற நூல்கள் : Unconsoled (1995); When We Were Orphans (2001)
- இது 2001ல் புக்கர் விருதிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களில் ஒன்று.





[சிறுகதை]

காசுவோ இஷிகுரோ

தமிழில் : ஜி. குப்புசாமி

அது ஒரு காலம். அப்போதெல்லாம் இங்கிலாந்து முழுக்கவும் வாரக்கணக்காக முடிவேயில்லாமல் பயணம் செய்துகொண்டு இருந்த போதிலும் கூர்மையான பிரக்ஞையோடு என்னால் இருக்க முடிந்த காலம். பயணங்கள் என்னை கூர்மையாகத் தீட்டியிருக்கின்றன. ஆனால் இப்போது வயசாகிவிட்டப் பிறகு சுலபமாக எனது கவனங்கள் பிறழ்கின்றன. எனவே இருட்டத் தொடங்கிய சிறிது நேரத்திலெல்லாம் அந்த கிராமத்தை நான் வந்தடைந்தபோது அதனுடன் இருக்கும் எனது தொடர்புக்கூறுகள் எதையும் என்னால் அடையாளம் காணமுடியாமல் இருந்தது. கொஞ்சகாலத்துக்கு முன்புதான் இதே கிராமத்தில் நான் வாழ்ந்ததும், மகத்தான செல்வாக்கோடு ஆதிக்கம் செலுத்தியதும் என்பதை என்னால் நம்ப இயலவில்லை.

இந்தப்பிரதேசத்திற்கேயுரிய சிறிய கருங்கல் வீடுகள் வரிசையிட்ட, போதிய விளக்குகளற்ற, இருண்ட தெருக்களில் வளைந்து, திரும்பி, முடிவேயில்லாமல் நடந்து கொண்டிருக்கையில், அடையாளம் கண்டுகொள்கிற மாதிரி எதுவும் கண்ணில் படவில்லை. இந்தத்தெருக்கள் நடுநடுவே மிகவும் குறுகலாகி எனது பையோ, முழங்கையோ சொரசொரப்பான சுவர்களில் தேயாமல் நடக்க இயலாதிருந்தது. இருந்தும் விடாப்பிடியாக, தட்டுத்தடுமாறி இருட்டில் இந்தக்கிராமத்தின் மையசதுக்கத்தை அடைந்து விடலாம் என்று நடந்து கொண்டிருந்தேன். ஒருவேளை அங்கே என்னை அடையாளம் கண்டுகொள்கிற கிராமவாசி யாரையாவது சந்திக்கமுடியலாம். என்னையும் சற்று ஒருங்கமைத்துக் கொள்ளலாம். ஆனால் இவை எதையும் என்னால் அடையமுடியாமல் போனபிறகு எனக்குள் சோர்வு இறங்க ஆரம்பித்தது. ஏதோ ஒரு வீட்டைத் தேர்ந்தெடுத்து, கதவைத்தட்டி, என்னை நினைவில் வைத்திருக்கும் யாரோ ஒருவர் கதவைத்திறப்பார் என நம்பிக்

கொள்வதுதான் இப்போதைக்கு சரியான வழி எனத்தோன்றியது.

ஒரு வீட்டின் லொட லொடத்துப்போய், சார்த்திவைக்கப்பட்ட கதவின்முன் நின்றேன். நிலைப்படி மிகவும் தாழ்வாக இருந்தது. குனிந்து மடிந்துதான் உள்ளே நுழைய வேண்டும். அந்தக் கதவிடுக்கின் ஊடாக மங்கலான வெளிச்சமும், பேச்சும், சிரிப்பும் உள்ளேயிருந்து கசிந்து கொண்டிருந்தன. அவர்களின் பேச்சிற்கு இடையே கேட்கவேண்டுமென்பதற் காகவே கதவை பலமாகத் தட்டினேன். ஆனால் அப்போது பின்னாலிருந்து யாரோ, "ஹலோ" என்று அழைத்தது கேட்டு திரும்பினேன்.

இருபது வயது மதிக்கத்தக்க, முரட்டு ஜீன்ஸும், கிழிந்த மேற்சட்டையும் அணிந்தஓர் இளம்பெண் இருட்டில் நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

"நான் உங்களைக் கூப்பிட்டபோதும் என்னைத் தாண்டிச் சென்றுவிட்டீர்கள்", என்றாள்.

அப்படியா? மன்னிக்கவும், அவமதிப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள். நான் கவனிக்கவில்லை."

" நீங்கள் ஃப்ளெட்சர், இல்லையா?"

"ஆம்", என்றேன் சற்றுப்பெருமையாக.

"எங்கள் வீட்டைத்தாண்டி நீங்கள் செல்லும்போதே வெண்டி உங்களை கவனித்துவிட்டுச் சொன்னாள். எங்களுக்கெல்லாம் பரபரப்பாகிவிட்டது. நீங்கள் அந்தக் குழுவில் ஒருவர், இல்லையா? டேவிட் மாகிஸ், அப்புறம் மற்றவர்கள்..."

"ஆம்", என்றேன், "ஆனால் மாகிஸ் ஒன்றும் அவ்வளவு முக்கியமான நபராக இருந்ததில்லை. அவரை நீங்கள் குறிப்பிட்டுச்சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது. அவரைவிட முக்கியம் வாய்ந்த பலர் இருந்தோம்." நான் வரிசையாகப் பெயர்களைச் சொல்லிக்கொண்டுபோக, அவள் அந்தப்பெயர்களை அடையாளம் கண்டுகொண்டு தலையை அசைத்து ஒப்புதல் தெரிவித்துக்கொண்டிருந்தது எனக்கு வியப்பாக இருந்தது, "ஆனால் இதெல்லாம் உங்களது காலத்திற்கு மிகவும் முற்பட்டது அல்லவா?", என்றேன். "இந்த விஷயங்களெல்லாம் உங்களுக்குத் தெரிந்திருப்பது எனக்கு ஆச்சரியம் அளிக்கிறது."

" இதெல்லாம் எங்கள் காலத்திற்கு முற்பட்டதுதான். ஆனால் நாங்கள் எல்லோரும் உங்கள் குழுவைப்பற்றி அனைத்தும் அறிந்த நிபுணர்கள். உங்கள் குழு செயல்பட்ட காலத்தில் இருந்தவர்களை விட உங்களைப் பற்றி அதிகமான விபரங்கள் எங்களுக்குத் தெரியும். உங்களைப் புகைப்படத்தில் பார்த்திருந்ததை வைத்தே வெண்டி உடனடியாக அடையாளம் கண்டுவிட்டாள்."

" உங்களைப்போன்ற இளவயதினர் எங்களைப் பற்றி இவ்வளவு ஆர்வம் கொண்டிருப்பார்களென நான் நினைத்திருக்கவில்லை. உங்களைக் கவனிக்காமல் கடந்து வந்துவிட்டதற்காக வருந்துகிறேன். ஆனால் பாருங்கள், எனக்கு வயது அதிகமாகிவிட்டது. பயணம் செய்கிற காலங்களில் கவனம் சிறிது சிதறுகிறது."

கதவின் பின்னாலிருந்து இரைச்சலான பேச்சுக்குரல்கள் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தன. இந்தப் பெண்ணுடனான பேச்சை இத்தனை சீக்கிரம் முடித்துக்கொள்ள விரும்பவில்லையானாலும் கூட பொறுமையின்றி மீண்டும் பலமாகக் கதவை இடித்தேன்.

ஒரு கணம் அவள் என்னை உற்றுப்பார்த்து விட்டுச் சொன்னாள்," அந்தக்காலத்திலிருந்த நீங்கள் எல்லோருமே இப்படித்தான் இருக்கிறீர்கள். டேவிட் மாகிஸ் சிலவருடங்களுக்கு முன் இங்கு வந்திருந்தார். தொண்ணூற்று மூன்றிலோ

தொண்ணூற்று நாலிலோ. கொஞ்சம் குழப்பத்தோடு, நிதானமில்லாமல்.... தொடர்ந்து பிராயணம் செய்து கொண்டேயிருப்பதால் இப்படி நேர்கிறது போலும்."

"எனவே, மாகிஸ் இங்கு வந்திருந்தார். எவ்வளவு ஆச்சரியம்! அவர் ஒன்றும் அவ்வளவு முக்கியமான நபர் இல்லை, தெரியுமா? அப்படி நினைத்துக் கொண்டு ரொம்பவும் உணர்ச்சி வசப்பட்டு விடாதீர்கள். அப்புறம், இந்த வீட்டில் யார் இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?" கதவை மீண்டும் இடித்தேன்.

"பீட்டர்சன்கள் என்றாள்" எல்லோரும் பழங்கால ஆசாமிகள். அவர்களுக்கு உங்களைத் தெரிந்திருக்கலாம்."

"பீட்டர்சன்கள்," நானும் திருப்பிச் சொல்லிப் பார்த்தேன். இந்தப்பெயர் எந்த ஞாபகத்தையும் தூண்டவில்லை.

"நீங்கள் ஏன் எங்களது வீட்டிற்கு வரக்கூடாது? வெண்டி மிகவும் உற்சாகத்தில் இருக்கிறாள். மற்றவர்கள் கூட அந்தக்காலத்தைச் சேர்ந்த ஒருவரை உண்மையிலேயே சந்தித்துப் பேசிக்கொண்டிருக்க ஒரு வாய்ப்பாக எங்களுக்கு இருக்கும்."

"நிச்சயமாக எனக்கு வருவதற்கு விருப்பம்தான். ஆனால் அதற்குமுன் நான் சற்று இளைப்பாறவேண்டும். பீட்டர்சன்கள் என்றுதானே சொன்னீர்கள்?" இந்தத் தடவை உக்கிரத்தோடு கதவை இடித்தேன். கடைசியில் கதவு திறக்கப்பட்டு, வெளிச்சத்தையும், கதகதப்பையும் தெருவிற்கு இறக்கியது. ஒரு வயதான மனிதர் வாசற்படியில் நின்றிருந்தார். என்னை உன்னிப்பாகப் பார்த்தபடி, "நீங்கள் ஃப்ளெட்சர், இல்லையா?" என்றார்.

"ஆமாம். பலநாட்களாக பிரயாணம் செய்துவிட்டு இப்போதுதான் இந்த கிராமத்திற்கு வந்தேன்."

அவர் சிறிது சிந்தனை வசப்பட்டு, அதன் பிறகு சற்றுத் "தயங்கி," சரி, உள்ளே வாருங்கள்," என்றார்.

அது ஓர் இடுக்கமான, விறகுக் கட்டைகளும், உடைந்த நாற்காலி, மேசைகளும் தாறுமாறாக சிதறியிருந்த அறை, அங்கிருந்த கணப்பிலிருந்து விறகுகள் எரிகிற வெளிச்சத்தில் மங்கலான உருவங்கள் அங்கங்கே ஒடுங்கி உட்கார்ந்திருப்பது தெரிந்தது. அந்த வயதான மனிதர் கணப்பிற்குப் பக்கத்திலிருந்த நாற்காலிக்கு அழைத்துச் சென்று அமரவைத்தார். அவர் முகபாவத்திலிருந்து, அது இத்தனை நேரம் அவர் அமர்ந்திருந்த நாற்காலியாக இருக்கவேண்டும் என நினைத்தேன். அந்த இதமான இளஞ்சூட்டில் சரிந்து உட்கார்ந்தவுடன் அந்த இடத்தை சுற்றிப்பார்க்கக் கூடத் தோன்றாமல் அந்தச் சுவாலைகளையே வெறித்துப்பார்த்தபடி அமர்ந்திருந்தேன். மெதுவாக எனக்குள் ஒருவித இதமான மதர்ப்பு பரவியது. என் முதுகிற்குப் பின்னாலிருந்து சில குரல்கள், நான் நன்றாக இருக்கிறேனா, ரொம்ப தூரத்திலிருந்து வருகிறேனா, பசியா, என்றெல்லாம் கேட்டுக் கொண்டிருப்பதை உணரமுடிந்தது. இதற்கெல்லாம் பதில்களாக என்னால் இயன்றவரை முனகினேன். இறுதியில் கேள்விகள் ஒவ்வொன்றாய்த் தேய்ந்து முடிந்ததும் எனது இருப்பு அந்தச் சூழ்நிலையில் ஒரு கனமான அசௌகரியத்தை ஏற்படுத்தியிருப்பதை உணரமுடிந்தது. அந்தக் கதகதப்பும், இத்தனை நேரம் கழித்துக் கிடைத்திருக்கிற ஓய்வும் எதுகுறித்தும் அக்கறைப்பட வைக்கவில்லை.

ஓர் இறுக்கமான மௌனம் என்னைச் சுற்றி அதிகரித்துக் கொண்டே வர, அவர்களிடம் சிறிது இணக்கமாகவும், நாகரிகத்தோடும் பேசி அந்தச் சூழலை கொஞ்சம் சௌகரியமாக்க முடிவு செய்து திரும்பினேன். அடுத்த கணம் அந்த இடத்தின், ஏற்கனவே எனக்கு நன்கு அறிமுகமான பரிச்சயம் என்னை வலுவாகத் தாக்கியது. இந்த விடுதியைத் தற்செயலாகத்தான் தேர்ந்தெடுத்தேன்.

ஆனால், இந்த கிராமத்தில் இதற்கு முன் நானிருந்த காலத்தில் தங்கியிருந்தது இந்த விடுதியில்தான். அங்கே தொலைவில் உள்ள அந்த மூலையில்தான் எனது படுக்கை போடப்பட்டிருக்கும். அது என் இடம். அங்குதான் பல நிச்சலமான மணி நேரங்களை புத்தகங்களைப் படித்துக் கொண்டும், தேடி வருகிறவர்களோடு பேசிக் கொண்டும் கழித்திருக்கிறேன். கோடை காலத்தில் சன்னல்களையும், கதவுகளையும் அகலத் திறந்து வைத்தால் வீசுகிற குளிர்ந்த காற்று புத்துயிர்ப்பு தரும். அப்போதெல்லாம் இந்த விடுதியைச் சுற்றி பச்சைப் பசேலென்ற வயல்வெளிகள் நிறைந்திருக்கும். அங்கே நீண்டு உயர்ந்திருக்கிற புல்வெளிகளில் சாய்ந்து கொண்டு கவிதைகளையும், தத்துவத்தையும் விவாதித்துக் கொண்டிருக்கிற என் நண்பர்களின் குரல்கள் கேட்டுக் கொண்டிருக்கும்.

யாரோ மறுபடியும் என்னுடன் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எதையும் சரியாக உணர முடியாமல் மெதுவாக எழுந்து, நீண்டு பரவியிருக்கிற நிழல்களின் ஊடாக என் மூலையை அடைந்தேன். அங்கிருந்த குறுகலான கட்டிலின் மேல் ஒரு பழைய திரைச்சீலை விரிக்கப்பட்டிருந்தது. இதே இடத்தில்தான் அப்போது எனது கட்டிலும் இருந்தது. அக்கட்டில் என்னை வரவேற்றது. அந்த வயதானவர் தொடர்ந்து ஏதோ பேசிக்கொண்டிருக்க, சட்டென்று இடைமறித்தேன். "இதோ பாருங்கள், நான் வெகு தூரத்திலிருந்து வந்திருக்கிறேன். முதலில் நான் படுத்து கொஞ்ச நேரத்திற்காவது கண்களை மூட வேண்டும். அதன் பிறகு நாம் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருக்கலாம்.

என்னைச் சுற்றிலும் இருந்த உருவங்கள் அசௌகரியமாக அசைந்தன. ஒரு புதிய குரல் சிடுசிடுப்பான தொனியில்; "சரி, தூங்குங்கள். எதையும் பொருட்படுத்த வேண்டாம்", என்றது.

அதற்குள் எனது படுக்கையை ஓரளவு நான் தயார் செய்துவிட்டேன். அந்தப் படுக்கை சிறிது ஈரமாக இருந்தது. எனது எடையில் கட்டிலின் ஸ்ப்ரிங்குகள் முனகின. சுவர் பக்கம் திரும்பி என் உடலைச் சுருக்கிக் கொண்டதும் எனது நீண்ட பயணத்தின் அலுப்பு என்னை ஆட்கொள்ள, தூக்கத்துக்குள் செருகிக் கொண்டேன். சுற்றிலும் இனம்புரியா குரல்கள் ஒலித்துக் கொண்டிருந்தன.

ஒரு வயதான குரல், "இது ஃப்ளெட்சர்தானா? கடவுளே, எவ்வளவு வயதாகிவிட்டிருக்கிறது!" என்றது.

ஒரு பெண்ணின் குரலும் கேட்டது. "இப்படி தூங்க விடலாமா? இவரிடம் நமக்கு பேச வேண்டியது எவ்வளவு இருக்கிறது!"

"ஒரு ம்ணி நேரம் இவர் தூங்கட்டும். அதன் பிறகும் எழுந்திருக்கவில்லையென்றால் எழுப்புவோம்." யாரோ சொல்வது கேட்டது.

இந்த இடத்தில் எனது அலாதியான களைப்பு என்னை முழுமையாக அழுத்திக் கொண்டது.

□ □ □ □ □

அது ஒரு தொடர்ந்த, சௌகரியமான தூக்கமாக இல்லை. தூக்கத்திற்கும் விழிப்பிற்கும் இடையே அலைந்து கொண்டிருக்கையில் காதில் தொடர்ந்து குரல்கள் விழுந்து கொண்டிருந்தன. ஒரு முறை ஒரு பெண்ணின் குரல் தனித்துக் கேட்டது. "எந்த அளவுக்கு இந்த ஆளின் ஆதிக்கத்தில் அப்போது நான் இருந்திருக்கிறேன்! இப்போது பார்த்தால் ஏதோ பரதேசி மாதிரி இருக்கிறார்."

எனக்கிருந்த பாதித்தூக்க அவஸ்தையில் இந்த வார்த்தைகள் என்னைக் குறிப்பிடுகின்றனவா அல்லது டேவிட் மாகிஸ்ஸை குறிப்பிடுகின்றனவா என்று குழம்பிக் கொண்டிருந்த போதே மீண்டும் ஓர்

ஆழ்ந்த தூக்கம் என்னை மூழ்கடித்தது.

நான் விழித்தபோது அந்த அறை மேலும் இருட்டாகவும், சில்லென்று ஆகிவிட்டிருப்பது போலும் தோன்றியது. கிசுகிசுப்பான தாழ்ந்த குரல்கள் பின்னாலிருந்து தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தன. இதுபோல இவர்கள் நடுவே படுத்துத் தூங்கியதில் திடீரென்று ஒரு சங்கட உணர்ச்சி உண்டானது. சுவரைப் பார்த்துக் கொண்டு அசைவே இல்லாமல் கொஞ்ச நேரம் படுத்துக் கொண்டிருந்தேன். ஆனாலும் ஏதோ ஒன்று நான் விழித்துக் கொண்டதை அவர்களுக்கு உணர்த்தியிருக்க வேண்டும். அந்தப் பொது உரையாடலிலிருந்து ஒரு பெண்ணின் குரல் விலகி ஒலித்தது. "ஓ, பாருங்கள், பாருங்கள்". சில கிசுகிசுப்புகள் பரிமாறிக் கொள்ளப்படுவதும், யாரோ நான் இருக்கும் மூலைய்யை நோக்கி நடந்து வருவதும் கேட்டது. எனது தோளில் ஒரு கை மிருதுவாகத் தொட்டது. நிமிர்ந்தேன். ஒரு பெண் என் மேல் குனிந்து பார்த்துக் கொண்டிருந்தாள். என் உடம்பை முழுசாகத் திரும்பிப் பார்க்காவிட்டாலும் கூட, அந்த அறையின் கணப்பு அடங்குகிற நிலையில் இருப்பது வெளிச்சத்தில் தெரிந்தது. அந்தப் பெண்ணின் முகம் நிழலில் மட்டுமே புலப்பட்டது.

"ஃப்ளெட்சர், இப்போது நாம் பேச வேண்டும். நீங்கள் திரும்பி வருவீர்கள் என ரொம்பகாலமாக காத்திருந்தேன். உங்களைப் பற்றி அடிக்கடி நினைத்துக் கொள்வதுண்டு."

அவள் முகத்தைத் தெளிவாகப் பார்ப்பதற்கு முயன்றேன். அவளுக்கு நாற்பது வயதிருக்கலாம். இந்த மங்கலான வெளிச்சத்தில் கூட அந்தக் கண்களில் ஒருவிதமான தூக்கத்தில் தோய்ந்த சோகம் தெரிந்தது. எனினும் எனது ஞாபகத்தின் சிறிய அலை ஒன்றைக் கூட அந்த முகம் தூண்டவில்லை.

"மன்னியுங்கள். உங்களை எனக்கு நினைவில்லை. முன்பு நாம் சந்தித்திருப்போமென்றால் தய்வு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள். இப்போதெல்லாம் எனது ஞாபகப் பிசகு அதிகமாகிவிட்டது."

"ஃப்ளெட்சர், முன்பு நாம் சந்தித்த போது, நான் இளமையோடும் அழகோடும் இருந்தேன். உங்களை ஆராதித்துக் கொண்டிருந்தேன். நீங்கள் சொல்கிற அனைத்தும் நான் தேடிக்கொண்டிருந்த விடைகளாகத் தெரிந்தன. இப்போது நீங்கள் மறுபடியும் இங்கு வந்திருக்கிறீர்கள். இத்தனை வருடங்களாக உங்களிடம் சொல்லவேண்டுமென்றிருந்ததைச் சொல்லி விடுகிறேன்; நீங்கள் என் வாழ்க்கையை பாழாக்கியிருக்கிறீர்கள்," என்றாள்.

"நீங்கள் சொல்வது மிகவும் அநியாயம். நான் பல விஷயங்களுக்காகத் தவறாகப் புரிந்து கொள்ளப் பட்டிருக்கிறேன். ஆனால் நான் எதற்கும் தீர்வுகளை வைத்துக் கொண்டிருப்பதாகச் சொன்னதில்லை. நான் அப்போது சொன்னதெல்லாம் விவாதங்களில் நாம் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்பதே. இங்கே இருக்கிற சாதாரண மக்களைக் காட்டிலும் எவ்வளவோ விஷயங்கள் நமக்குத் தெரிந்திருக்கின்றன. நம்மைப் போன்றவர்கள், நமக்கு அதிகம் தெரியாது என்று தயங்கிக் கொண்டிருந்தால் யார்தான் செயல்பட முடியும்? ஆனால் நான் எப்போதுமே தீர்வுகளையோ , விடைகளையோ வைத்திருப்பதாகச் சொன்னதில்லை. நீங்கள் சொல்வது நியாயமல்ல,"

அவள் மிகவும் விசித்திரமான தொனியில், மென்மையாக, "ஃப்ளெட்சர்," என்றாள். "நான் இங்கே வரும்போதெல்லாம் என்னுடன் நீங்கள் உறவு கொள்வீர்கள். இந்த மூலையில்தான் நாம் அழகான அசிங்கமான எல்லா விஷயங்களையும் செய்திருக்கிறோம். உங்களுடைய கவர்ச்சியில் நான் எந்த அளவுக்கு மயங்கிப்போயிருந்தேன் என்பதை நினைக்கும்போது இப்போது

விசித்திரமாக இருக்கிறது. இப்போது இங்கே நாற்றமடிக்கிற கந்தல் துணிமூட்டை மாதிரி இருக்கிறீர்கள். ஆனால் என்னைப்பாருங்கள் இன்னமும் நான் கவர்ச்சியாகத் தான் இருக்கிறேன். என் முகத்தில் சுருக்கங்கள் வந்துவிட்டால்கூட இந்தக் கிராமத் தெருக்களில் நான் அங்கங்களை அழகாகக் காட்டுகிறமாதிரி உடையணிந்து செல்லும்போது பல ஆண்கள் இன்னமும் எனக்காக ஏங்குகிறார்கள். ஆனால் ஒரு பெண்கூட இப்போது உங்களைத் திருப்பிப் பார்க்க மாட்டாள், தெரியுமா...? நாற்றமடிக்கும் கந்தல் துணிப்பிண்டம்."

"உங்களை எனக்கு ஞாபகம் வரவில்லையே," என்றேன். "செக்ஸிற்கு இப்போதெல்லாம் எனக்கு நேரமில்லை. கவலைப்பட வேறு விஷயங்கள் நிறைய இருக்கின்றன. அதைவிட தீவிரமான விஷயங்கள். நல்லது, எத்தனையோ விஷயங்களுக்காக அப்போது நான் த வ றா க ப் பு. ரி ந் து கொள்ளப்பட்டிருக்கிறேன். ஆனால் இவற்றையெல்லாம் சரிப்படுத்த மற்றவர்களை விட கூடுதலாகவே செய்துவருகிறேன். பாருங்கள் இப்போதுகூட பயணங்கள் மேற்கொள்கிறேன். எப்போதோ நான் நிகழ்த்திய சிதைவுகளை சரிசெய்ய பிரயத்தனம் செய்துகொண்டிருக்கிறேன். என்னுடைய சகாக்களை விட இவ்விஷயத்தில் கூடுதலாகவே செய்து வருகிறேன். உதாரணமாக, மாகிஸ் இந்தமாதிரி விஷயங்களை நேர்செய்ய கடுமையாக உழைப்பதெல்லாம் கிடையாது என பந்தயம் கட்டுவேன்."

அந்தப்பெண் என் தலையைக் கோத ஆரம்பித்தாள் "இது போலத்தான் நான் அப்போது செய்வேன், உங்கள் தலைமுடிக்குள் என் விரல்களை நுழைத்து ஓட்டிக்கொண்டு. இப்போது இந்த சிக்குப்பிடித்த சடையைப்பார்த்தால் இதற்குள் எல்லாவிதமான பூச்சிபொட்டுகளும் இருக்கும் போலிருக்கிறது."

ஆனாலும் தொடர்ந்து அவள் விரல்களால் முடிச்சுகள் மண்டிய என் கேசத்தை அளைந்து கொண்டிருந்தாள். அவள் விரும்பியிருக்கக் கூடிய வகையில் எந்தவிதமான கிளர்ச்சியும் எனக்கு ஏற்படவில்லை. மாறாக அவை தாய்மையான வருடல்களாகவே எனக்குத் தோன்ற ஆரம்பித்தது. ஒரு கணத்திற்கு என்னை ஒரு பாதுகாப்பான கூட்டிற்குள் அழைத்துச்சென்று ஆசுவாசப்படுத்துகிற மாதிரி பட்டது. மீண்டும் எனக்கு உறக்கம் வருகிறமாதிரி உணர்ந்தேன். ஆனால் சட்டென்று அவள் நிறுத்திவிட்டு என் நெற்றியில் பலமாகத்தட்டினாள்.

"எழுந்து எங்களோடு வாருங்கள். தூங்கியது போதும். நிறைய விளக்கங்கள் நீங்கள் தரவேண்டியிருக்கிறது." அவள் எழுந்து சென்றாள்.

முதல்முறையாக நான் முழுதாகத் திரும்பி, அந்த அறையை சரியாக கவனித்தேன். அந்தப்பெண் தரையில் கிடந்த குப்பை கூளங்களைக் கடந்து கணப்பிற்கு அருகில் உள்ள ஆடும் நாற்காலியில் அமர்ந்தாள். மேலும் மூவர், கணப்பில் அடங்கிக் கொண்டிருக்கும் நெருப்பை நோக்கி குத்துக்காலிட்டு, ஒரு கனமான மரதிமிசின் மீது அமர்ந்திருந்தனர். அதில் ஒருவர், ஏற்கனவே பார்த்த, கதவைத்திறந்த முதியவர். மற்ற இருவரும் என்னிடம் பேசிக்கொண்டிருந்தவளின் வயதொத்த பெண்கள்.

அந்த முதியவர், நான் திரும்பி அவர்களைப் பார்த்துக்கொண்டிருப்பதை கவனித்து மற்றவர்களிடம் சைகை காட்டினார். அந்த நால்வரும் ஏதும் பேசாமல் திரும்பி, இறுக்கமாக உட்கார்ந்தனர். அவர்கள் அமர்ந்த விதத்தைப் பார்த்தபோது, நான் தூங்கிக்கொண்டிருக்கையில் என்னைப்பற்றி விரிவாக விவாதித்துக் கொண்டிருந்திருக்கக்கூடும் என்பது புலனாகியது. என்னமாதிரியாக அந்த விவாதம் உருவெடுத்திருக்கும் என்பதை

க்கூட என்னால் அனுமானிக்க முடிந்தது. உதாரணமாக, என்னை இந்த வீட்டிற்கு வெளியே சந்தித்த அந்த இளம் பெண்ணைக் குறித்து கவலைப்படத் துவங்கியிருப்பார்கள். அவள் மீதும், அவளது சகாக்கள் மீதும் நான் ஏற்படுத்தக்கூடிய பாதிப்பு குறித்தும் விசனத்தோடு பேசியிருப்பார்கள்.

'அவர்கள் எல்லாருமே மிகவும் வசீகரமானவர்கள்,' என்று அந்த முதியவர் சொல்லியிருப்பார்.' அந்தப்பெண் அவர்கள் வசிக்குமிடத்திற்கு இவரை அழைத்ததை நான் கேட்டேன்.'

இதற்கு அந்த மரதிமிசு மீது அமர்ந்திருந்த பெண்களில் ஒருத்தி நிச்சயமாக இப்படிச்சொல்லியிருப்பாள். 'ஆனால் இவர் இப்போது ஒன்றும் பெரிதாக எதையும் கெடுத்துவிடமுடியாது. நம்முடைய காலத்தில், நாமெல்லாம் இவர்கள்வசம் விழுந்திருந்தோமென்றால் அதற்கு காரணம் அந்த அளவுக்கு அவர்கள் எல்லோரும் இளமையோடும் கவர்ச்சியோடும் இருந்தார்கள் என்பதுதான். இப்போது இந்தமாதிரி முதுமையில் தளர்ந்து, கருகிப்போன மாதிரி இருப்பதைப்பார்த்தால் அந்தப் பழங்காலங்கள் பற்றிய மாயங்களெல்லாம் போய்விடும். மேலும் இவர்களெல்லாம் இப்போது மிகவும் மாறிவிட்டிருக்கிறர்கள். அவர்கள் நம்புவது எதை என்பதையே அறியாமல் இருக்கிறார்கள்.'

அந்த முதியமனிதர் தலையை ஆட்டி மறுத்திருப்பார். 'அந்தப்பெண் இவரைப் பார்த்துக்கொண்டிருந்த விதத்தை நானும் பார்த்தேன்.' இவரைப்பார்த்தால் இப்போது பரிதாபமாகத்தான் இருக்கிறது. ஆனால் இவருக்கெல்லாம் சிறிது தன்னம்பிக்கையோ இந்தமாதிரியான இளைஞர்களின் புகழ்ச்சியோ கிடைத்துவிட்டால் போதும். எந்த அளவுக்கு இவர் பேசுவதைக்கேட்க இளைஞர்கள் தயாராக இருக்கிறார்கள் என்று தெரிந்துவிட்டால் போதும், பிறகு அவ்வளவுதான். இவரை அப்புறம் நிறுத்தவே முடியாது. அப்புறம் முன்பிருந்த மாதிரியே ஆகிவிடும். இவருடைய குறிக்கோள்களுக்காக அத்தனை பேரையும் செயல்பட வைத்துவிடுவார். இது போன்ற இளம்பெண்களுக்கு நம்பிக்கையூட்டுகிறமாதிரி எதுவும் தற்போது இல்லை. இந்த மாதிரியான நாற்றமடிக்கிற நாயோடிகூட அவர்களுக்கு ஒரு லட்சியத்தைத் தந்துவிடக்கூடும்.'

நான் உறங்கிக்கொண்டிருக்கையில் நடந்த விவாதம் இதேவிதத்தில்தான் சென்றிருக்கும். இப்போது இந்த மூலையிலிருந்து அவர்களைப் பார்க்கும் போது, அணைந்து கொண்டிருக்கும் கணப்பின் ஜுவாலைகளை வெறித்துப் பார்த்துக்கொண்டு, ஒரு வித குற்ற உணர்ச்சி கொண்ட மௌனத்தில் அவர்கள் வேண்டுமென்றே என் பார்வையைத் தவிர்ப்பதற்காக, திரும்பி உட்கார்ந்து கொண்டிருப்பது அபத்தமாக இருந்தது. இறுதியில் எழுந்துநின்றேன். யாராவது பேசக்கூடுமென்று சிலகணங்கள் காத்திருந்தேன். கடைசியில் நானாகப்பேசினேன் :

"நான் தூங்கிக் கொண்டிருந்தபோது நீங்கள் என்ன பேசிக் கொண்டிருந்திருப்பீர்களென ஊகிக்க முடிகிறது. ஆனால் நீங்கள் பயந்து கொண்டிருந்த விஷயத்தைதான் இப்போது நான் செய்யப்போகிறேன் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். இப்போது இளைஞர்களின் குடியிருப்பிற்குச் செல்லப் போகிறேன். அவர்களுடைய சக்தியை, கனவுகளை, சாதிக்க வேண்டுமென்ற வெறியை வைத்து அவர்கள் இந்த உலகிற்கு என்ன செய்ய வேண்டுமென்று சொல்லித் தரப்போகிறேன். உங்களைப் பாருங்கள், எவ்வளவு பரிதாபத்திற்குரிய கும்பல்! வீட்டில் அடைந்து கொண்டு, என்னைப் பார்த்து, மாகிஸைப் பார்த்து, எங்கள் குழுவைச்சேர்ந்த மற்றவர்களைப் பார்த்து பயந்து கொண்டு, வெளியில் இருக்கும் உலகிற்காக எதைச் செய்யவும்

அச்சப்பட்டுக் கொண்டு ... ஏன்? எப்போதோ சில தவறுகளை நாங்கள் செய்துவிட்டதால். இத்தனை வருடங்களாக நீங்கள் அவர்களுக்கு போதித்து வந்த சோம்பலுக்குப் பிறகும், இந்த இளைஞர்கள் இன்னமும் வீழ்ச்சியடைந்து விடவில்லை. நான் அவர்களிடம் பேசப்போகிறேன். உங்களால் உண்டாகியிருக்கிற எல்லா தவறான விளைவுகளையும் அரை மணி நேரத்தில் சரி செய்யப்போகிறேன்."

அந்த முதியவர் மற்றவர்களைப் பார்த்து, "பார்த்தீர்களா, இப்படித்தான் நடக்கும் என்று முன்பே எனக்குத் தெரியும். இவரைத் தடுத்தே ஆக வேண்டும். என்ன செய்யலாம்?"

எனது பையை எடுத்து கொண்டு, அறையின் குறுக்கே விரைந்து வெளியேறினேன்.

□ □ □ □ □

அந்தப் பெண் இன்னமும் வெளியேதான் நின்று கொண்டிருந்தாள். என்னை எதிர்பார்த்திருந்ததைப் போல் சிறிய தலையசைப்போடு என்னை அழைத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள்.

பனித்தூறலும் இருட்டும் கலந்த இரவு. குடியிருப்புகளின் இடையே வளைந்தும், நெளிந்தும் செல்கிற குறுகலான பாதையில் நடந்தோம். சில வீடுகள் சிதைந்தும் நொறுங்கியும் இருப்பதாகத் தோன்றியது. சற்று பலமாக நான் தள்ளினாலே உடனே உதிர்ந்து போய்விடக்கூடும் எனப்பட்டது.

அந்தப்பெண் எனக்கு சில தப்படிகள் முன்னால் சென்று கொண்டிருந்தாள். அவ்வப்போது திரும்பி என்னைப் பார்த்துக் கொண்டாள். "வெண்டி சந்தோஷப்படப் போகிறாள். நீங்கள் கடந்து செல்லும்போதே அவள் கவனித்துவிட்டாள். இன்னேரம் அவள் சந்தேகப்பட்டது சரியென்று அவளுக்குத் தெரிந்துவிட்டிருக்கும். நான் வெளியே வந்து இவ்வளவு நேரம் ஆகிவிட்டிருப்பதால் உங்களை அழைத்துக்கொண்டுதான் வருவேன் என ஊகித்து ஒரு பெரிய கூட்டத்தையே கூட்டிவிட்டிருப்பாள்."

"டேவிட் மாகிஸ்க்கு கூட இந்த மாதிரி வரவேற்பு தந்தீர்களா?"

"ஆம். அவர் வந்ததால் எங்களுக்கெல்லாம் உண்மையிலேயே பெரும் மகிழ்ச்சி."

"அதெல்லாம் அவருக்கு மிகவும் திருப்தியாக இருந்திருக்கும். அவருக்கு எப்போதுமே தனது முக்கியத்துவம் குறித்து அதீத உணர்வுண்டு."

"மாகிஸ் சுவாரஸ்யமானவர் என்று வெண்டி சொல்வாள். ஏன், நீங்கள் கூட முக்கியமானவர் என்றுதான் சொல்வாள்".

நான் சற்று யோசித்தேன்.

"பாருங்கள், பல விஷயங்கள் குறித்து இப்போது என் மனதை மாற்றிக் கொண்டிருக்கிறேன். அப்போது நான் பேசிக் கொண்டிருந்தவற்றையே இப்போதும் பேசப்போகிறேன் என்று வெண்டி எதிர்பார்த்துக்கொண்டிருந்தால் ஏமாற்றம் அடைவாள்."

நான் சொன்னது காதில் விழாத பாவனையில் ஆனால் முனைப்போடு, குவியல் குவியலான வீடுகளுக்கு இடையே என்னை அழைத்துக்கொண்டு வேகமாக நடந்து சென்றாள்.

சிறிது நேரம் கழித்து, எங்களுக்கு பத்து, பதினைந்து தப்படிகளுக்குப் பின்னால் தொடர்ந்து வருகிற காலோசையை உணர்ந்தேன். முதலில் எங்களைத் தாண்டிப் போகத் தயங்கி பின்னாலேயே வருகிற யாரோ கிராமவாசி என்று நினைத்தேன். ஆனால் ஒரு தெரு விளக்கின் கீழ் அவள் நின்று திரும்பி பார்த்ததும், நானும் நின்று திரும்பி பார்த்தேன். கரிய மேலங்கி அணிந்த ஒரு நடுத்தர வயதினன்

இருட்டிலிருந்து வெளிப்பட்டு எங்களை நோக்கி வந்தான். நெருங்கியதும் தனது கைகளை வெளியே எடுத்து நீட்டி, புன்னகைக்காமல் என்னிடம் கைகுலுக்கிவிட்டு, "எனவே ... நீங்கள் வந்துவிட்டீர்கள்," என்றான்.

இந்த மனிதரை எனக்குத் தெரியும் என்பதை உணர்ந்தேன். இவனுடைய பத்து வயதில் நான் பார்த்தது. அப்புறம் சந்திக்கவேயில்லை. இவன் பெயர் ரோஜர் பட்டன். நாங்கள் கனடாவில் இரண்டு வருடங்கள் இருந்தபோது இவன் என் வகுப்பில் கூடப்படித்தவன். பிறகு நாங்கள் இங்கிலாந்து திரும்பியவுடன் தொடர்பு அறுந்து போய்விட்டது. ரோஜர் பட்டனும் நானும் ஒன்றும் அந்த அளவிற்கு நெருக்கமான நண்பர்களெல்லாம் இல்லை. அவன் அப்போதெல்லாம் ஒரு நோஞ்சானாக இருந்ததாலும், அவனும் இங்கிலாந்தைச் சேர்ந்தவன் என்பதாலும் எப்போதும் என் பின்னால் அவன் சுற்றிக் கொண்டிருப்பான். அதற்கு பிறகு அவனைப் பார்க்கவோ, கேள்விப்படவோ இல்லை. இப்போதும் தெருவிளக்கின் வெளிச்சத்தில் அவனது தோற்றத்தை கவனிக்கையில் இடைப்பட்ட வருடங்கள் அவன் மேல் கருணையாக இருந்திருக்கவில்லை என்பது தெரிந்தது. தலை வழுக்கை விழுந்து, முகம் சூம்பிப் போய், களைத்து, தொய்ந்து போயிருந்தான்.

"ரோஜர்," என்றேன், "இந்த யுவதியின் நண்பர்களைச் சந்திப்பதற்காக சென்று கொண்டிருக்கிறேன். என்னை வரவேற்பதற்காக அவர்கள் கூடியிருக்கிறார்கள். இல்லாவிட்டால் உன்னை வந்து சந்தித்திருப்பேன். இப்போது கூட தூங்குவதற்கு முன், அடுத்து செய்ய வேண்டியதாக நினைத்துக் கொண்டிருந்தேன். இந்த இளைஞர்களோடு எவ்வளவு நேரமானாலும் சரி, அடுத்ததாக ரோஜரின் வீட்டுக்கதவை வந்து தட்டுவேன்."

"கவலைப்படாதீர்கள்," என்றான் ரோஜர், நடந்து கொண்டே. "உங்களுக்கு எவ்வளவு வேலை இருக்கும் எனத் தெரியும். ஆனால் நாம் பேசவேண்டும். அந்தக் காலத்தை அசைபோட வேண்டும். என்னை நீங்கள் கடைசியாக பள்ளியில் பார்த்தபோது, ஒரு கோழைப்பிறவியாக நான் இருந்தேன். ஆனால் உங்களுக்குத் தெரியுமா, பதினான்கு வயது ஆகும்போது உண்மையிலேயே முரட்டுத்தனமாக நான் மாறிவிட்டேன் - ஒரு தலைவன் மாதிரி. ஆனால் அப்போது நீங்கள் கனடாவைவிட்டுப் போய்விட்டீர்கள். ஆனால் அடிக்கடி எனக்குத் தோன்றும், பதினைந்து வயதில் நான் இருந்தபோது நாம் சந்தித்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று. நமக்கிடையில் பல விஷயங்கள் வேறுமாதிரி ஆகியிருக்கும், நிச்சயமாக."

இவன் இதைச் சொல்லிக் கொண்டிருக்கையில், எனக்குள் ஞாபகங்கள் அலையடித்தன. அந்தக் காலங்களில், ரோஜர்பட்டன் என்னை ஆராதித்துக் கொண்டிருந்தான். அதற்கு பதிலாக அவனை ஓயாமல் சீண்டிக் கொண்டு, இம்சைப்படுத்தி வந்திருக்கிறேன். ஆனால் எங்களுக்கிடையே ஒரு வினோதமான உறவும் இருந்தது. அவனை நான் தொல்லைபடுத்திக் கொண்டிருப்பதெல்லாம் அவன் நல்லதிற்கே என்று அவனை நம்ப வைப்பேன். மைதானத்தில் வந்து கொண்டிருந்தபோது திடீரென அவன் வயிற்றில் குத்தியிருக்கிறேன். பள்ளி வரந்தாவில் ஒரு முறை அவன் கையை பின்புறமாக முறுக்கி, முதுகு வரை கொண்டு வந்து அவனை அழவைத்திருக்கிறேன். அவனை தைரியசாலியாக்குவதற்காகவே இப்படியெல்லாம் செய்வதாக சொல்லியிருக்கிறேன். இதனாலெல்லாம் விளைந்த பயன் என்னவெனில், என்னைப் பார்த்து அவனை மலைத்து நிற்க வைத்ததுதான். இவை அனைத்தும் இந்த களைத்துப் போன மனிதன் என்னைத் தொடர்ந்து நடந்து வந்து

கொண்டிருக்கையில் ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தன.

என் நினைவின் தொடர்ச்சியை அறிந்தவன் போல் ரோஜர்பட்டன் தொடர்ந்தான். "உண்மைதான். நீங்கள் அந்த அளவிற்கு முரட்டுத்தனமாக என்னிடம் நடந்து கொண்டிருக்காவிட்டால் பதினைந்து வயதில் நான் அப்படி மாறியிருக்கமாட்டேன். இருந்தாலும் சில வருடங்கள் கழித்து நாம் சந்தித்துக் கொண்டிருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று வியந்திருக்கிறேன். அப்போது என்னைப் பார்த்திருக்க வேண்டுமே..."

குறுகலான, வளைந்து நெளிந்த சந்துகளுக்கிடையே மீண்டும் நடக்கத் துவங்கினோம். அவள் இன்னமும் எங்களுக்கு முன்னால் தான் வழிகாட்டிக்கொண்டு சென்று கொண்டிருந்தாள், ஆனால் இப்போது வேகமாக. அவ்வப்போது தெருமூலைகளில் அவள் உருவம் பளிச்சிட்டு மறைந்தது, கவனமாக இருக்காவிட்டால் அவளைத்தவறவிட்டுவிடுவோம் என உறைத்தது.

ரோஜர் பட்டன் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தான் "இப்போது நீங்கள் எவ்வளவு மோசமான நிலையில் இருக்கிறீர்கள்! உங்களோடு ஒப்பிட்டால் நான் ஒரு தடகள வீரன் மாதிரி இருக்கிறேன். நீங்கள் உண்மையில் ஒரு அழுக்குப் பரதேசிதான், இல்லையா? ஆனால் நீங்கள் போய் ரொம்ப காலத்திற்கு அப்புறமும் உங்களை மகா புருஷனாக துதித்துக் கொண்டிருந்தேன், தெரியுமா? ஃப்ளெட்சர் இப்படி செய்வாரா? நான் இதைச்செய்வதைபார்த்தால் ஃப்ளெட்சர் என்ன நினைப்பார்? எனக்கு பதினைந்து வயதானபிறகுதான் உங்களைப்பற்றி சரியாக புரிந்து கொள்ள முடிந்தது. அப்புறம்தான் எனக்கு உங்கள்மேல் கோபம் வர ஆரம்பித்தது. இப்போதுகூட அதையெல்லாம் அவ்வப்போது நினைத்துக்கொள்வேன். ஆம், ஒரு முழு போக்கிரிதான் அவன், என்னை விட கொஞ்சம் சதை போட்டு, உயரமாக, தன்னம்பிக்கையோடு இருந்தான்... அதைவைத்து என்னை ஏய்த்துக் கொண்டிருந்தான்... இப்போது திரும்பிப்பார்த்தால், எப்படியெல்லாம் என்னை இம்சித்த போக்கிரி நீங்கள்...! இப்போதும் நீங்கள் அப்படியே இருப்பதாக ஒன்றும் நான் சொல்ல வரவில்லை. எல்லோரும் மாறுகிறோம். அதை மட்டும் ஒப்புக்கொள்கிறேன்."

"எவ்வளவு காலமாக இங்கே வசிக்கிறாய்?," என்றேன் பேச்சை மாற்ற.

"ஓ, ஏழு வருடங்களாகவோ, என்னவோ. உங்களைப் பற்றி இங்கே நிறைய பேசுவார்கள். சில சமயம் அவர்களிடம் நாம் சிறுவயதில் ஒன்றாகப் பழகியதைப் பற்றிச்சொல்வேன். 'ஆனால் என்னை அவருக்கு நினைவிருக்காது' என்பேன், தன் காலடியில் சுற்றிக் கொண்டிருந்த ஒரு நொஞ்சான் பயலை ஏன் நினைவில் வைத்திருக்க வேண்டும்? ஆனாலும் இங்கே இருக்கும் இளவயதினர் உங்களைப்பற்றி நிறைய பேசிக் கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக உங்களைப் பார்த்திராதவர்கள் உங்களைத் துதித்துக்கொண்டிருக்கிறார்கள். அதைப்பயன்படுத்திக் கொள்ளத்தான் நீங்கள் வந்திருப்பதாக நினைக்கிறேன், இருந்தும் உங்களை குறைசொல்ல மாட்டேன், சுயமரியாதையை நீங்கள் காப்பாற்ற வேண்டியிருக்கிறது இல்லையா?"

திடீரென்று நாங்கள் நடப்பதை நிறுத்தினோம். எதிரே வெட்டவெளியில் வயல்கள். திரும்பிப்பார்க்கையில் கிராமத்திலிருந்து வெளியே வந்துவிட்டிருப்பது தெரிந்தது. கடைசியாகத் தெரிந்த வீடுகள் கூட தொலைவில் இருந்தன. நான் பயந்தமாதிரியே அந்தப்பெண்ணை தவறவிட்டாகிவிட்டது. கொஞ்சநேரமாகவே அவளைப்பின்

தொடராமல் வந்திருக்கிறோம்.

எதிரே நிலவு உதித்துக்கொண்டிருந்தது. ஒரு பரந்த வயல்வெளியின் ஓரத்தில் நாங்கள் நிற்பது நிலவெளிச்சத்தில் தெரிந்தது. இந்த வெளிச்சத்தில் கண்களுக்குத் தெரிகிற எல்லைக்கப்பாலும் இந்த வயல்வெளிகள் பரந்திருக்கும் என நினைத்தேன்.

ரோஜர்பட்டன் என்பக்கம் திரும்பினான், நிலவின் ஒளியில் அவன் முகம் மென்மையாக, அன்பாகத்தெரிந்தது.

"இருந்தும் அனைத்தையும் மன்னிக்க வேண்டிய காலம் ஒன்று வருகிறது. கவலைப்படவேண்டாம். கடந்த கால்த்தின் சில விஷயங்கள் கடைசியில் நமக்கே வந்துசேரும் என்று உங்களுக்கே தெரியும், ஆனால் சிறுவயதில் செய்தவற்றுக்கு எப்படி நாம் இப்போது பொறுப்பாக முடியும்?"

"நீ சொல்வது சரிதான்," என்றபடி திரும்பி இருட்டைச் சுற்றிப்பார்த்தேன்," இப்போது பார். எனக்கு எங்கே செல்வது என்று தெரியவில்லை. எனக்காக சில இளைஞர்களும், யுவதிகளும் அவர்கள் வீட்டில் காத்துக்கொண்டிருக்கிறார்கள்; இன்னேரம் எனக்காக கணப்பு மூட்டி, சூடாக தேநீர் தயாரித்து வைத்திருப்பார்கள். வீட்டில் தயாரித்த கேக்குகளும், சூப்புகளும் கூட இருக்கும். அந்தப் பெண் என்னை அழைத்துக்கொண்டு உள்ளே நுழைந்ததும் அவர்கள் அனைவரும் கைதட்டி என்னை வரவேற்பார்கள். சுற்றிலும் புன்னகை பூத்த, நேசம் மிகுந்த முகங்களாக இருக்கும். அதுதான் எங்கேயோ எனக்காக காத்திருக்கிறது. எப்படிச் செல்வது என்றுதான் தெரியவில்லை,"

ரோஜர் பட்டன் தோள்களைக் குலுக்கிக்கொண்டான். கவலைப்படாதீர்கள், சுலபமாகப் போய்விடலாம். ஆனால் அந்தப்பெண் உங்களிடம் சொன்னதைப்போல வெண்டியின் வீடு அவ்வளவு கிட்டத்தில் இல்லை. அதற்கு வெகுதூரம் போக வேண்டும். உண்மையில் பேருந்தைப் பிடித்துத்தான் செல்ல வேண்டும். அதற்கே கூட இரண்டு மணி நேரம் ஆகும். கவலைப்படாதீர்கள், எங்கே பேருந்து நிற்கும் என்று காட்டுகிறேன்."

அவன் திரும்பி கிராமத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான். அவன் பின்னால் நான் நடக்கும் போது, நேரம் அதிகமாகிவிட்டதால் என் தோழனுக்கு தூக்கம் தலைப்படுகிறது என்று புரிந்து கொண்டேன். வீடுகளுக்கிடையே சில நிமிடங்கள் நடந்ததும் கிராமத்தின் மையப்பகுதிக்கு வந்து சேர்ந்தோம் அதை ஒரு கிராம சதுக்கம் என்று கூற இயலாதபடி சிறியதாகவும், அசிங்கமாகவும் அந்த இடம் இருந்தது. ஓர் ஒற்றைத் தெருவிளக்கு, அதைச்சுற்றி கொஞ்சம் புல்வெளி, அதன் மங்கலான வெளிச்சத்தில் அங்கே சில கடைகள் மூடப்பட்டு இருப்பது தெரிந்தது. எதுவும் அசங்காமல் முழுமையான நிசப்தம், தரைக்கு மேலே இலேசாக கவிந்திருக்கும் பனிப்படலம்.

ரோஜர் பட்டன் நின்று அந்த இடத்தைச் சுட்டிக்காட்டினான்." இங்கே நீங்கள் நின்றுகொண்டிருந்தால் பேருந்து வரும், நான் சொன்னதைப்போல அது ஒரு சிறிய பயணமல்ல, இரண்டு மணி நேரமாவது ஆகும். ஆனால் கவலைப்படாதீர்கள். உங்களுடைய இளைஞர்கள் காத்திருப்பார்கள், இப்போது அவர்களுக்கும் நம்பிக்கை கொள்கிறமாதிரி நிறைய விஷயங்கள் இல்லை,"

"வெகு நேரம் ஆகிவிட்டது. நிச்சயமாக பேருந்து ஏதாவது வருமா?" என்று கவலையோடு கேட்டேன்.

"ஆம்! ஆனால் நீங்கள் காத்திருக்க வேண்டும். இறுதியில் பேருந்து ஒன்று வரும்." அவன் ஆதரவாக என் தோளைத் தொட்டான். "இங்கே நின்று கொண்டிருப்பது மிகவும் தனியாகத்தான் இருக்கும். ஆனால் பேருந்து வந்தவுடன்




உங்களது புத்துணர்வு அதிகரிக்கும், நம்புங்கள். ஓ... பேருந்து எப்போதுமே சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் தருவது. அது பிரகாசமாக விளக்கேற்றப்பட்டிருக்கும், எப்போதுமே உற்சாகமான மக்கள் நிரம்பி இருப்பார்கள். சிரித்துக் கொண்டு, ஜோக் அடித்துக் கொண்டு, ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டு .... உள்ளே நீங்கள் ஏறியதும் கதகதப்பாகவும், சௌகர்யமாகவும் உணர்வீர்கள். மற்ற பயணிகள் உங்களுடன் உரையாடுவார்கள். உங்களுக்கு உண்ணவோ, பருகவோ ஏதாவது தருவார்கள். பாட்டு கூட பாடிக்கொண்டிருக்கலாம். அது ஓட்டுநரைப் பொறுத்த விஷயம். சில ஓட்டுநர்கள் பாடுவதை ஊக்குவிப்பார்கள். சிலர் அனுமதிக்க மாட்டார்கள். சரி ஃப்லெட்சர், உங்களைப் பார்த்தது நல்லதாகப் போயிற்று."

நாங்கள் கை குலுக்கிக் கொண்டோம். அவன் திரும்பி நடக்க ஆரம்பித்தான். இரண்டு வீடுகளுக்கு இடையில் இருட்டில் அவன் மறைவதைப் பார்த்துக் கொண்டு நின்றேன்.

நான் திரும்பி நகர்ந்து அந்தத் தெருவிளக்கின் கீழ் பையை வைத்தேன். தூரத்தில் ஏதாவது வாகனத்தின் சத்தம் கேட்கிறதாவென கவனித்தேன்.

இரவு கடும் நிசப்தமாக இருந்தது. ஆனாலும் ரோஜர் பட்டனின் பேருந்து பற்றிய வர்ணனை என்னை வெகுவாக உற்சாகப்படுத்தியிருந்தது. மேலும் எனது இந்தப்பயணத்தின் முடிவில் எனக்குக் கிடைக்க போகும் வரவேற்பையும் நேசத்துடன் ஒளிரும் இளம் முகங்களையும் நினைத்துப்பார்த்தேன். எனக்குள் எங்கோ வெகு ஆழத்தில் இருக்கும் நன்நம்பிக்கை தூண்டி விடப்பட்டுள்ளதை உணர்ந்தேன்.

A Village After Dark - *Kazuo Ishiguro. (The New Yorker, May 21, 2001)*



மஆரி

கவிதைகள்

மனிதனையும் கடவுளையும் பற்றி: மஆரியின் (கி.பி.973-1057)
தியானங்கள் அரபிக் கவிதைத் தொகுப்பிலிருந்து
ஆங்கிலத்தில்: **ஆர். ஏ. நிகல்சன்** (1868-1945)

ஆங்கிலத்திலிருந்து தமிழில்: **நாகூர் ரூமி**

பாரசீகக் கவிஞர் உமர் கய்யாமைப் பற்றி நல்ல அபிப்ராயம் வைத்திருக்கும் வாசகர்கள் அனைவரும் அவசியம் அறிந்துகொள்ள வேண்டிய அரபு கவிஞர் மஆரி. எந்த காரணத்திற்காக உமர் கய்யாம் தனது நாட்டு பாரசீக மக்களிடம் ஆரம்பத்தில் பிரபலமாகவில்லையோ அதே காரணத்திற்காகத்தான் மஆரியும் தனக்கு முந்தைய கவிஞரான முதனப்பி-யைவிட பிரபலமடையவில்லை. ஏனென்றால் மஆரி கட்டுப்பாடுகள் எதையுமே எற்றுக்கொள்ளாத ஒரு சுதந்திரமான முஸ்லிமாக இருந்தார். பலதரப்பட்ட விஷயங்களையும் பரந்து விரிந்த ஒரு தத்துவார்த்த அடிப்படையில் உள்வாங்கக் கூடியதாக அவருடைய பகுத்தறிவு மனம் இருந்தது. அது ஒரு ஒழுங்கற்ற முறையில் இருந்தாலும். உமர் கய்யாமுடையதைப் போலவே மஆரியின் கலாச்சாரமும் பரந்துபட்டதாக இருந்தது. அவருடைய கவிதைகளை வாழ்வு, மனித சமுதாயம், தத்துவம், சமயம் என பல பிரிவுகளில் ஆர்.ஏ. நிகல்சன் வகைப்படுத்துகிறார்.

ஒரு முக்கியமன விஷயத்தில் மஆரி உமர் கய்யாமிடமிருந்து வேறுபடுகிறார். அதாவது மஆரி ஒரு ஆன்மீக கவிஞராகவும் இருக்கிறார். உமர் கய்யாம் இந்த வாழ்வின் அவலங்களிலிருந்து தப்பிக்க புலன் இன்பங்களுக்குள் தஞ்சம் புகுந்து தப்பித்துக் கொள்வார். ஆனால் மஆரியோ ஒரு துறவு நிலை ஞானியின் வாழ்வை தேர்ந்தெடுத்துக் கொள்கிறார். அவருடைய தனிப்பட்ட வாழ்வை வைத்து அவருடைய ஆளுமையின் இந்த அம்சத்தை எளிதில் விளங்கிக் கொள்ளலாம். ஆரம்ப காலத்திலேயே அவருக்கு கண் பார்வை போய்விட்டது. ஆனாலும் அவர் இதையும் மீறி வியத்தகு முறையில் கல்வியைப் பெற்றுக்கொண்டார். எனினும் இந்த விஷயம் வாழ்க்கையின் மீது ஒரு கசப்பை ஏற்படுத்தத்தான் செய்தது.

தனக்கான வாழ்வையும் வளத்தையும் தேடி அவர் தன் இளம் வயதில் கலீஃபப் பெரு நகரமான பாக்தாதுக்குச் சென்றார். ஆனால் அங்கு அவர் பெற்ற அனுபவங்கள்

அவருடைய கனவுகளையெல்லாம் தகர்ப்பதாக இருந்தது. அவர் வாழ்வின் மீது கொண்டிருந்த கசசப்புணர்வை அது பரிபூரணப்படுத்தவே உதவியது. இந்த விரக்தி நிலையின் காரணமாக மனிதனை வேதனையில் இருந்து காக்கின்ற வழி குழந்தை பெற்றுக்கொள்ளாமல் இருப்பதுதான் என்று கருதினார். அவருடைய வாழ்வின் பிற்பகுதி, படிப்பதும் எழுதுவதும் கற்றுக் கொடுப்பதுமாக கழிந்தது.

அவருடைய படைப்புகளாக மூன்று கவிதைத் தொகுதிகளையும் ஒரு உரைநடை தொகுதியையும் **என்சைக்ளோ பீடியா ப்ரிட்டானிகா** 99 குறிப்பிடுகிறது. அவை முறையே: 1. ஸக்த் அல் ஜந்த், 2. லாஸூம் மாலம் யல்ஸம் அல்ல லுஸூமியத், 3. ரியாலத்தல் குஃப்ரான், 4. அல் ஃபுசுல் வல் கய்த். முதல் தொகுதி அவருக்கு புகழைத்தேடித் தந்தது. நான்காவது உரைநடை படைப்பு திருக்குர் ஆனைக் கிண்டல் செய்யும் தொனியில் அமைந்திருந்தது.

தியானங்கள் என்று நிகல்சனால் பெயரிடப்பட்ட படைப்புகள் மூலமாகவே மஆரியை மேற்கத்திய உலகம் அறிந்து கொண்டது. அதிகாரம், பாரம்பரியம் ஆகியவற்றைவிட அறிவையும் மனசாட்சியையும் மேலாக நினைத்த ஒரு ஞானத்தெளிவு பெற்ற முஸ்லிமுடைய வாழ்க்கையின் மீதான மறைமுகமான விமர்சனமாக அவை இருந்தாலும் மிகவும் கூர்மையானதாகவும் சக்தியுடையதாகவும் செறிவு கொண்டதாகவும் இருந்தன அவருடைய கவிதைகள்.

கீழ்வரும் மொழி பெயர்ப்புகளில் சந்தம், எதுகை, மோனை, அளவு போன்ற விஷயங்களில் சுதந்திரம் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. சாறுகள் பழங்களாக்கப் பட்டுள்ளன. அனால் ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது கவிஞரின் சிந்தனை மற்றும் வெளிப்பாடு ஆகியவற்றுக்கு துரோகம் செய்யாத முறையிலேயே மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

1.

மறுமையின் பெட்டிக்குள்
ஆழப்புதைந்து காத்திருக்கின்றன நிகழ்வுகள்
பாதுகாப்பு வானவர்கள்
மூடியைத் தூக்குவதற்காக.

காலத்தை கவிதையாகக் கொண்டிருக்கும்
நித்தியப் படைப்பாளன்
நெய்ய வேண்டியதில்லை அதற்குள்
புதுமையற்ற செயற்கையான சந்தத்தை.

இப்படியே கழிகின்றன இரவுகள்
குரல்கள் ஊமைகளாக.
வேகமாகவோ மெதுவாகவோ
வருவதென்னவென்று தெரியாமல்.

★ ★ ★

அல்லாஹ்வின் விருப்பம் கொண்டு
பாதுகாப்பாய்
பாதைவிலகாமல் காலத்தின் முனைகள்
இறங்குகின்றன நம்மீது.

அவன் கொடுத்ததெல்லாம் கடனே
திரும்ப எடுத்துக்கொள்ள:
அவன் பரிசில் மகிழ்ந்து வாழ்கின்றன
மனிதர்களின் முட்டாள்தனங்கள்.

2

நான் தேர்ந்தெடுத்துக் கொள்ளவில்லை
பிறப்பையோ முதுமையையோ வாழ்வையோ;
நேற்று தரவிரும்பாத எதை இன்று தரப்போகிறது?
இங்குதான் நான் தங்கவேண்டும், விதியின் இரு கைகளாலும் கட்டப்பட்டு

போகவும் முடியாது, போகச்சொல்லும் வரை.
இருட்டு மாயையிலிருந்து எனக்கு வழிகாட்டும் நீங்கள்
பொய் சொல்கிறீர்கள்-உங்கள் கதை குழப்பவே செய்கிறது
மாற்ற முடியுமா நீங்கள் வெட்கமுடன் முத்திரை குத்துவதையெல்லாம்?
மாற்ற முடியாததால்தானே அவை அப்படி உள்ளன?

3

சில இதயங்கள் லேசாக எடுத்துக்கொள்கின்றன கட்டளைகளை
எனினும் யாருக்கு அழிவு என்று எவருக்குமே தெரியாது .
முஹம்மதின் குர்ஆனும், ஆமாம், மூஸாவின் தவ்ராத்தும்
மர்யத்தின் மகனின் இன்ஜீலும் தாவூதின் ஸபூரும்[1]
அவை தடுத்தவை பற்றி தேசங்களுக்கு அக்கறையில்லை, அழிந்தது அவைகளின்
அறிவு வீணாக, மக்களோடு சேர்ந்து.
மனிதன் தங்க இரண்டு வீடுள்ளது, வாழ்க்கையோ
நிற்காமல் கடந்து செல்லும் பாலத்தைப் போல் உள்ளது.
வீட்டை விட்டுவிட்டு கல்லறையில் கூடுகிறது கும்பல்!
இருப்பில் இருப்பதில்லை இல்லமோ இடுகுழியோ.

4

காலம் காலமாக காரிருளே கவிழ்ந்திருந்தது.

எந்த விடியலும் எழுப்பவில்லை ஒரு சூரியனை.
எல்லாம் மாறுகிறது, இம்மை மட்டும் நிற்கிறது அசையாமல்
தன் அனைத்து மேற்கத்திய மற்றும் கிழக்கத்திய நிலங்களுடன்.

எழுதுகோல் இயங்க, கட்டளை நிறைவேறிவிட்டது
உலர்ந்து விட்டது மை எழுதுந்தாளின்மீது. விதியின் விருப்பப்படி
பாதுகாவலர்களால் காப்பாற்ற முடியவில்லை கிஸ்ராக்களை
பிரபுக்களால் கல்லறையிலிருந்து சீசரை.

5

இஷ்டத்துக்கு சுற்றி வந்தவனை
இடுகுழிக்குள் போ என்று ஒரு நாள் சொல்லுவது
மனிதனுக்கு மிகவும் துன்பமானதே.
எத்தனை முறை நமது பாதங்கள் மிதித்துள்ளன மண்ணுக்குக் கீழே
பெருமை கொண்ட புருவத்தைப்போல மிருதுவானவரின் எலும்புகளைப்போல!

6

நான் வரவேற்கிறேன் இறப்பின் வருகையையும் புறப்பாட்டையும்
தன் ஆடைகளினால் என்னை மூடிவைப்பான் என்பதால்
இவ்வுலகம் எப்படிப்பட்ட இடமெனில்
இங்கிருப்பவர் இருக்கும் அறிவனைத்தும் பெற்றால்
அழமாட்டார் இங்கு இல்லாதவருக்காக.
எண்ணிலடங்காத் துன்பங்கள் எத்தனை பேரை கொண்டு வந்தன
தன் கைகளின் கீழும் நெஞ்சோடணைத்தும்!
வகிர்ந்தெடுக்கிறது, வெட்டிச் சாய்க்கிறது தன் வாட்களைக் கொண்டு நம்மை
வீட்டிலேயே நம்மை ஈட்டி கொண்டு குத்துகிறது,
நிச்சயச் சிறகுகள் கொண்ட அம்புகளால்.
செல்வமும் செல்வாக்குமாய் அதன் பரிசுகளை வென்றவர்கள்
கொஞ்ச தூரம்தான் தள்ளி நிற்கின்றார்கள்
பரிசுகளை இழந்தவர்களை விட்டும்.

★ ★ ★

என்ன வினோதம், எவ்வளவு விரும்புகிறான் மனிதன்
துர் நாற்றத்தின் தாயை[3], திட்டிக்கொண்டே!

7

காலம் உன் வெற்றிக்கு உதவுமானால் விரைவில்
உன் எதிரியையும் பழி தீர்க்க வைக்கும்.

பகலின் உணர்வுகள் எடுத்துக்கொள்ளலான [illegible] எழுதப்படும் [illegible]
[illegible]

5

உன் ஆகாயம் பெரிது. போதும்போதாத தக்கக்கொள்கிறாய் நீ
உறங்கியும் கொள்கிறாய் உலகமாய் உறைவிடத்தில்.
இரவு முழுவதுமான பயணத்தில்.
இவ்வுலகில் தந்தேவார் அனைவருக்கும் உள்ளது வாயப் பற்றிய நம்பிக்கை
என்றும் வாழும் மனிதர் அனைவரும் எப்போதும் நல்ல வாலிகமே
கிழக்கிலும் மேற்கிலும் எங்கு நோக்கிலும் குரல்கள்
நாங்கள் சாய்ந்து கொள்ளும் கூடுகளை சொத்தாக எண்ணிக்கொண்டு.

6

என் ஆசைகளின் முத்துக்களை நான் கோர்க்கும்போது
ஐயகோ. வாழ்வின் குறுகிய நூல் போதவில்லை
பெரிய பெரிய பக்கங்களும் போதவில்லை
மனிதனின் முழு நம்பிக்கைகளையும் கொள்ள.
மனித வாழ்வோ ஒரு மகாகொதிப்பு.



10

பல இனங்களின்மீது பரவியது பகலவனின் வெளிச்ச வலை
அவிழ்த்தது தன் முத்துக்களை, ஒரு நூல் கூட விட்டுவிடாமல்.
இந்த பயங்கர உலகம் செயலற்றிருக்கிறது.
அவன் பெற்றெடுக்கும் அனைவரும்
அந்தக் கோப்பையிலிருந்தே குடிக்கிறார்கள்.
கேள்விகளின் தேர்வு: எது வேண்டும் உனக்கு?
மடிந்து வீழ்தலா வேதனையான வாழ்வா?

11

தனது கேவலமான நோக்கங்களுக்காக
ஏறுகிறான் மேடை
மறு உயிர்ப்பில் நம்பிக்கை இல்லாவிடினும்
செத்தோரை அச்சுறுத்துகிறான்
நிலைகொள்ளாமல் ஸ்தம்பிக்க வைக்கும் தன்
கனா நாளைப் பற்றிய கதையை அவிழ்த்துவிடும்போது.

12

உன் சிந்தனை தூண்டிய நெருப்பு
உன்னருகில் ஒரு பாதையைக் காட்டியது
உன்னை வழி நடத்த
ஒளியை நீ தேடிக்கொண்டிருக்கும்போது.
மாயமந்திர வல்லுனர்களும், மந்திரவாதிகளும்,
குறிசொல்பவர்களும் ஏமாற்றுக்காரர்கள்,
இவர்களெல்லாம் மறைக்கின்றனர் நேர்மையற்ற சுயநலப் பேராசையை.
வயதான பிச்சைக்காரனின் கைகள் நடுங்கினாலும்
வாங்கிக்கொள்ள மறுப்பதில்லை எப்போதுமே.

13

சத்தியத்தை மறைக்கிறது செல்வம்,
கொப்பளிக்கிறது வெளியில் குறைபாடுகளின் குரல்
அனைத்துப் பிரிவுகளும் அகமகிழ்கின்றன ·
அதற்கு மரியாதை செய்ய.
முஸ்லிமுக்கு கிடைக்கவில்லை ஜகாத்'
பள்ளிவாசலை விட்டு செல்கிறான் பக்கத்து தேவாலயத்துக்கு.

14

யார் காப்பாற்றுவார் என்னை
பொருத்தமற்று புகழும் நகரத்தில் வசிப்பதினின்றும்?
பகைக்காரன், பக்திமான், பண்டிதன்: இப்படிப்பட்டது எனது புகழ்
எனினும் எனக்கும் அவற்றுக்கும் இடையில் எத்தனையோ தடைகள்.

★ ★ ★

அறியாமைக்குக் கடன்பட்டிருந்தேன், அறிஞனாக அறியப்பட்டபோது
சிலரால்-அதிவினோதமில்லையா என் நிலை?
உண்மையில் நாமனைவரும் உருப்படாதவர்கள்
உன்னதமானவனல்ல நானோ அவர்களோ.

வாழ்வின் இறுக்கமான பிடியை பொறுக்கமுடியவில்லை எனது உடம்பால்
அழிவையும் எப்படி அணைக்க வைப்பது?
ஓ மரணத்தின் மாபெரும் பரிசுகளே! அவன் கொண்டுவருகிறான்
வலியின் பின் வசதியையும்
சப்தத்தின் பின் நிசப்தத்தையும்.

15

நின்று வணங்கு நாயனை பகலில்
பொறுத்துக்கொள் கவனிப்பை, முடியும்போது.
உனக்குப் பிடித்த உணவை உன்
தாராளக் குதிரைக்கும் தந்து சமபங்களிப்பதே சரியானது.
மின்னும் எண்ணெயும் உலர்ந்த திராட்சையும்
உனக்கு முன்னால் வைத்துக்கொள் உணவாக
குறைவு என்றாலும் அதுவே நிறைவு.
குடிப்பதற்கொரு களிமண் ஜாடி போதும்
விரும்பாய் நீ வெள்ளியிலோ தங்கத்திலோ.
கோடையில் உன் நிர்வாணம் மறைக்கும்
துணிகளே போதும்; பருத்த நாட்டுத்துணி பனிக்காலத்துக்கு.
நான் தடைசெய்கிறேன் நீ நீதிபதியாயிருப்பதை
பள்ளிவாசல்களில் பிரசங்கமும் வேண்டாம்
தொழுகையையும் நடத்த வேண்டாம்;
தளபதியாகவும் வேண்டாம் சாட்டையுடன்
வீரன் வெளிப்படுத்தும் வாளைப்போல.
நெருங்கிய உறவினரிடமும் நல்ல நண்பரிடமும்
நேசிக்கவில்லை நான் இவற்றை.
இஷ்டப்படி செலவு செய் உனது ஆன்மாவை
அல்லது காப்பாற்று.

அவமானமாயுள்ளது சிலரது ஆதரவு:

ஒப்படைத்துவிடு உன்னை
அவனது நித்திய அக்கறைகளிடம்
அவனைப் பற்றிய பயங்களினால் அலங்கரிக்கட்டும்
உன் மனைவி தன்னை
முத்துக்களையும் மரகதங்களையும் மிஞ்சி மின்ன.
அனைத்தும் புகழ்கின்றன அவனை:
காகங்களின் கரைசலும் வெட்டுக்கிளியின் வாய்மொழியும்
பறைசாற்றுகின்றன அவன் புனிதத்தை.
வை உனது கண்ணியத்தை
எல்லாப்புகழும் உள்ள இடத்தில்:
மலை நாட்டுக் காற்றைத் தேடும்
பள்ளத்தாக்கில் வசிப்பவனல்ல அவன்.



16

இம்மையின் சிறப்புகள் வெளிப்படும் மனிதகுலமே-
தலைவர்கள் தங்களுக்குள் நிறுவும் ஆட்சியெல்லாம்
வளரும் அல்லது தேயும் நிலவின் காட்சிகள்தான்.
பிள்ளைகளின்மீது கொண்ட பாசத்தை
செய்கையினால் நிறுவமுடியுமெனில்
ஞானத்தின் ஒவ்வொரு சொல்லும்
பிள்ளை பெறாமலிருக்கச் சொல்லும்.

17

இரண்டு விதிகள் நம்மை இறுக்கிப்பிடிக்கின்றன இன்னும்
நாளையும் நேற்றும்
இரு பெரும் பாத்திரங்கள் இறுகத்தழுவுகின்றன
நம்மைச் சுற்றி-காலமும் இடமும்.

இயக்கியவனின் இலக்கு என்னவென
இயம்பும்போதெல்லாம் நாம்
கேட்கிறது ஒரு பதில் குரல்
மனிதர்கள் சொல்லாத சொல்.

18

குற்றத்தை தண்டிப்பது தவறு
குற்றவாளிகளாக விதிக்கப்பட்டிருப்பின்.
தாதுப்பொருளை கடவுள் படைத்தபோது
அவருக்குத் தெரியும் ஒரு காலத்தில்
அவைகள் காரணமாகும்

இரும்புச் சேணம் பூட்டப்பட்ட, இரும்பு லாடமடிக்கப்பட்ட
குதிரைகளின் பிடரிகளிலிருந்து
ரத்தத் துளிகள் சொட்டும் வாட்களாய் மின்னும் என.

19

இவ்வுலகில் வடிவம் தரும் உடல்
ஒரு ஜாடி; ஏமாந்து விடாதே ஆன்மாவே!
நீ தேன் ஊற்றும் கோப்பை மலிவானது
உள்ளே உள்ளதோ விலை மதிப்பற்றது.

20

சிரிக்கிறோம் நாம், நமது நகைப்போ நகைப்புக்குரியது.
நாம் அழலாம், கடுமையாகவே
கண்ணாடியைப் போல சிதறடிக்கப்படுகிற நாம்
திரும்ப வடிவமைக்கப் படாமலே.

[1] தவ்ராத், சபூர், இன்ஜீல், ஃபுர்கான் (குர்ஆன்) ஆகிய நான்கு வேதங்களும் முறையே தாவூது (டேவிட்), மூஸா (மோஸஸ்), ஈஸா (மர்யத்தின் மகன் என்று குர் ஆனில் குறிப்பிடப்படும் ஏசு கிறிஸ்து), முஹம்மது ஆகியவர்களுக்கு அருளப்பட்டதாக இஸ்லாம் கூறுகிறது.

[2] கிஸ்ரா-பாரசீக (ஈரான்) மன்னர்

[3] துர் நாற்றத்தின் தாய்-இந்த உலகம்.

ஒருவரை திட்டும்போதோ புகழும்போதோ ஒன்றின் தந்தை என்றோ தாய் என்றோ சொல்வது அரபியர்களின் பழக்கம். முட்டாள் என்று திட்டுவதற்கு பதிலாக முட்டாள்தனத்தின் தந்தையே (யா அபூ ஜஹில்) என்பார்கள். ஒருவர் ரொம்ப தூசிபடிந்த மேனியாக இருந்தால், தூசியின் தந்தையே (யா, அபா துராப்) என்பார்கள். அந்த சொல்வழக்கு முறையில்தான் இந்த உலகம் துர் நாற்றத்தின் தாய் என்று வர்ணிக்கப்படுகிறது கவிஞரால். தந்தை என்பதும் தாய் என்பதும் காரணகர்த்தா, பிறப்பிடம் என்ற அர்த்தங்களில் பயன்படுத்தப் படுகிறது.

[4] ஜகாத்-ஏழை வரி

ழியோர்ழ் பிராசன்ஸ்

(1921-1981)

பிரெஞ்சிலிருந்து தமிழில்

அருள் நாயக்கர்

பிரான்சின் புகழ்பெற்ற பாடகரான இவர் ஒரு சிறந்த கவிஞராகவும், இசையமைப்பாளராகவும் இருந்தார். நூற்றுக்கணக்கான இவருடைய பாடல்கள் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு இசை ரசிகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றவை.

இவர் பாடல்களில் கடவுள், மதம், சாவு, நட்பு எனப் பன்முகப்பார்வை இடம் பெற்றிருக்கும். எப்பொருளைப் பாடினாலும் அதில் மெல்லிய நகைச்சுவை இயல்பாக இணைத்திருப்பதை உணரலாம்.

வெட்டியான்

கல் நெஞ்சம் எனக்கில்லை என்று கடவுளுக்குத்தான் தெரியும்
மனிதர்கள் மரிப்பதில் விருப்பம் எனக்கில்லை
ஆனால் அவர்கள் மரிப்பதை நிறுத்திவிட்டால்
நான் பசியில் வாடிவிடுவேன்.
நான் ஓர் ஏழை வெட்டியான்!
இறந்தவர் முதுகில் இரையைத் தேடும்
இரக்கமில்லாதவனாக இருப்பவர் என்னை நினைக்கிறார்கள்
மனமின்றியே நான் அவர்களைப் புதைக்கிறேன் என்பதையும்
என் மனதை அது பெரிதும் வதைக்கிறது என்பதையும்
ஏனோ அவர்கள் நினைப்பதில்லை.
நான் ஓர் ஏழை வெட்டியான்!
என் உணர்ச்சியின் மத்கை உடைக்குந்தோறும்
என் நண்பர்களின் ஏளனம் அதிகமாகிறது
சமயத்தில் உன்னிடம் சவக்களை தெரிகிறது
என்கிறார்கள் அவர்கள்
நான் ஓர் ஏழை வெட்டியான்!

எதுவும் நிலையில்லை என்றுதான்
எப்பொழுதும் நான் எண்ணி வந்திருக்கிறேன்



முற்றிலும் இயற்கை என்று என்னால் அதை
எப்பொழுதும் இறப்பை எதிர்கொள்ள இயன்றதில்லை
நான் ஓர் ஏழை வெட்டியான்!

உன்னைப் பார்த்ததும் இல்லை; பழக்கமும் இல்லை
இருந்தாலும் இறந்த என் இனியவனே!
உனக்கு என் இறுதி வணக்கம்.
நிலத்தின் அடியில் நீ பரமனைப்
பார்க்க நேர்ந்தால்
உன்னைப் புதைக்க நான் தள்ளிய கடைசிப்பிடி மண்
என்னை வாட்டியதை மட்டும்
எடுத்துச் சொல்லிவிடு!
நான் ஓர் ஏழை வெட்டியான்!

உலகின் கடைசி இரவு



ரே பிராட்பரி

தமிழாக்கம்

காலசுப்ரமணியம்

'இதுதான் உலகத்தின் கடைசி இரவு என்று உனக்குத் தெரிந்தால், நீ என்ன செய்வாய்?

'என்ன செய்வேனோ? நிஜமாகவே கேட்கிறீர்களா?'

'ஆமாம் நிஜமாகத்தான்.'

'தெரியவில்லை. அதைப் பற்றி நினைத்துப் பார்த்ததில்லை?' அவன் கொஞ்சமாக காஃபி ஊற்றினான். பின்னணியில், ஹரிகேன் விளக்குகளின் பசுமை ஒளியில், இருபெண் குழந்தைகள் பார்லரின் கம்பளத்தின் மேல், தடை விளையாட்டு ஆடிக் கொண்டிருந்தார்கள். காஃபி தயாரிக்கப் படும்போது எழும், எளியதும் தூயதுமான வாசனை, மாலைநேரக் காற்றில் பரவியிருந்தது சரிதான். ஆனால் அதைப்பற்றி யோசிக்கத் தொடங்குவது நல்லது, என்று அவன் சொன்னான்.

'நிஜமாகத்தான் சொல்கிறீர்களா!'

அவன் தலையசைத்தான்.

'யுத்தமா?'

அவன் தனது தலையைக் குலுக்கினான்.

'ஹைட்ரஜன் குண்டோ, அணுகுண்டோ இல்லையே?'

'இல்லை.'

'இல்லாவிட்டால் கொடிய தொற்றுநோய்க் கிருமிகளைப் பரப்பும் போரா?'

'இவற்றில் எதுவும் இல்லை, என்று தனது காஃபியை மெதுவாகக் கலக்கிக் கொண்டே அவன் சொன்னான். ஆனால், பொதுவாக இப்படிச்சொல்லலாம்-ஒரு புத்தகம் மூடப்படுகிறது!

எனக்குப் புரிந்ததாகத் தோன்றவில்லை.'

'இல்லை, உண்மையில் எனக்கும்தான் புரியவில்லை; சும்மா, ஒரு உணர்வு இது. சிலவேளையில் இது என்னைப் பயமுறுத்துகிறது. சிலசமயம் நான் பயமேயில்லாமல் அமைதியாயிருக்கிறேன்.' அவன் சிறுமிகள் பக்கமாக ஏறிட்டுப் பார்த்தான். அவர்களது பொன்னிறக் கூந்தல், விளக்கு வெளிச்சத்தில் மினுங்கின. எதையும் உன்னிடம் நான் இதுவரை சொல்லவில்லை. நான்கு இரவுகளுக்கு முன்பு இது முதலில் நிகழ்ந்தது.'

'என்ன?'

'ஒரு கனவு கண்டேன். எல்லாமே முடியப்போவதாக கனவு கண்டேன். அப்படி ஒரு குரல் சொன்னது; எனக்குத் தெரிந்த மட்டில், நான் அறிந்த எந்த ஒரு குரலாகவும் அது இருக்கவில்லை. ஆனால் எப்படியும் ஒரு குரல்! அது சொன்னது, இங்கே, பூமியில் எல்லாம் முடிவு பெறும் என்று. அடுத்தநாள் நான் அதைப்பற்றி அதிகம் நினைத்திருக்க வில்லை. ஆனால் ஆபீஸ் போனபோது, சாயந்தரத்துக்கு இடையில், ஸ்டான் வில்லிஸ் ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்தேன். "உன்னுடைய ஞாபகத்தில் வைத்துக் கொள்ள ஒரு சில்லறை விஷயம், ஸ்டான்," என்று ஆரம்பித்தேன். அவன் சொன்னான், "முந்திய இரவு ஒரு கனவுகண்டேன்" என்று. அந்தக் கனவை அவன் சொல்வதற்கு முன், அது என்ன என்று எனக்குத் தெரிந்தது. நானே அதை அவனுக்குச் சொல்லி யிருக்கலாம். ஆனால் அவன் தான் எனக்குத் தன் கனவைச் சொன்னான். நான் கேட்டேன்.'

'அதே கனவு?'

'அதேதான். அதே கனவை நானும் கண்டதாக ஸ்டானிடம் சொன்னேன். அவன் ஆச்சரியப்பட்டதாகத் தெரியவில்லை. உண்மையில் ஆசுவாசமே அடைந்தான். நடப்பது நடக்கட்டும் என்றபடி, பிறகு நாங்கள் ஆபீஸுக்குள் சுற்றத் தொடங்கினோம்-முன் தீர்மானம் எதுவுமில்லாமல், ஒரு சுற்று நடந்து வருவோம் என்று சொல்லிக் கொள்ளாமல், நாங்களாகவே சும்மா நடந்து போனோம். எல்லா இடத்திலும் ஜனங்கள், தமது டெஸ்கை தமது கைகளை அல்லது ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டோம். சிலரிடம் பேசிப்பார்த்தேன். ஸ்டானும் அப்படியே செய்தான்.'

'அவர்களும் அதே கனவைக் கண்டிருக்கிறார்கள்?'

'எல்லோருமே, மாற்றமேயில்லாமல் அதே கனவு.'

'அதை நீங்கள் நம்புகிறீர்களா?'

'ஆமாம். இவ்வளவு திடமாக நான் எப்போதமே இருந்ததில்லை.'

'அப்படியானால், எப்போது இது முடியும்? அதாவது, இந்த உலகத்தைத்தான் சொல்கிறேன்!'

'எப்போதாவது, நமக்கு இரவாக இருக்கும்போது, உலகத்தைச் சுற்றியும் இருள் சூழ்ந்து வரும் வேளையில் இது நடக்கும். எல்லாம் முடிய, இருபத்தி நாலுமணிநேரம் ஆகலாம்.'

தமது காஃபியைத் தொடாமலே அவர்கள் கொஞ்ச நேரம் அமர்ந்திருந்தார்கள். பிறகு மெதுவாக அதை எடுத்து, ஒருவரையொருவர் நோக்கியபடி அருந்தினார்கள்.

'நாம் இதற்குத்தான் பெறுமதியுடையவர்களா?' என்றாள் அவள்.

'தகுதி பற்றிய விஷயம் அல்ல இது. இப்படி விஷயங்கள் முடிவதில்லை என்பதுதான்... நீ இதுபற்றி விவாதம் செய்யக்கூட முன் வரவில்லை என்பதையும் கவனித்தேன். ஏன்?'

'எனக்கும் ஒரு காரணம் இருக்கிறது என்று நினைக்கிறேன்,' என்றாள் அவள்.

'ஆபீஸிலுள்ளவர்கள் எல்லோரும் கொண்டிருந்தது போலவா?'

அவள் மெதுவாகத் தலையாட்டினாள். 'எதையும் சொல்ல எனக்கு இஷ்டம் இருக்கவில்லை. முந்திய இரவு நடந்தது. இந்த பிளாக்கில் உள்ள பெண்கள் தமக்குள் இதைப்பற்றி . இன்று பேசிக்கொண்டார்கள். அவர்கள் கனவு கண்டது ஒரு தற்செயலான விஷயம் என்றுநினைத்தேன்.' அவள் மாலைத் தினசரியை எடுத்துப் பிரித்தாள். 'செய்தித்தாளில் இதுபற்றி எதுவுமேயில்லை!'

'எல்லோருக்கும் தெரியுமே! எனவே அதைப் போடத் தேவையில்லை.'

அவளைக் கவனித்தபடியே அவன் தனது சேரில் சாய்ந்து கொண்டான். பயமாயிருக்கிறதா?

'இல்லை. பயப்படுவேன் என்றுதான் எப்போதும் நினைத்திருந்திருக்கிறேன். ஆனால் இப்போது பயம் இல்லை.'

'எனக்குத் தெரியவில்லை. விஷயங்கள் தர்க்க முறைப்படி நடப்பதாக நாம் உணரும்போது, நாம் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. இதுதானே தர்க்கத்தின் வழிமுறை. நாம் வாழ்ந்து வரும் விதத்தில் இதைத்தவிர வேறு விதமாக நடந்து விட முடியாதுதான்.'

'மிக மோசமாக நாம் வாழவில்லை, இல்லையா?'

'இல்லை, பெரிய அளவுக்கு நல்லமாதிரியாகவும் நாம் வாழ்ந்துவிடவில்லை. இதுதான் விஷயம் என்று நம்புகிறேன் -உலகத்தின் பெரும் பகுதி, தாராளமான விதத்தில் மிக மோசமான காரியங்களில் சுறுசுறுப்பாக இருக்கும் போது, நம்மைத்தவிர நாம் வேறு எது பற்றியும் அதிகம் கவலைப்படாமலிருக்கிறோம்!'

பார்லரில் சிறுமிகள் சிரித்துக் கொண்டிருந்தார்கள். 'இந்த மாதிரி வேளையில், வீதிகளில் ஜனங்கள் அலறிக்கொண்டிருப்பார்கள் என்றே நான் எப்போதும் நினைத்தேன்.'

'நாம் அப்படி நினைக்கவில்லை. நிஜமான விஷயத்துக்கு யாரும் அலறமாட்டார்கள்.'

'உங்களுக்குத் தெரியுமா? உங்களையும் குழந்தைகளையும் தவிர நான் வேறு எதையும் இழக்கப் போவதில்லை. உங்கள் மூவரையும் தவிர, நகரங்களையோ எனது வேலையையோ அல்லது எதையுமே நான் விரும்பியதில்லை. ஒரு விஷயத்தையும் நான் இழக்கப் போவதில்லை. ஒரு வேளை, சீதோஷ்ண மாறுதலை, அது உஷ்ணமாக இருக்கும் போது ஒரு கிளாஸ் ஐஸ்வாட்டர் குடிப்பதை, தூங்கும் சுகத்தை, நான் இழக்கலாம்... அதுசரி, நாம் இங்கு இப்படி உட்கார்ந்துகொண்டு இப்படியே பேசிக்கொண்டிருக்கப் போகிறோமா என்ன?'

'வேறெதுவும் செய்வதற்கு இல்லை.'

'ஒருவேளை அப்படி யுமிருக்கலாம். செய்வதற்கு ஏதாவது.

இருந்தால் நாம் அதை செய்வோம். உலக சரித்திரத்திலேயே, ஒவ்வொரு வரும், இரவில் தான் என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்பதை அறிந்தபடியே செய்து கொண்டிருப்பது இது முதல்தடவை என்று நினைக்கிறேன்.'

'எல்லோரும் வேறு என்ன செய்யமுடியும்? இந்த முன் இரவில், வரும் சிலமணி நேரங்களில்... எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது!'

'படத்துக்குப் போகலாம், ரேடியோ கேட்கலாம், டி.வி.பார்க்கலாம், சீட்டு விளையாடலாம், குழந்தைகளைப் படுக்கைக்கு இட்டுச் செல்லலாம், எப்போதும் போல நாமும் படுக்கப் போகலாம்...'

'எப்போதும் போல என்பதில் ஏதோ ஒரு வகைப் பெருமிதம் இருப்பதாகப்படுகிறது.'

கொஞ்ச நேரம் அவர்கள் அப்படியே அமர்ந்திருந்தார்கள். பிறகு தனக்கு இன்னொரு காஃபியை அவன் ஊற்றிக் கொண்டான். 'இன்று இரவுதான் என்று எப்படி நீ நம்புகிறாய்?'

'அப்படி என்றால்?'

'போன நூற்றாண்டிலோ, ஐந்து நூற்றாண்டு, பத்து நூற்றாண்டுகளுக்கு முன்போ, மற்றொரு இரவில் ஏன் இது நிகழவில்லை?'

'ஒருவேளை, 1969. அக்டோபர் பதினைந்து அப்போது வரலாற்றில் ஆகவில்லையாயிருக்கலாம். இப்போது அப்படி ஆயிருக்கிறது. அவ்வளவுதான். மற்ற எந்தத் தேதியும் கொண்டிருந்ததை விட மிகவும் அர்த்தம் பொதிந்ததாக இந்தத் தேதி இருப்பதாலாயிருக்கலாம். உலகம் முழுதும் விஷயங்கள் எப்படியிருக்க வேண்டுமோ அப்படி இருக்கும் வருஷமாயிருப்பதாலாயிருக்கலாம். அதனால்தான் இதுவே முடிவு என்றாகியிருக்கிறது.

'இன்றிரவு சமுத்திரத்துக்கு மேலாக இருவேறு திசைகளிலும் குண்டெறியக் கூடிய விமானங்கள், திட்டப்படி சென்றும்கூட, நிலத்தை அடையாமல் போகலாம்.'

'ஏன் என்ற கேள்விக்கு இதுவும் ஒரு காரணம்.

'நல்லது,' என்று எழுந்தான் அவன். என்ன ஆகப்போகிறது? பாத்திரங்களைக் கழுவலாமா?'

அவர்கள் பாத்திரங்களைக் கழுவினார்கள். கவனமாகவும் நேர்த்தியாகவும் எடுத்து அடுக்கினார்கள். எட்டு முப்பதுக்கு குழந்தைகள் படுக்கையில், அவர்களது படுக்கையறையில் இருந்த சிறிய விளக்குகளை எற்றி விட்டு, கதவைக் கொஞ்சமாய் ஒருக்களித்துச் சாத்தினார்கள்.

'எனக்குள் ஒரு சமுசயம்,' என்று படுக்கையறையிலிருந்து வெளிவந்தபடியே கணவன் சொன்னான். தனது புகைக்கும் குழாயுடன் பின்னால் திரும்பிப் பார்த்தபடி அங்கேயே சற்று நின்றிருந்தான்.

'என்ன?'

'கதவு முழுசாக மூடியிருப்பது நல்லதா அல்லது வெளிச்சம் கொஞ்சம் உள்ளே போகும்படி, சிறிதே திறந்தபடி வைப்பது நல்லதா?

'குழந்தைகளுக்குத் தெரியுமா என்று நான் யோசிக்கிறேன்'

'இல்லை, தெரிந்திருக்காது.'

அவர்கள் அமர்ந்தார்கள். தினசரிகளைப் படித்தார்கள். பேசினார்கள். கொஞ்சம் வானொலி இசை கேட்டார்கள். பிறகு-

கணப்பருகில் சேர்ந்தாற்போல் அமர்ந்து, மரக்கரிகளின் தீக்கங்குகளைக் கவனித்தபடியிருந்து, கடிகாரம் பத்து முப்பது, பதினொன்று, பதினொன்று முப்பது என்று அடிப்பதைக் கேட்டிருந்தார்கள்.

'நல்லது,' என்றான் அவன் கடைசியில்.

அவன் தனது மனைவியை நீண்ட நேரம் முத்தமிட்டான்.

'எப்படியானாலும், நாம் ஒருவருக்கொருவர் நன்றாகவே நடந்து வந்திருக்கிறோம்.'

'அழவேண்டும் போலிருக்கிறதா?' என்று கேட்டான் அவன்.

'தேவையில்லை என்று நினைக்கிறேன்.'

வீடு முழுதும் அவர்கள் உலா வந்தார்கள் - விளக்குகளை அணைத்தபடி. படுக்கை அறைக்குள் நுழைந்து, இரவின் குளிர்ச்சியான இருட்டில் நின்றபடி ஆடைகளைக் களைந்தார்கள். போர்வைகளைத் திருப்பிவிட்டு விலக்கினார்கள். 'பெட்ஷீட்கள் மிகவும் சுத்தமாகவும் மெதுவாகவும் இருக்கின்றன.'

'எனக்கு களைப்பாயிருக்கிறது.'

'நம் எல்லோருக்குமே களைப்புதான்'.

படுக்கைக்குள் புகுந்து, மல்லாந்து படுத்தார்கள்.

'ஒரு நிமிஷம்,' என்று எழுந்தாள் அவள்.

படுக்கையிலிருந்து வெளிப்பட்டு, சமையலறைக்குள் அவள் செல்வதை அவன் செவிமடுத்தான். சிறிது நேரத்துக்குப்பின் அவள் திரும்பினாள். 'ஸிங்கில் தண்ணீரை ஓடவிட்டு விட்டு மறந்து விட்டேன்,' என்றாள்.


இது ஏதோ மிகவும் தமாஷாக இருந்ததால் அவன் சிரித்தான்.

அவளும் தாம் சொன்னதில் இருந்த தமாஷை அறிந்தவளாக அவனுடன் சேர்ந்து சிரித்தாள். தம் கைகளைக் கோத்துக் கொண்டும் தம் சிரங்களைச் சேர்த்துக் கொண்டும், குளிர்ச்சியான அந்த இரவுப் படுக்கையில் அவர்கள் சாய்ந்து படுத்திருந்தார்கள்.

குட்நைட்,' என்று சற்றுநேரம் கழித்து, அவன் கூறினான்.

'குட்நைட்', என்றாள் அவள்.

(தற்கால அமெரிக்க இலக்கியத்தின் முக்கிய படைப்பாளிகளுள் ரே பிராட்பரியும் ஒருவர். திரைக்கதைகள், தொலைக்காட்சி படைப்புகள் மற்றும் பாடல்கள் என ஐநூற்றுக்கும் மேற்பட்டவைகளை வெளியிட்டுள்ளார். இவரது குறிப்பிடத்தக்க எழுத்துக்களாக The Martian Chronicles, The Illustrated man, Fahrencheit 451 மற்றும் Somthing wicked this way comes ஆகியவற்றைச் சொல்லலாம் அமெரிக்க இலக்கியத்திற்கான இவரது பங்களிப்பைப் பாராட்டி 'தேசிய புத்தக அறவமைவு' 2000 ஆம் ஆண்டு பதக்கம் வழங்கி கௌரவித்தது.)



ஜியார்க் டிராக்கல்

கவிதைகள்

ஆங்கிலம் வழி தமிழில்
சீனு. தமிழ்மணி

அந்தியில் என் உள்ளம்

அந்தியில் வெளவால் ஒலி கேட்கிறது
இரு கருங்குதிரைகள் துள்ளி குதிக்கின்றன புல்வெளியில்
சிவப்பு மேப்பிள் இலைகள் சலசலக்கின்றன
நாடோடிக்குச் சாலையோரச் சிறுசத்திரம் தெரிகிறது
மதுவின் சுவை வால்நட் பருப்பின் சுவை
மேன்மை: அந்தி வேளையில் காட்டில்
குடியில் தள்ளாடியபடி நடப்பது
கருத்தகிளைகளில் துயர்த்தின் மணிகள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன
பனித்துளிகள் அவன் முகத்தில் விழுகின்றன

இரவு

அசையாதவனின் மூச்சு வான்நீலத்தில்
அருளில் உறைந்த விலங்குமுகம்
கல்லின் அமைதி அதன் ஆற்றல்
இரவுப்பறவையின் முகமூடி அமைதியாக
ஓர் ஒற்றைஒலியில் மறைகின்றன மும்முனைகள்
எலாய்! வெளிறிய நீலநீரின் மீது பேசாது
சாய்கிறது உன் முகத்தோற்றம்
நீ உண்மையின் அமைதியான ஆடி
தனிமையிலிருப்பவனின் தந்தக் கன்னங்களில்
தோன்றுகிறது வீழ்ந்த தேவதையினுடைய அழகின் எதிரொலிப்பு

புலம்பல்

உறக்கமும் இறப்பும் இருண்ட கழுகுகள்
இரவு முழுக்கத் தலையைச் சுற்றிப் பாய்கின்றன
அழியாமையின் குளிர்அலை
மாந்தனுடைய பொன்னாலான உருவத்தை விழுங்குகிறது
கொடிய படிப்பாறைகளின் மீது
அவனுடைய கருஞ்சிவப்பு உடல் நொறுங்கி விட்டது
கருத்த குரலின் புலம்பல்கள்

கடலின் மேல்
துயரப்புயலின் உடன்பிறந்தாளே
கவனி, மிரளும் படகொன்று மூழ்குகிறது
விண்மீன்களுக்கு அடியில்,
இருளின் அமைதியான முகம்



எக்காளங்கள்

வெட்டிவிடப்பட்ட வில்லோ
மரங்களினடியில்
வெளிறிய குழந்தைகள் விளையாட்டு
இலைகளின் ஒலி எக்காளங்களின் குரல்
தேவாலயத்தின் முற்றம் நடுங்குகிறது
மேப்பிள் இலைகளின் துயரத்தில் மோதும் அரக்குப்பதாகைகள்
வயல் நெடுக ஆட்கள் ஆளற்ற ஆலைகள்
அல்லது மேய்ப்பர்கள் இரவில் பாடுகிறார்கள்
அவர்களின் தீயிடும் வளையத்திற்குள்
அடியெடுத்து வைக்கின்றன மான்கள்
சோலையின் தொன்மையான துயரம்
கருஞ்சுவர் ஒன்றிலிருந்து பாய்கிறார்கள் நாட்டியக்காரிகள்
அரக்குப் பதாகைகள், சிரிப்பு, பித்தநிலை, எக்காளங்கள்

மாலை

நாயகர்களின் இறந்த உருவங்களால்
முழுமையாக நிரம்பியிருக்கிறது நிலவு
அமைதியான காடுகள்
அரிவாள் நிலவு
சுற்றிலும் வார்க்கப்பட்ட பாறைகள்
மென்மையான காதலின் அணைப்பில்
புகழ்மிக்கக் காலங்களின் மாயத்தோற்றங்கள்
இந்த நீல ஒளிபாய்கிறது
நகரத்தை நோக்கி
அழுகும் இனம் ஒன்று அங்கு வாழ்கிறது
உணர்வுகள் அற்று தீமையில்
தங்களுடைய வெண்வழித்
தோன்றல்களுக்காக
இருண்ட எதிர்காலத்தை உருவாக்கியவாறு
மலைஏரியின் வெறுமைப் படிகத்தினுள்
பெருமூச்சுவிடும்
நிலவு போர்த்திய நிழல்கள்

ஜியார்க் டிராக்கல் (1887-1914) ஆஸ்திரியாவில் உள்ள சார்ல்ஸ்பர்க் நகரத்தில் பிறந்தவர். ஜெர்மன் மொழியில் எழுதியவர். 1914இல் ஆஸ்திரியப் படையில் சேர்ந்த இவர் மூன்று மாதங்களுக்குப் பின் போலந்தில் உள்ள படைத்துறை மருத்துவமனையில் தற்கொலை செய்து கொண்டார். இவருடைய கவிதைகள் **ஹெல்டர்ரின், ரேம்போ** ஆகியோரின் கவிதைகளுக்கு இணையாகக் கருதப்படுகிறது. மெய்யியலறிஞர் **லூட்விக் விட்கென்ஸ்டைன்** இவருடைய கவிதைகளை 'மேதையின் குரலில் அமைந்தவை' எனக் கூறியுள்ளார்.


ஃபெர்னான்டோ பெஸோவா



(1888-1935)
(போர்ச்சுகீசிய மொழிக் கவிதை)

ஆங்கிலம் வழி தமிழில்
எஸ். பாலச்சந்திரன், கண்ணன். M

ஒரு பயணத்தைக் கைவிடுவதற்காக
அனைத்துப் பயணங்களையும் கைவிடுவதற்காக
பிரபஞ்சத்தையே கைவிடுவதற்காக
நான் ஒரு சிகரெட்டைப் பற்றவைக்கிறேன்
யதார்த்தமே,
நீ இன்று போய் நாளை வா
இன்றைக்கு இது போதும்
முழுமுதலான நிகழே நீ சிறிது ஓய்வெடு
இப்படி இருப்பதற்கு இல்லாமலிருப்பதே மேல்



புது எழுத்து 7

தனிச்சுற்றுக்கு மட்டும்